# சமூக இயல்

மலர் 1 ஆனி 1963 இதழ் 1

* இலங்கையின் முகத் தோற்றம் :
பேராசிரியர் கா. குலரத்தினம்

* இலங்கையிற் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் வளர்ச்சி :
எஸ். இராசரத்தினம்

* இலங்கையிற் பாராளுமன்ற அமைப்பின் வளர்ச்சி :
கலாநிதி ஏ. ஜெயரத்தினம் வில்சன்

* விஜயபாகு ஒரு விடுதலை வீரன் :
பேராசிரியர் கா. நீலகண்டசாஸ்திரி

* தென்மேற் பருவக் காற்றின் சடுதியான பிறப்பு :
கலாநிதி ஜோர்ஜ் தம்பையாபிள்ளை

* ஈழ வரலாற்று மரபு
கா. இந்திரபாலா

ஆசிரியர் :

வெ. நடராசா
இலங்கைப் பல்கலைக் கழகம்
பேராதனை.

விலை :
ரூபா
ஒன்றே கால்

# ஆசிரியர் குழு

நிர்வாக ஆசிரியர் :

வெ. நடராசா

உதவி ஆசிரியர்கள் :

கே. ரூபமூர்த்தி
கு. க. சேயோன்
என். பத்மநாதன்
எஸ். பத்மநாதன்

ஆலோசகர் குழு :

பேராசிரியர் கா. குலரத்தினம்
கலாநிதி ஜோர்ஜ் தம்பையாபிள்ளை
கலாநிதி எச். ஏ. டி. எஸ். குணசேகரா
திரு. என். பாலகிருஷ்ணன்
திரு. கா. இந்திரபாலா
திரு. எஸ். இராசரத்தினம்
கலாநிதி சு. வித்தியானந்தன்

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 1423

# சமூக இயல்

❋

*—* சமூக அறிவியல் சஞ்சிகை *—*

புவியியல், பொருளியல், அரசியல்,

வரலாறு, தமிழ்.

❋

ஆசிரியர் :

வெ. நடராசா,

[redacted]

இலங்கைப் பல்கலைக் கழகம்.

பேராதனை.

மீன்பாடும் தேன்நாட்டில் மிளிரும்
உயர் கலைக்கூடம்

# கலாநிதி புத்தகசாலை

கதையா—நாவலா—பாடசாலைப் புத்தகங்களா
உடனே மட்டுநகர் மெயின் வீதியில் உள்ள
**23-ம் இலக்கப் புகழ்சான்ற ஸ்தாபனத்திற்கு**
விஜயஞ் செய்யுங்கள்

கிளை : 50, மெயின் வீதி, கல்முனை.

**KALANIDHI BOOK DEPOT,**
**23, MAIN STREET, BATTICALOA.**
**Phone : 406.**

---

## 'ஆசீர்' வெளியீடுகள்

| | |
|---|---|
| **படிமுறைக் கணிதம் :** | |
| 2 ஆம் வகுப்புக்குரியது | 1-20 |
| 3 ,, ,, | 1-40 |
| 4 ,, ,, | 1·75 |
| 5 ,, ,, | 2-00 |
| 6 ,, ,, | 2-00 |
| 7 ,, ,, | 2-00 |
| 8 ,, ,, | 4-00 |
| **படிமுறை அட்சர கணிதம் :** | |
| 6 ஆம் வகுப்புக்குரியது : | 1-60 |
| 7 ,, ,, | 1-60 |

| | |
|---|---|
| பயிலுந் தமிழ் 1-ம் பாகம் | 2-00 |
| புது உலக சரித்திரம் | 7-75 |
| G.C.E. பாஷைமாதிரி வினா | 1-25 |
| சம்ஸ்கிருத இலக்கணப் பயிற்சி புத்தகம் | 6-00 |
| இலங்கைப் பூமிசாஸ்திர வினாவிடை | 1-25 |
| சம்ஸ்கிருத சிஷாப் பிரதம சோபானம் | 1-00 |
| 'விவேகி' வருட சந்தா | 4-00 |

ஆசிர்வாதம் அச்சகம்—புத்தகசாலை,

கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 274.

## நன்றி மறப்பது நன்றல்லவே ...

**பயன்மிகு ஆலோசனைகள் தந்துதவிய**

கலாநிதி சு. வித்தியானந்தன்
திரு. கா. இந்திரபாலா
,, சு. ஸ்ரீ கணேஸ்வரன்
கலாநிதி ஏ. ஜெயரத்தினம் வில்சன்
திரு. க. கைலாசபதி

**விளம்பரம் பெற உதவிய**

திரு. ஐ. குணசிங்கம்
,, கே. பே. மூர்த்தி
,, கு. க. சேயோன்

**இறுதிமட்டும் என்னுடன் துணை நின்ற**

திரு. செ. கதிர்காமநாதன்
,, மு. வி. ஆசீர்வாதம் (பதிப்பக அதிபர்)
,, ஜோக் யோசவ் (பதிப்பக போர்மன்)

என்போருக்கு
எமது உள்ளங் கனிந்த நன்றி.

சமூக இயல்

மலர் 1 ஆனி 1963 இதழ் 1

# அன்ன யாவினும் மேன்மைகள் கோடி — ?

தமிழ் வளர்ப்போம்; 'எழுது கோல் உறங்காது' உழைப்போம் என்றெல்லாம் மேடைக் கூச்சல்கள் எழுப்பும் காலம் இது. ''ஆக்க இலக்கியங்கள்'' என்ற அடைமொழிக்குள் சிறு கதையையும் கவிதையையும் உள்ளடக்கி, தமிழ் வளர்த்துவிட்டோ மென்று எழுத்தாளர்கள் தமது தமிழ் வளர்த்த முற்போக்கில் முறுவலிக்கும் காலம் இது!

சிறு கதையிலே பத்து வருடம் பின்தங்கியதாகப் பகீரதன் கூறியதற்காக, நாமா தரங் கெட்டவர்கள் என வாது புரிந்த நமது வாதத் திறமையை நாமே மெச்ச வேண்டிய இந்த 'மகத்தான சாதனை' நேரத்திலே—'

நாம் சொல்லுகிறோம்—ஒரு வார்த்தை!
பாரதி சொல்லுகிறார்—அதே வார்த்தை!

''புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை...''

எனவே தான் சொல்லுகிறோம், பாரதியின் குரலில் நின்று சொல்லுகிறோம்...

'' பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்;

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை ;
திறமான புலமை யெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.''

கட்சிகள் பேசி; பழம் இலக்கியங்களையும், தெரியாத 'சாமி'களின் வாழ்க்கைக் குறிப்புகளையும் அலசி ஆராய்ந்து ''புதுக் கண்டு பிடிப்புகள்'' எனப் பெருமை பேசும் நமது அறிஞர்களுக்கு, நாம் சொல்லுகிறோம்...

தமிழின் பாரம்பரியத்தை ; வேண்டிய
மட்டும் தலையிற் தூக்கி 'காவடி' ஆட்டம்

ஆடுவதால் தமிழ் வளர்ந்து விடாது ! சங்க காலத்திலே, அரசியல் தத்துவங்கள் இருந்தன என 'ஆண்டான் அடிமை'ப் பிரச்சினைகளை இனம் காட்டுவதால் தமிழ் வளர்ந்து விடாது ! அப்படியானால் —

தமிழ் இன்னும் வளரவேண்டிய நிலையில் இருக்கிறதென்கிறோம் நாங்கள் !

வரலாறு–புவியியல்-அரசியல்–அறிவியல்–நுட்பஇயல் போன்ற துறைகளிலும் தரமான எத்தனை நூல்கள் நம்மிடம் உண்டு ? எத்தனை தரமான ஆசிரியர்கள் வாழுகிறார்கள் ?

மேற்கே —

அடுக்கடுக்காக, மலையாக எத்தனையோ நூல்கள் ! எண்ணற்ற அறிஞர்கள் !

நம்மவரிடையே —

எண்ணிச் சொல்லலாம் ! மேற்கிலுள்ளவர்கள் ''தமிழா — ? அதில் என்ன மேன்மைக் கலைகள் இருக்கிறது'' எனக் கேலிச்சிரிப்புச் சிரிக்கக் கூடியளவிற்கு ; 'தலைகுனிந்து' ஆமாம்... ''மெல்லத் தமிழினிச் சாகும் — அந்த மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்'' என்று சொல்லலாம்...!

ஆனால் — அப்படி ஆகக்கூடா தென்று தான் நாங்கள் விரும்புகிறோம்...! 'பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொல்லி' — வைக்காத புத்தம் புதிய கலைகள் நம் தமிழில் வளரவேண்டு மென்றுதான் நாங்கள் விரும்புகிறோம்...!

இந்த விருப்பத்தின் பலனுகவே, சமூக இயலை ஆரம்பிக்கிறேம். வளரவேண்டியதோ இமயம்! நமது முயற்சியோ சிறு துரும்பு...! ஆனுல் நமது பல்கலைக் கழகத்தில் சிறு கதைத் தொகுதிகள் என்ருல்! ஆயிரம் ஐந்நூறு என்று செலவிடுகிருர்கள்! தமிழ் வளர்ப்பவர்களென வெட்கமின்றிக் கூறித் திரிகிருர்கள்... இவர்களின் 'குருட்டுக் கண்'களுக்கு நமது குறை தெரியவில்லை...! என்ன செய்வது...? தேசிய இலக்கியம் வளர்க்கிருர்கள்... முற்போக்கின் உச்சாணிக் கிளையிலே உல்லாசமாகக்குந்தி இருக்கிருர்கள்! பெரிதாகப் பேசுகிருர்கள்...! இவர்களால் தமிழ் வளர்கிறது—வளரட்டும்!

சுயமொழி வகுப்பினர் பேராதனை மண்ணில் காலடி வைக்கு முன்னர், தமிழ் வாஞ்சையால் சமூக மஞ்சரியை ஆரம்பித்தான் ஒரு தமிழ் மகன்!—அவன் அந்தமண்ணை விட்டு வெளிச் சென்றதும் அந்தச் சஞ்சிகையின் வரலாறே சாவாகிவிட்டது...! அதைப்பற்றிக் கவலைப் பட்டவர்கள் இந்த இரண்டாண்டுகளில் எத்தனை பேர்? கவலைப்பட்டாலும் பயன் மிகு ஆக்க முயற்சியில் நாட்டம் செலுத்தியவர்கள் எத்தனை பேர்...?

ஒரு தொகுதி பல்கலைக்கழக வட்டாரத்துக்குள் வெளிவந்துவிட்டால் பெருஞ் சாதனையாகப் பெருமை காட்டும் நம்மவர்கள்; பொருமையால் தீய்ந்து குளறுபடி செய்யும் நம்மவர்கள்; அதற்காக நமது சுற்று வட்டாரத்துள் கட்சிகள் திரட்டிச் சின்னத்தனமாக இரண்டுபடுத்தும் இழிநிலைத் தன்மை கொண்ட நம்மவர்கள்—நாம் தாம் இந்நாட்டு மன்னர்களென நினைக்கிருர்கள்! ஆனுல் எமது கையிலே தமிழின் ஆக்க பூர்வமான வளர்ச்சி தங்கியிருப்பதை உணர்கிருர்களில்லை! 'மாணவர் சஞ்சிகை'யும் பதினைந்து வருடங்களாக 'இளங்கதிரும்'—வெளிவருகின்றன. ஆனுல் அவற்றில் ''மேன்மைக் கலை''களுக்கு இடமில்லை...!

இதற்காக நாம் பழம் இலக்கியப் பாரம்பரியத்தை எள்ளிநகையாடுகிறேம் என்பது பொருளல்ல; போற்றத்தான் வேண்டும்; பெருமைப்படத்தான் வேண்டும்; அதற்காக வள்ளுவரின் குறளிற்றன்—அரசியல் பொதிந்திருப்பதாகக் கூறிக் கொண்டிருக்க முடியுமா? திருத்தக்கதேவரின்—சீவகசிந்தாமணியில் வரும் ''பொறி'' தமிழரின் விஞ்ஞான அறிவிற்கு உரைகல் என வான் புகழ் பேசினுற் போதுமா?

எனவேதான் மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை; அது மடமை என நாங்களும் சொல்லுகிறேம்! 'மேன்மைக் கலைகளை வளர்ப்பதிலேதான் தமிழ் வாழ்வின் இன்றைய நிகழ்காலமும் நாளைய எதிர்காலமும் தங்கி இருக்கின்றது. இல்லையெனில்—

"சொல்லவும் கூடுவதில்லை — அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும்......"

என்ற நிலை நிச்சயம் நம்மை எதிர்நோக்கும் !

காலம் மாறவேண்டும் ! பழமையும் மரபும் பேசி அவமாகக் காலத்தைக் கொல்லும் வாழ்வு முறை ஒழிய வேண்டும்....! எட்டுத் திக்கும் சென்று, கலைச் செல்வங்கள் கொணர்ந்து 'மொழிமுதிர்ச்சி' பெறவேண்டும் !

அந்த நாள் வராதிருக்கும்வரை, தமிழ் வளர்க்கிறோம் எனப் பெருமை பேசுவதிற் பொருள் இல்லை...! பொதிகை தவழ் முது தமிழெனப் பழமை கூறுவதில் மேன்மை இல்லை...! வளர்ந்த பின் சொல்லுங்கள் ; வாய்கிழியக் கத்துங்கள் ; ஏற்கிறோம் !

— ஆசிரியன்

# இலங்கையின் முகத் தோற்றம்

பேராசிரியர் கா. குலரத்தினம்

இக்கட்டுரையைத் தொடங்குமுன்னர், புவியியல் என்ருல் என்ன என்பதை விளக்குவது எனது கடமையாக அமைகிறது. நவீன புவியியலின் இலக்கணத்தை வரையறுக்கப் பலர் முயன்றிருக்கின்றனரேனும், அவர்களின் முடிவுகள் ஒரே தன்மையையே விளக்குகின்றன. இதைச் சிலர், பௌதீக உறுப்புக்கள், மக்கள் பண்பாட்டுத் தன்மைகள் என்பவற்றை விளக்கி யாராயும் விஞ்ஞானம் என்றனர். வேறுசிலர், சூழல் பெரிதும் மாறுபாடடைந்து கொண்டிருக்கும் இவ்வுலகின்கண் மனிதனுக்கும் சூழலிற்கும் உள்ள தொடர்பினை ஆராயும் இயல் அல்லது மனிதனுக்கும் புவிக்கும் அல்லது புவிக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பினை ஆராயும் உயிரியற்கலை என்பர். புள்ளி விபரங்களைக் கொண்டு மூலாதார ஆய்வுகளை நடத்தக்கூடிய தானே இயங்கும் பண்பினைக் கொண்டதுமான புவியியல், பயன்பாட்டுத் தன்மைகளையும் உடையது. பயன்படு புவியியலானது நவீன விஞ்ஞான அபிவிருத்தியின் பயனுகப் பிறந்த சிக்கலான பல தன்மைகளையும் விளக்கி ஆராயவல்லது. பௌதிகப் புவியியல், இயற்கைப் புவியியல், சமுதாயப் புவியியல் என்பன போன்ற பெரிதும் தொடர்புடைய பல துறைகள் புவியியலில் உருப்பெற்றிருக்கின்றன. புவியியல் மற்றையவிஞ்ஞான இயல்களினின்றும் கடன் பெற்றதேனும், அவற்றின் விளைவுகளைத் தொகுத்து இணைத்து ஆராய்ந்து முழுமையாக்குவதன் மூலம் அக்கடனைத் தீர்க்கிறது எனப் பெயர் பெற்ற பிரஞ்சுப் புவியியல் அறிஞர் விடல் த ல பிளாச் கூறுகிருர். ''பகுதிகளின் கூட்டுத் தொகையிலும் பார்க்க முழுமையே முக்கியமானது'' என தளபதி ஸ்மட்ஸ் ஒருமுறை கூறினர். இதுவே புவியியலறிஞர்களின் கொள்கை என்று நாம் கூறலாம்.

---

* The face of Ceylon

Prof.: K. Kularatnam, M.A, Ph.D, D Sc., D.Lit, F.R.G.S.
Dip. in Gemmology, Dip. in Geography. M. A. Inst. Min. Matology

தமிழாக்கம் : செல்வி பொ. இராசையா B. A. (Hons.)
திரு. வெ. நடராசா.

மற்றும் கலைகள் யாவும் பகுப்பாய்வுத் தன்மைகளை உடைய தாக இருக்கப், புவியியலோ தொகுத்திணைத்து ஆராயும் தனிச் சிறப்புக் கொண்டது. ஆதலால் இது ஒரு குறிப்பிட்ட தனிக் கடமையை நிறைவேற்றுகிறது. மனிதனுக்கும் சூழலுக்குமுள்ள தொடர்பு பற்றிய அறிவு வளர வளர மக்கட் சமுகத்தைப் பற்றிய தத்துவமும் வளரும் என்று நாம் எதிர்பார்க்கலாம். அதாவது மாறுபாடுடைய முரணுன சூழலின் செல்வாக்கு காரணமாகப் பிறப்பதும், மக்களின் சிக்கலான பிரச்சினைகளைக் கருணையுடன் ஆராய்ந்து விளக்கும் ஒருதத்துவம். புவியியல் ஒருகலை ; விஞ்ஞானம் ; தத்துவம் என டட்லி ஸ்டாம் சுருங்கிச் சொல்லி விளங்க வைத்தார்.

புவியியல் இடங்களையும் உருவங்களையும் ஆராய்வதோடன்றி பௌதிக, பொருளாதாரத் தன்மைகளையும் கடந்து, சமுதா யத்தின் வாழ்க்கை, மரபு, பண்பாடு, நிலமானியம், விவசாயம், சமுதாயவளர்ச்சி முதலியவை பற்றிய பிரச்சினைகளையும், மாறும் தன்மை வாய்ந்த சூழலினுலும் அந்நியநாட்டுச் செல்வாக்கி னுலும் தற்போதடைந்திருக்கும் நிலையையும் விளக்கவல்லது. புவியியற் கொள்கைகளைத் தானுகவே பயிலலாம். ஆனுல் அதை நன்கு விளங்கித் தொடர்புகளை விளக்கிக் கொள்ளக் கூடிய தன்மையே தேசிய சர்வதேசியத் திட்டங்களை வகுப்பதற்கு அடிப்படையாக அமைந்தது. பல்கலைக் கழகங் களும் மற்றும் உயர்தரக் கல்வி நிலையங்களும் இக்கொள்கையை வளர்த்தற்கான முயற்சியில் முக்கிய பங்கை வகிக்கின்றன.

உலகின் பல்கலைக் கழகங்களில் புவியியல் தனக்கே உரிய இடத்தை விஞ்ஞான, கலை, சமுக, பொருளாதார, வர்த்தகத் துறைகளிற் பெற்றிருக்கிறது. புவியியற் சிறப்புப் பட்டதாரிகள் எங்கும் பெரிதும் தேவைப் படுகின்றனர். அவர்களின் தொகை மிகவும் குறைவாகவே இருக்கிறது. அவர்களின் சேவை கல்லூரி களிலும் பல்கலைக் கழகங்களிலும் தேவைப்படுகின்றது. அன்றி யும் அவர்கள் தேசிய, சர்வதேசிய திட்டங்களுக்கு ஆலோசனை கூறவும் அரசாங்க அமைச்சுகளிலும், ஆய்வுக் கழகங்களிலும் தேவைப்படுகின்றனர். அரசினரின் உயர்தர அதிகாரிகள் 'பயன் படு புவியியலின்' (Operation Geog.) முக்கியத்தை உணர்ந்ததி ஞல் அச் சொல் அவர்களையே பெரிதும் பயிலுகிறது. இவற்றை விடப் புவியியல் அறிஞரின் சேவை, விமானக் கப்பற் போக்கு வரத்துள்ள கைத்தொழில் நிலையங்களிலும் நகர கிராம அமைப் புத் திட்டங்களிலும் நிலப்பயன்பாட்டுத் துறையிலும் பெரிதும் தேவைப்படுகிறது. ஒக்ஸ்வோர்ட் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவின் சொற்பொழிவில் "புவியியலிற் சிறப்புப் பட்டம் பெற்றவர் தன்னளவு பொன் பெறுமதி உடையவர்" என்று கூறப்பட்டது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........



## 'இலங்கையின் முகத் தோற்றம்'

இரு நோக்கங்களின் அடிப்படையில் நான் இப்பொருளைத் தேர்ந்து எடுத்திருக்கிறேன்.

1. இரண்டாம் உலக யுத்தத்திற்குப்பின் மற்றும் நாடுகளைப் போல நமது நாட்டிலும் போக்குவரத்து வசதிகள் நன்கு முன்னேற்றமடைந்தன. அநேக மக்கள் உல்லாசப் பிரயாணங்களிலும் கல்வி பற்றிய பிரயாணங்களிலும் ஈடுபட்டுள்ளனர். எனினும் இலங்கையின் மேற்பரப்பிலுள்ள கவர்ச்சிகரமான இன்பம் பயக்கவல்ல காட்சிகள் பிரயாணியின் நோக்கிற் கெட்டாதொழிகிறது. இக்கட்டுரையாவது மேற்பரப்பு நில உறுப்புகளைப் பற்றிய ஆர்த்வதை உண்டாக்கும் என எண்ணுகிறேன்.

2. கடல்மட்டத்திற்கு மேற் காணப்படும் நிலப்பகுதிகளுக்கு இயற்கை ஒரு உருவத்தை அளிக்கின்றது. இவ்வுருவம் பெரும்பாலும் ஒரு 'மூடி'யாக அமைந்தது. உண்மையான உருவத்தை ஆய்ந்தறிந்து மனித சமுதாயத்தின் தேவைக் கேற்றபடி பயன்படுத்துவது மனிதனின் கடமையாகும் பௌதிக நில உறுப்புக்களின் தன்மையையும்அவை அடையும் மாற்றங்களையும் ஆராய்வது பிரதேசங்களின் பண்பாட்டு உருவங்களை ஆராய்வதன் முதற்படி'' என வூல்ப்றிச்சும் மோர்கனும் கூறினர். தரையின் மேற்பரப்பு நில உறுப்புக்களை ஆராய்வதே ''மனிதன்-மக்கள் தொழில்'' என்பவற்றிற்குள்ள தொடர்பை விளக்குதற்கு அடிப்படையாக அமைகிறதென்று லபிளே சொசட்டி கூறினர். நிலப்பரப்பின் மீதுள்ள சனத்தாக்கம் அதிகரிக்கின்ற நவீன காலத்தில் தரையுருவங்களை ஆராய்ந்து பகுத்து நிலப் பயன்பாட்டுத் திட்டங்களை வகுத்து விளைவுகளை விருத்தி செய்வது ஓர் முக்கிய தேவையாக அமைகிறது.

இலங்கையின் மேற்பரப்பு நில உருவ ஆய்வானது அதன் புற உருவத்தின் தன்மை, அதன் முகத்திலுள்ள தோற்றங்களின் உயரம் என்பவற்றை அடக்கும். மேற்பரப்பு உருவங்களின் தன்மை அவற்றின் பிறப்பிலேயே தங்கியிருப்பதால் இவை எவ்வாறு தோன்றி எத்தகைய அளவிற்கு உரிவை அநுபவித்திருக்கின்றனவென்பதையும் கருத்திற்கெடுக்கவேண்டும். நில உறுப்புகள் யாவும் படிப்படியாக மாறும் கூர்தலறச் சிக்கலாகும். இவை அமைப்பு தேய்வு உரிவு நிலைகளிலேயே தங்கியிருக்கின்றன. கல்லியலும் பாறைகளின் அழிவும் அமைப்பாகும். பாறை

களே இயற்கைக் காட்சிகளின் அடிப்படையான தன்மைகளுக்குக் காரணமாக அமைந்தன. ஆனல் புவியின் அகத்தே பிறக்கும் விசைகளும், வெளிப்புறத்தின்னற் கருவிகளும் மேற்பரப்பு நில வுறுப்புகளின் உருவங்களை ஆக்குகின்றன. வெளிப்புற உருவங் களை உருவாக்கும் புவிச்சரிதவியல் மாற்றங்கள் யாவும் வட்டத் தன்மையுடையன. தரையின் மீதுள்ள ஒவ்வோர் நிலக்காட்சி யும், தொடர்ந்துவரும் புவிவெளியுருவியல் நிலைகளுள், குழந்தை நிலை, இளமைநிலை, முற்றியநிலை, முதிர்ச்சிநிலை என்பவற்றுள் ஏதாவது ஒன்றினுள் அமையும். சில சமயங்களில் ஒவ்வோர் நிலையும் முடிவடைவதற்கு முன்னர் காலநிலை மாற்றமோ எரி மலைத் தாக்கமோ குறுக்கிடுவதுண்டு. தரையின் மேற்பரப்புரு வங்களுள் ஒன்ருவது அதற்குரிய முடிவு நிலையை அடைவதில்லை. தென்னுபிரிக்கப் புவிவெளியுருவவியல் ஆராய்ச்சியில் லஸ்டர் கிங் கூறியவாறு இலங்கையின் மேற்பரப்புருவங்கள் வேற்றுமைப் பட்ட சிக்கலான பிறப்புக்களைக் கொண்ட சிக்கலான தன்மை யவை. அதாவது வேறுபட்ட ஆக்கங்களாற் ருேன்றிய பல முகப்புக் கூறுகளை இலங்கை கொண்டது. அடுத்தடுத்து உண் டாகும் வட்டத் தன்மைய படிமுறை மாற்றங்களின் அடையா ளங்களைக் கொண்ட ஒரு சுவடென இலங்கையினதமைப்பைக் கூறலாம்.

நவீன புவிவெளியுருவவியல் ஆய்வில் உருவங்களை முகப்புக் கூறுகளாக அதாவது சரிவுகள், சமதளங்கள் என வகுத்தல் வழக்கம். நிலப் பயன்பாட்டினைக் கருதும்போது உருவமும் உய ரத்தைப் போலவே முக்கியமானதாக அமையும். நுணுக்கமா கப் புவியியல் ஆய்வுகள் நடாத்துவதற்கு ஈற்றில் பயன்படுவது வெவ்வேறு சாய்வுகளையுடைய முகப்புக் கூறுகளேயன்றி மனம் போனபடி பிரிக்கப்பட்ட அரசினரின் இறைவரிப் பிரிவுகளன்று. இவையே புவிவெளி உருவவியலின் அணுக்கள். இவ்வணுக்களின் மீதே பிரதேசமாகிய பொருள் அமைக்கப்படுகிறது.

சரிவு காலநிலைக் குறைபாடுகளைக் கட்டுப்படுத்தும்; மண் நழுவுகை போக்குவரத்தின் திசைகள் கட்டடவமைப்பு முதலிய இன்னேரன்னவற்றையும் கட்டுப்படுத்த வல்லது. இவை குத் தான சரிவுகளுக்கே பொருந்தும். முகப்புக் கூறுகளின் அதாவது சரிவுகளினதும் சமதளங்களினதும் முக்கியத்துவம் மேற்கூறிய வரம்புகளையும் கடந்துநிற்கும். ஒவ்வொன்றும் தத்தம் இயல் பான குணங்களினுல் மற்றையதினின்றும் வேறுபடுகிறது. இவ் வேறுபாட்டிற்கு பிறப்பு வேறுபாடே காரணம். ஒவ்வோர் சமதளத்தின் மீதும் அதன் வயதிற் கிணங்க எச்ச மணல்

மண்ணின்பக்கப் பார்வையில் வேறு படுகின்றது. ஒவ்வோர் முகப்புக்கூறின் புவிச்சரிதவியலுக் கிணங்கவும் அல்லது அது அனுபவித்த வானிலையழிவிற் கிணங்கவும்தான் அது புவியியல் இயல்புகளைப் பெறுகிறது. இவ்வியல்புகளே நீர், மண், குடியிருப்பு மேற்பரப்புப் பயன்பாட்டுத் தன்மைகளைக் கட்டுப்படுத்தும்.

## உருவமும் அமைப்பும்

புவியில் மூன்றில் இரண்டு பகுதி சமுத்திரமாகும். அதன் மீது கண்ட மேடையில் செங்குத்தான சரிவுடன் கண்டங்கள் மேலெழுகின்றன. தத்தம் பக்கங்களினின்றும் மேலெழுந்து இக் கண்டமேடைகள் கடற்கரைகளாகவும் மீண்டும் மேலெழுந்து வெவ்வேறுபட்ட உயரத்தையுடைய தரையாகவும் அமைகின்றன. சமுத்திர ஆழ அளவிற்குரிய படத்தினைக் கவனிப்பின் இலங்கையும் இந்தியத் தீபகற்பமும் ஒரே கண்டமேடையில் அமைந்திருப்பது புலனாகும். இலங்கையைச் சுற்றியுள்ள கண்டமேடையின் சராசரி அகலம் 12 மைலாகும். இதன் சராசரி ஆழம் 36 பாகம். அதற்கு அப்பால் இரண்டு மைல் தூரத்தில் இது சடுத்யாக 500 பாகம் இறங்குகிறது. இவ்வீழ்ச்சி மூர்க்கமாக 10 மைலிற்கப்பால் 1000 பாகத்திற்கு இறங்கி, ஈற்றில் 3000 பாகங்களை அடைகிறது. இராமரணைக்குச் சமீபத்தில் மன்னார்க் குடாவில் நீரின் ஆழம் 5 பாகமாகும். இக்கண்டமேடையின் புற உருவத்தின் சிறப்பான தன்மை, மன்னாரிற்கு வடதிசையாகத் தலைகீழாகத் திரும்பிய V வடிவத்திலமைந்த வெட்டாகும் இது கண்டமேடையில் ஏற்பட்ட பிளவைக் குறிப்பதோடு தக்கணத்திலிருந்து இலங்கை கிழக்கே பெயர்ந்ததையும் சுட்டுவதாய் அமையும். இந்நிகழ்ச்சியையும், விளைவையும் பின்னர் ஆய்வோம் புவிச்சரிதவியல் புவியியற் தன்மைகளைக் கருதினால் இலங்கை இந்தியக் குடாநாட்டின் ஒரு பகுதியாகும். இந்தியக் குடாநாட்டைப் போலவே இலங்கையும் பெரும்பாலும் உருமாறிய தொல்காலப் பாறைகளால் ஆனது. இந்தியாவினின்றும் இலங்கை அண்மையிலேயே 3-ம் யுகத்தில் அல்லது பின்னர் பிரிக்கப்பட்டது. மடகஸ்கார் ஆபிரிக்காவின் சில பகுதிகள் பிரேசில் மேற்குஅவுஸ்திரேலியா என்பன ஒருமைப்பாட்டைத் தெரிவிக்கின்றன. இவ்வொற்றுமை பொது அமைப்பிலும் கல்லியலிலும் மட்டுமன்றி நிலக்கரியியல், பாறைகளின் அமைப்பு, மண்ணியல், உயிர்ச்சுவட்டியலிலும் இவ்வொருமைப்பாடு உண்டு. மடகஸ்காரரில் உள்ள வடக்கு-தெற்கான பாறை அமைப்பும் போக்கும் இலங்கையிலும் திருவாங்கூரிலும் வட வடமேற்கு

தென் தென்கிழக்கு வடக்கு/தெற்குப் போக்கை அடைகின்றன கொண்டுவானு நிலம் நிலைகுலைய இந்தோ இலங்கைத் திணிவு எதிர்மணிக்கூட்டுப் பக்கமாக அசைந்ததனுலேயே இத்தகைய அமைப்பும் போக்கும் தோன்றியிருக்கலாம் என்று கருதப்படு கிறது. இலங்கையிலும் இந்தியாவிலும் எதிர்ப் பகுதிகளில் பிள வுப் பள்ளத்தாக்குகளிற் சூருசிக்கு அடையல்கள் தங்கியிருப்பது இக்கருத்தை வலியுறுத்துவதாக அமைகிறது. தென் இந்தியா விற் பல பிரதேச அமைப்புப் போக்குகள் இருப்பதை எம் எஸ். கிருஷ்ணன் 1943-ல் அவதானித்திருக்கிறுர். இவை இலங்கை யுடன் தொடர்புடையன.

1. கிழக்கு மலைத்தொடரின் வடகிழக்கு தென்மேற்குப் போக் கை இலங்கையின் வடகீழ்ப் பகுதியிற் காணலாம். கல்லிய லும் ஒரே தன்மையதாய் அமைந்தது.

2. பம்பாய் ஹைதிரபாத் மைசூர் பகுதிகளிலுள்ள வட வட மேற்கு தென் தென் கிழக்குத் தார்வாருக்குரிய போக்கை இலங்கையின் மேற்கு மத்திய பகுதிகளிற காணலாம். இதையே விசயன் போக்கு என்ப.

3. மகாநதிப் பள்ளத்தாக்கு, திருவாங்கூர் சென்னையிற் காணப் படும் வடமேல் தென் கீழ் மகாநதிப் போக்கை, காலியில் உள்ள வட மேற்கு-தென் கிழக்குப் போக்கிற் காணலாம்.

தார்வர், மகாநதிப் போக்குகள் தென்னிந்தியாவிற் சந்திப் பதாக அமைகின்றன. ஆனல் அவை இலங்கையின் மத்திய பகுதியிலேயே சந்திக்கின்றன். இந்தியாவிற் காணப்படும் இப் போக்குகளை நீட்டினல் அவை சந்திக்கு மிடத்தில், இச்சந்திப்பு இலங்கையில் அமையாது. இச்சந்திப்பு பக்கவாட்டிற் பெயர்ந்து சற்றுக் கிழக்கே காணப்படுகிறது. இதையும், தலைகீழாய்த் திரும் பிய வடிவப் பிளவையும் நோக்கின் இலங்கை இந்தியாவினின் றும் பிரிந்தசைந்தது என்பதை ஏற்கக் கூடியதாய் இருக்கின்றது இலங்கையின் உருவமைப்பை ஒட்டிய வேறு சில சான்றுகளும் உள்ளன.

இலங்கை அமைந்திருக்கும் கண்டத்திட்டு உருப்பெற்றதைப் பின்பற்றியே இலங்கையின துருவம் அமைந்தது என சோம வில்லி (1908) கருதினுர். இக்கண்ட மேடையிற் சேர்ந்த படிவுப் பொருள்களினுலேயே இலங்கை வளர்ந்த தென்றும் இப்படிக் குறுகிய கால எல்லையிற் தோன்றிய உள்ளூர்ப் பின்வாங்கலினுல் ஆன தென்றும் கொள்ளப்படுகின்றது. படிவிற்குக் குறிப்பான

தொரு எல்லையும் உண்டெனவும், இவ்வெல்லை இலங்கையைச் சுற்றி 12 மைல் பரந்துள்ள மேடை விளிம்பே யென்றும் கருதப் படுகிறது. இவ்வெல்லையை ஆற்றுப் படிவுகள் கடந்தால் சமுத்திர ஆழியைச் சென்றடையும்.

ஒரு பெரிய கீழ் மடிப்புள் மடிப்பில் இலங்கை அமைந்துள்ளது. இதன் நடு அச்சு கண்டிக்கும் நுவரேலியாவுக்கும் கிழக்கே வட வட மேற்கு தென் தென்கிழக்குப் பக்கமாகவும். திருகோண மலையில் வட வட கிழக்கு தென் தென் மேற்கு. ஆகவும், அமைந்து வடக்கு நோக்கிச் சரிந்து அமைந்தது. இவ்விரு போக்குகளும் முறையே தார்வார், கீழை மலைத் தொடர்களின் போக்கோடிணைவனவாகக் காணப்படும்.

இலங்கையின் உள்ளகத்து உறுப்பமைதியே வெளித்தோற்றமாகவும், பக்கப் பார்வையாகவும் பிரதிபலிக்கின்றது. மட்டக் களப்பின் தெற்கே யமைந்த கரையின் கிழக்கு நோக்கிய புடைப்பானது, அப்பகுதிக்குரிய பாறையினதும் தரைத் தோற்றத்தினதும் கிடை குவிந்த தன்மை பொருந்தியிருப்பதைப் பிரதிபலிக்கிறது ; தென் மேற்குக் கரையின் மத்திய கோடு நோக்கிய நீட்சி, நெளிவு வளைவு கொண்ட ரக்குவானைத் திணிவிற் பிரதிபலிக்கப்படுகிறது ; வடக்கு நோக்கிக் குறுகிச் செல்லும் வடக்கின் பாரிய தாழ்நிலங்கள், அகன்ற தென்பகுதியையும், வடக்கு நோக்கிய மென் சரிவையும் கொண்ட கீழ்மடிப்புள் மடிப்போடு இயைவதாக அமைகிறது. இவையனைத்தும் ஒழுங்குப்பாடுள்ள, ஒருமைப் பாடுள்ள ஒரு உறுப்பமைதியை நிலத்தோற்றத்திற்குரிய படத்தில் தெளிவாகவும் பார்த்த மாத்திரத்தே விளங்கக் கூடிய அளவில் விளக்குவனவாய் அமையும்.

''கண்ட ஓட்டின் கட்டுக்கோப்பும், மணிகளும், மலையாக்கத்திற்குரிய வலயங்களால் நிர்ணயிக்கப்படுகின்றன ; இம் முதன்மையான கட்டுக் கோப்பின்மேற் பொருந்தியதாகக் காணப்படும் விசைகளின் அசைவுக்குரிய அடையாளங்கள் நெளிவு, உடைவு பிளவு என்பவற்றின் விளைவாகிய கண்டவாக்க வசைவுகளுக் குரியன'' மடிப்பிற்குட்பட்ட பகுதிகளும் அவற்றை அண்டி அமைந்த பகுதிகளின் வரலாறு தொடர்ச்சியான கண்டவசைவுகளையும், அவற்றின் வெவ்வேறு வகைகளையும் சிக்கலான தன்மைகளையும் விளக்கும். இலங்கையின் தொல்காலப் பாறைகள், கேம்பிரியாவிற்கு முந்தியகாலத்தில் பெரும்படியான மடிப்பிற்குட்பட்டு சிக்கலுடையனவாய் அமைந்தன. அவை

அப்பொழுதே தமது நெகிழ்ச்சியை இழந்து விட்டன. இதன் பின் புவியோட்டின் கீழ்த் தொழிற்பட்ட விசைகள், உடைவு பிளத்தலோடு கூடிய, நறுக்குறுதல், அல்லது ஓட்டில் வேறுபட்ட குத்து அசைவுகளை ஏற்படுத்தின.

## ஏற்றமும் பக்கப் பார்வையும்

ஒன்றன்மேல் ஒன்ருயமைந்த தெளிவான மூன்று தின்னற் சமவெளிகளால் இலங்கையின் உருவ அமைப்பு ஆனதென்ற முடிவிற்கு எவ். டி அடம்ஸ் (1929) வந்தார். ஒன்றன் பின் ஞென்ருக வந்த தின்னல் வட்டங்களின் பின்னிகழ்ந்த மேலுயர்த்துகையினுல் இவை தோன்றின எனக்கருதிய அவர், அவற்றை மூன்று ஆறரித்த சமவெளிகள் எனப் பெயரிட்டார். அவை யாவன :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-ம் | ஆறரிசமவெளி | ஏறத்தாழக் | கடல் | மட்டத்திலிருந்து | 6000′ |
| 2-ம் | ,, | ,, | ,, | ,, | 1600′ |
| 3-ம் | ,, | ,, | ,, | ,, | 100′ |

இதுதான் இலங்கையின் முகத்தோற்றத்தை பிரதிபலிக்கிறது என அவர் துணிந்தார். ஏறத்தாழ 4000--4500 அடி உயரத்திலமைந்த ஹோட்டன் ஊவா சமவெளிகள் அதிமுதிர்ச்சி நிலையைக் காட்டுகின்றன. இவற்றை அவர் தமது கருத்திற் கெடுக்காது தள்ளினுர். அளம்சினது கொள்கையை ஏற்காத ஜே. எஸ். கோட்ஸ் மூன்று ஆறரி சமவெளி பற்றிய கருதுகோள் பற்றித் தமது ''இலங்கையின் புவிசரிதவிய'' லில் ஒன்றும் கூருது விட்டார்

டி. என். வாடியா (1943) முப்பெரும் ஆறரி சமவெளிகள் காணப்படுவதை ஏற்றுக் கொண்டாரேனும், இதன் தோற்றத்தினை விளக்க வேண்டி புதியதொரு கொள்கையை வெளியிட்டார். இக் கொள்கையின் படி இச்சமவெளிகள் வட்டித்த திணிவு பிளவாக்கலினுல் (''Circumscribed blocks faulting'') ஏற்பட்டது. அடம்ஸ் வாடியா என்பவர்களுக்கு நியாயமாக நடக்க வேண்டின் சூழ்நிலைகள், போதிய அளவு நேரத்தை அவர்கள் வெளியுருவ வியலிற் செலவிட அனுமதிக்கவில்லை என்பதை ஈண்டு குறிக்கவேண்டும்.

பார்வைக்கு, இலங்கையின் தரைத் தோற்றத்தில் மூன்று படிகளா யமைந்த வெளியுருவம் புலப்படுமேனும், ஆழ்ந்து இதனை ஆராயின் இஃது பொருத்தமற்றதாகவும், இப்பாகுபாடு மிக எளிமையாக்கப்பட்டதாயும், தொடர்பற்ற பகுதிகள் ஒருங்கே பகுக்கப்பட்டிருப்பதையும் அறியலாம். மேற்காணப் படும் தமது இரு ஆறரி சமவெளிகளையும் சூழ்ந்துள்ளதென அடம் சால் விபரிக்கப்பட்ட சரிவுப்பாறைகள் தொடர்ச்சியுள்ள ஒன் ருக அமையவில்லை. தமது கொள்கையைப் பலப்படுத்தவேண்டி தொடர்பற்ற பல செங்கல்களையும், சரிவுப்பாறைகளையும் அவர் இணைத்து ஒன்ருகக் கூறினர் என்றே அஞ்சவேண்டி யிருக்கிறது. வாடியாவின் படத்திற் காட்டப்பட்ட எல்லையிலமைந்த சரிவுப் பாறைகளும் அதைப்போன்றே மிக எளிமையாக்கப்பட்டவை. தரையிற் காணப்படும் ஒருசில சரிவுப்பாறைகளோடுதான் அவ ருடைய படத்திற் குறிக்கப்பட்டுள்ள கோடுகள் ஒரிடப்படுகின் றன. ஆனல், இவர் அமைத்த செயற்கைக் கோடுகளின் உள் ளும் வெளியும் அமைந்த சரிவுப்பாறைகள் கருத்திற்கெடுக்கப் படவில்லை. இம்மூன்று ஆறரித்த சமவெளிகளும் எங்கே காணப் படுகின்றன ? இத்தீவினது தரைத்தோற்றப் படங்களை பெரும் படியாக ஆராயின், மூன்று ஆறரி சமவெளி காணப்படாது பின்வரும் வெளியுருவவியல் அலகுகள் காணப்படுதல் புலப்படும். இவ்வலகுகள் வெளியாய்வுச் சான்றுகளினுல், பிரதேச, உயர மானியியல் அடிப்படைகளில் நிறுவப்படும்.

1. மத்திய உயர் பூமி, இரக்குவானைத் திணிவுகள் உட்பட.
2. சரிவுப்பாறைகள், குவெயித்தாக்கள், பன்றி முதுகு வெற்பு கள் என்பவை காணப்பட, நன்கு விருத்தியடைந்த அளி யடைப்பு வடிகாலமைப்பைக் கொள்ள நீண்முகப் பள்ளத் தாக்குடன் மாறுபட அமையும் மென்சரிவு, குத்துச்சரிவுப் பாறைகள் என்பவற்றைக் கொண்ட நீள்குன்றுத் தொடர் கள் என்பவற்றை நிலத்தோற்றமாகக் கொண்ட நன்கு நீர் பெறும் மேற்கு நாடு.
3. எச்சமலை மொனுற் நொக்குகள் தட்டை உச்சி விலங்கல், நோபேட்கிரப் இந்தியாவில் ஆராய்ந்ததும் இன்சல்பேர்க் போன்று தனிக்கல்லாலமைந்த குமிழ் வெளியரும்புகள், என்பவற்றைக் கொண்ட தரைத்தோற்றத்தை உடைய வரண்ட கிழக்கு தென்கிழக்கு நாடு.
4. மத்திய மலையிலிருந்து விலகிச் செல்லச் செல்ல உயரத்திலும் பருமனிலும் குறைந்து சென்று கரையில் அண்மைய வண் டல்களால் மூடுண்டு கிடக்கும் எச்சமலைகளும் நீள்குன்று களும் காணப்படும் வடதாழ் நிலம்.

5. கரையோரத்தை அண்டிய தாழ்நிலங்கள்; கடலேரிகளையும் மணற்றிட்டுக்களையும் கொண்டவை.

வெளியுருவ, பிறப்பு அடிப்படைகளில் மாத்திரமன்றி, மண் வளம் பேணுதல், விவசாயத்திற்குரிய நிலப்பயன்பாடு, காட்டு வளம், பத்தனு நிலம்பற்றிய பிரச்சினைகள், சுரங்க, கனிப்பொருட் கண்டுபிடிப்பு, குடியிருப்பிற்குரிய இடம் காண்டல், என்னும் அடிப்படைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்தது. இவற்றுள் முக்கியம் வாய்ந்தது நிலத்தோற்றத்தில் சுலபமாகக் கண்டு பிடிக்கப்படக்கூடியவையேனும், படத்தில் ஒன்றிரண்டே புலப் படுகிற தட்டை நிலங்கள் வெவ்வேறுபட்ட உயரத்திலும், முக்கியமாக மிக உயர்ந்த பகுதிகளில் அமைந்து காணப்படுதல் முக்கிய அம்சமாகும்.

மத்திய மலைநாட்டை விளக்கப் படங்கள் கொண்டு ஆராய்ந்தால், அது ஏறத்தாழ 3000–3500 ச. மைல் பரப்பைக் கொண்டிருக்கக் காணலாம். இது பல்திறப்பட்ட நிலத்தோற் றத்தைக் கொண்டது; பிறப்படிப்படையில், இப்பிரதேசம், அழிக்கப்பட்டு பின்னர் உருக்கொடுக்கப்பட்ட ஒரு புவிச்சரித வியலுக்குரிய நடவடிக்கையாகும். பல்திறப்பட்ட நில உருவங்களை தொகுத்து ஒருவகைப்பட்ட ஒழுங்குப்பாட்டினுட் கொண்டு வரின், அவற்றைப் பின்வரும் புவிவெளி உருவவியல் அலகுக ளாகப் பிரிக்கலாம். இவ் வொவ்வொரு குழுவும், தரைத்தோற்ற இயல்புகளானவை, பிறப்பு, ஒழுங்குப்பாடு, தோற்றம் என்பவற் றில் ஏதாவது ஒரு அடிப்படையில் ஒருமைப்பாடுடையவை.

அ. தேயும் நிலையில் உள்ள, அதிமுதிர்சியைக் காட்டும் மேற் பரப்புகள் அல்லது தட்டை நிலங்கள்.

ஆ. வளரும் நிலையில் உள்ள சரிவுகள். இங்குதான் புத்திளமை பெற்ற தின்னல் நிகழுகிறது. இப்புத்திளமை தலத்தில் ஏற்பட்ட இடப்பெயர்ச்சி காரணமாக அடிப்படை மட்டத் தில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாலானது.

இ. குழந்தை நிலையில் உள்ள சரிவுப்பாறைகள்; இவை தின்னற் சக்திகளால் அதிகம் பாதிக்கப்படவில்லை.

ஈ. முந்திய அமைப்பிற் காணப்பட்டவற்றின் எச்சங்களான மொனுட்நொக்குகளாகவோ அன்றி குவெயித்தாக்களாகவோ மத்திய திணிவிற் காணப்படும் தோட்டப்பாலை, பீதிரு தாலைகாலை முதலியன, நக்கிள்சிற் காணப்படும் தம்பங்கல.

இவற்றுள் அதிமுதிர்ச்சியைக் காட்டும் தின்னற் பகுதிகள் பின்வருவன: அவை உயர அடிப்படையிற் தரப் பட்டுள்ளன. சரிவுகளாலும், சரிவுப்பாறைகளாலும் சூழப் பட்டுள்ளன.

1. ஹோட்டன் சமவெளி சராசரி ஏற்றம். 7000 அடி.
2. மூன், எல்க், கந்தப்பளை, அம்பவெல, சமவெளிகளும், தொடர்புடைய சமவெளிகளும் ஏறத்தாழ 6,200 அடி.
3. வெட்டுண்ட சரிவுப் பாறைகளாற் சூழப்பட்ட முக்கோணத் திணிவான அல்லது பாறைப்பிதிர்வான வைல்டர்ன்ஸ் சிகரமும் பண்டாரஎலிய சமவெளிகளும் ஏறத்தாழ 6000 அடி.
4. காட்மர்—ஸ்டாதெஸ்பே மேற்பரப்பு ஏறத்தாழ 5,900 அடி.
5. ராகலைப் பாறை மேடை ஏறத்தாழ 4900 அடி.
6. ஹோட்டன், மதுல்சீமை பீடபூமி 4500—4200 அடி.
7. ஊவாப் பள்ளத்தாக்கு 4200 அடி.
8. தென் பீடபூமி, கண்டிப் பீடபூமி, பதுளைப் பள்ளத்தாக்கு ஏறத்தாழ 2000 அடி.
9. மாவலத்தன்ன, தஞ்சன்தன்னபடி 1500--1200 அடி.
10. கிழக்குப் பீடபூமி தற்பொழுது சம உயரத்தைக் கொண்ட நீள்தொடர்களினதும் எச்சமலைகளினதும் முடிகளாற் பிரதிபலிக்கப் படுவது. இவற்றின் உச்சி ஏறத்தாழ 1,500--1200 அடி.

இவ்வட்டவணை பூரணமானதன்று. வேறும் பல தின்னலிற் குட்பட்ட சிறிய மேற்பரப்புகள் சரிவுகளாலும் சரிவுப்பாறைகளாலும் சூழப்பட்டுக் காணப்படுகின்றன. அதிமுதிர்ச்சி, முதிர்ச்சி, இளமை என்பவற்றின் முத்திரைகள் இப்பிரதேசத்தில் பதிக்கப்பட்டுள்ளன.

தென்மேற்கு, கிழக்குப் பகுதிகளும் தட்டைநிலம் சரிவுகள் போன்ற தனிமங்களாலேயே ஆக்கப்பட்டது என்பதை இதே போன்று விளக்கிக் காட்டலாம். இவற்றைப் பயன்படுத்தும் மனிதர் இவற்றை அறிந்திருந்தாற்றான் வெற்றிகரமாக நிலத்தைப் பயன்படுத்த முடியும்.

வாடியாவைப் பொறுத்த அளவில் இலங்கையின் மலைகள் நேர் விசைகளின் தொழிற்பாட்டால் ஏற்படுத்தப்பட்டவை; இவை இடைவிட்டிருமுறை பரந்த இடைவெளிகொண்ட நிலைகளிற் றெழிற்பட்டன; முதலாவது மேலுயர்த்துகையினுல்

கரையோரம் தவிர்ந்த இலங்கையின் மூன்றிலிருபகுதி மேலுயர்த் தப்பட, இரண்டாவது மேலுயர்த்துகையின் போது இலங்கை யின் மத்திய மலைகள் உருப்பெற்றன. மேலும் இவற்றைச் சூழ்ந்துள்ள சுவர்ச்சரிவுப் பாறைகள் முன்னையதைப் பொறுத்த அளவில் 500--1000' உயரமாகவும் பின்னையதைப் பொறுத்த அளவில் 4,000' உயரமாகவும் அமைந்ததென அவர் கூறுகிறார். ஆனால் உண்மையாக, ஏற்கனவே விளக்கப்பட்டபடி வெவ்வேறு ஏற்றங்களில் மூன்றிற்குமதிகமான பல தின்னலுக்குட்பட்ட மேற்பரப்புக் காணப்படுகின்றன.

''இவை பல வட்ட, அல்லது மிதமிஞ்சிய வட்டங்களின் விளைவாயமைந்தவை என்ற அடம்சின் விளக்கத்தை இங்கு கொடுக்கலாமேனும், இது இதைவிளக்கச் சரியான ஒரு கொள்கை ஆகாது. ஏனெனில் இம் மேற்பரப்புகள் வேறுபட்ட உயரங் களில், ஒருவித ஏற்றத் தொடர்ச்சியும் இல்லாது காணப் படுகின்றன.

எமக்குக் கிடைக்கக்கூடிய சான்றுகளின் அடிப்படையில் நாம் கொள்ளக்கூடிய தருக்க ரீதியான முடிவு என்னவெனில் இலங்கையின் பக்கப் பார்வையானது அண்மையிற் றோன்றிய பிளவுச் சிக்கலினால் ஆனது என்பதே. தப்போவையின் சூரா சிக்கு மேற்பரப்பு பிளவிற்குள்ளாகி மட்டமாக்கப்பட்டது என் பது எமக்குத் தெரியும். மத்திய உயர் பூமியின் சரிவுப் பாறை கள் பெரும்பாலும் அரிதாகவே தின்னலிற் காட்டப்பட்டுள்ளன. எனவே, இவற்றை உண்டாக்கிய விசைகள் சூராசிக்கிற்குப் பிந் தியவை ; மிக அண்மைய காலத்தவையாக இருக்கலாம். நீண்ட காலமாக வானிலையாலழிதலுக்கும், தின்னலுக்கும் உட் பட்டு மட்டமாக்கப்பட்ட பின்னர் மேனோக்கி நெளிக்கப்பட்டு குமிழ்வடிவான கீழ்மடிப்புள் மடிப்பொன்றனுள், தின்னற் சக் திகள் தொழிற்பட்டதன் விளைவாகவே தற்பொழுதைய தரைத் தோற்றம் ஏற்பட்டது என எண்ணவேண்டி யிருக்கிறது. இம் மேநெளிப்பின்போது அது பிளவுக்குட்பட்ட பல திணிவுகளாக வும், துண்டுகளாகவும் மாறிற்று ; இத்திணிவுகளிற் சில சரிந்து அமைந்தன. இவையனைத்தும் வடிகாலமைப்பைப் பெருமளவிற்கு மாற்றி அமைத்தன. இதன் விளைவாகவே புறநடை போன் றமைந்த மகாவலி பிழையான பாதைதியினூடு செல்கிறது.

பல சான்றுகள் இலங்கையில் அண்மையிற் புவியசைவு விசைகள் தொழிற்பட்டதைத் தெரிவிக்கும். இலங்கையின் புவிச் சரிதவியலுக்குரிய ஆய்வுகள் தேவையான அளவு எழுகையைக் கொண்ட பிளவை விளக்கிக் காட்டக்கூடிய அளவிற்கு முன்

னேறவில்லை. தனிப்பட்ட உள்ளூர் நிலைகளை, நேரடியான படையாக்க (Straligraphy) அடிப்படையில் நிறுவுதல் கடினம். உதாரணமாக உருமாறிய பாறைகள் சிக்கலாயமைதல், வரலாற்றுத் தொடர்ச்சி அதிற் காணப்படாமை, அடித்தளப் பாறை வேறு பாறைகளால் அல்லது தாவரங்களால் மூடுண்டு கிடத்தல் என்பவற்றின் அடிப்படையில் நிறுவுதல் கடினமாகும். நேரடியான உறுப்பமைதிச் சான்றுகள் இல்லாதவிடத்து, சில தொடர்புகளைப் பெருமளவிற்கு உண்மையாகத் தெரிவிக்கக் கூடிய அளவிற்குப் புவிவெளியுருவ இயல் வளம்பெற்றுக் காணப்படுகிறது.

1. நீர்வீழ்ச்சிகள்
2. குளிர், சூடான ஊற்றுக்கள் காணப்படல்
3. உப்பு மூல குத்துத் தீப்பாறைகள்
4. தப்போவையின் சூராசிக் பிளவு
5. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் கோடுகள்
6. அடையாளங் காணக்கூடிய இடங்களில் நைசிற்கும் கோண்டலைற்றிற்குமுரிய எல்லை நேரியதாய் இருத்தல்
7. இடைத் திசைகளில் சடுதியாக எதிர்பாராத மாற்றங்கள் காணப்படல்
8. சாய்விற் (Dip.) காணப்படும் சடுதியான வேறுபாடுகள்
9. தலைகீழாக்கப்பட்ட பக்கங்களில் மிகை மடிப்பு (Over fold) கிழிவு காணப்படல்
10. நொருக்கப்பட்ட பெக்மற்றைற், பிளவுக்குட்பட்ட பிரேசியா
11. குவட்சு நரம்பு
12 புத்திளமை பெற்ற பீடங்களைக் கொண்ட பள்ளத்தாக்குகளும் மேற்பரப்புகளும்
13. உறுப்பமைதிக்குரிய பிரிவுக் கோடுகளும், முன்னரே விலக்கும் போக்கும்; (Structural lineaments and predisposing tendencies.)
14. மயோசினிற்குப் பிந்திய கால மடிப்பிற்கும், மேலுயர்த்துகைக்கும் உள்ள சான்றுகள்.

இவையனைத்தும் இலங்கையில் திணிவுகள் அண்மையில் மடிப்பிற்குட்பட்டு மேலுயர்த்தப்பட்டதை வலியுறுத்தும் சான்றுகளாக அமையும்.

''தட்டை நிலங்கள்'' பழைய திணிவொன்றின் துகள்களாகும். இத்திணிவில் நிகழ்ந்த உடைவின் பின்னர் ஏற்பட்ட மேலுயர்த்துகையின் விளைவாக அவை வேறுபட்ட ஏற்றங்களிற் காணப்படுகின்றன. சரிவுகளும் சரிவுப்பாறைகளும் பிளவுச் சமவெளிகளின் எச்சத்தைப் பிரதிபலிப்பனவாக அமையும்.

அங்கோலாவிற் காணப்பட்ட இத்தகைய தன்மைகளின் செயற்பாட்டிற்கு சியாலுக்குரிய தரைப் பாறைகளில் உள்ள கிளர்மின் தனிமங்கள் கடலுக்குரிய சைமாவின் பாறைகளின் தனிமங்களுக்கெதிராக இயங்குதலால் ஏற்பட்ட தொடும் தொடு கோட்டிற்குரிய (Tangential) விசைகள் காரணமாக அமைந்தன என மியூனிச்சைச் சேர்ந்த ஒற்ருே ஜெசன் கருதுகிருர்.

தரைத்தோற்றத்தின் பிறப்புப் பற்றிய விளக்கம், இலங்கையின் முகத்தோற்றத்திற் காணப்படும் தன்மைகள் அதாவது முகப்பு, தட்டை நிலம், சரிவு என்பவற்றின் முக்கியத்துவத்தினை நயத்தல் என்பவை எமது தேசியத்திட்டங்களை மிகவும் விஞ்ஞான அடிப்படையில் வழிநடத்திச் செல்லும் என்ற எண்ணத்துடனும், வேட்கையுடனும் இதனை முடிக்கின்றேன்.

**ஆய்விற்குரிய நூல்கள்**

1. *Adams F. D.* The Geology of Ceylon
The Canadian Journal of Research. Vol. I, No. I, 1929.

2. *Wates J. S.* The Geology of Ceylon,
Ceylon Journal of Science Vol. 19, Pt. II 1935

3. *Wadia D. N.* Professional Paper No. I.
Dept. of Mineralogy Colombo 1943

4. *Krishnan M. S.* Indian Geographical Journal 1943
(The Structural trend lines of India)

# இலங்கையிற் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சி

திரு. எஸ். இராசரத்தினம், B. A. (Hons) M. Sc (Econ)

## 1. கோப்பியின் வீழ்ச்சி

இலங்கையின் கோப்பித் தொழில் தனது உச்சநிலையை 1870-ல் அடைந்தது. அதன்பின் அது எழுச்சியுற்றது போன்று விரைவாக வீழ்ச்சியுறத் தலைப்பட்டது இருபதாண்டுகளுக்குள் வேறு பயிர்கள் அதன் இடத்தைப் பெற்றன. 1870-ல் அது இரண்டு லட்சம் ஏக்கரில் விளைந்தது. 27 லட்சத்து 53 ஆயிரம் பவுண் மதிப்புள்ள 10 லட்சம் அந்தருக்கும் அதிகமான கோப்பி ஏற்றுமதி செய்யப்பட்டது. 1900 ஆண்டளவில் கோப்பி 500 ஏக்கருக்கும் குறைந்த நிலப்பரப்பில் முடங்கிக்கிடந்தது.[1]

இத்தொழிலின் வீழ்ச்சிக்கு 1869-ம் ஆண்டு கோப்பியிலைகளிற் றோன்றிய ஹெமிலியா வஸ்டரிக்ஸ் என்ற கிருமியே காரணமாக அமைந்தது. இந்நோய் பெருமளவில் பெருந்தோட்டங்களிற் பரவியது; மண்வளம், பயிரிடல், பசளையிடல் என்பவற்றில் போதிய அக்கறை காட்டாமல் விட்டதன் வாயிலாகப் பெருந்தோட்டக்காரர் இந்நோய் பெருமளவிற் பரவத் துணைபுரிந்தனர். ஒருபுறத்தில் அழுகிப்போன காட்டுத் தாவரங்களில் இருந்து கிருமிகள் காற்றுற் கொண்டு செல்லப்பட, மறுபக்கத்தில் காற்றுத் தடைகள் இன்றிக் காடுகள் அழிக்கப்பட்டதால் நோய் தடையின்றிப் பரவியது.[2] முன்னர் ஏற்பட்ட நோய்கள் பரிகரிக்கப்பட்டபோது மறைந்தன; ஆனால் ஹெமிலியா வஸ்டரிக்ஸ் தோட்டக்காரரையும் அவர்களது துணைக்கு வந்த விஞ்ஞானிகளையும் ஏமாற்றி நின்றது. கிருமி தோன்றிய பதின்மூன்று வருடங்களுக்கு அது இனங் கண்டுபிடிக்கப்படவில்லை; இவ்வேளையில் வேறு பயிர்கள் கோப்பியின் இடத்தைப் பெற்றன.

---

தமிழாக்கம் : திரு. என். பத்மநாதன் அவர்கள்
செல்வி த. வைரவிப்பிள்ளை

உடனடியாகக் கோப்பித் தொழில் கைவிடப்படவில்லை. பெருந் தோட்டக்காரர் தாங்கள் நன்கு அனுபவம் பெற்ற ஒரு தொழிலைக் கைவிட விரும்பவில்லை ; அத்துடன் அவர்கள் உறுதியற்ற வேறு தொழில்களில் முதலீடு செய்யவும் விரும்பவில்லை. எவ்வாறெனினும் புது முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கப்படவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. பலர் ஒரு பயிரையே தொடர்ந்து செய்வதில் உள்ள ஆபத்துக்களை உணர்ந்தனர். இவர்களுள் ஒருவர் வேத்தியன் தாவரத் தோட்ட இயக்குனரான கலாநிதி தவைட்ஸ் இதனால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை அடிக்கடி சுட்டிக்காட்டினார். தேசாதிபதி சர் வில்லியம் கிரேகாறியாலும் (1872--77) இத்தகைய எச்சரிக்கைகளையே விடுக்கப்பட்டன. சிங்கோனா கொக்கோ தேயிலை என்பன துணைப்பயிர்களாகப் பயிரிடப்படலாம் எனப் பெருந்தோட்டக்காரருக்கு ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன.[3] இவ்வாலோசனைகளின் பின்னும் பெருந்தோட்டக்காரர் தொடர்ந்து தனிப்பயிர்ச் செய்கையில் தங்கியிருந்தனர். கோப்பியின் விளைச்சல் வீழ்ச்சியுறத் தொடங்கிய பின்னும் அவர்கள் கழுவாய் தேட முயன்றார்களே தவிர தமது கொள்கையைத் திருத்தி அமைக்க முன்வரவில்லை. உற்பத்தியைப் பேணுதற் பொருட்டுப் பெருமளவில் கோப்பியல் மேலும் தங்கியிருக்க முடியாத நிலை வருமட்டும் நீடித்தது.

வளமாக்கிகள் இறக்குமதி மதிப்பீடு: [4]

| | | |
|---|---|---|
| 1874 | ரூ | 612,560 |
| 1875 | ரூ. | 871,410 |
| 1876 | ரூ. | 1,408,090 |
| 1877 | ரூ. | 2,610,000 |
| 1878 | ரூ. | 1,365.860 |
| 1879 | ரூ. | 555.200 |
| 1880 | ரூ. | 222,260 |

கோப்பிப் பயிர்களுக்குக் கந்தகமும் வேர்ச் இரசாயன மருந்துகளும் இடப்பட்டும் பயன் கிடைக்கவில்லை. தோட்டங்களிற் பரீட்சிக்கப்பட்ட சிறந்த பயிர் வகைகள்கூட கிருமிகளின்முன் வீழ்ச்சியடைந்தன. எவ்வாறெனினும் நோய்காலத்தில் கோப்பியின் விலை அதிகரித்திருந்த படியால் தவிர்க்கமுடியாததொன்றான பயிர் மாற்றம் நிகழவில்லை. வீழ்ச்சியடையும் விளைச்சல் ஈடுசெய்ய வேண்டிப் புது நிலங்கள் பழைய பயிரின் செய்கைக்குள் வந்தன.[5] 1869 திற்கும் 1879திற்கும் இடையில் நாலு லட்சம் ஏக்கர் முடிக்குரிய நிலம் விலைப்பட்டது.[6]

கோப்பித்தொழில் [7]

| ஆண்டு | ஏக்கர் | தொகை | பெறுமதி | விலை 1 அந். ரூபா |
|---|---|---|---|---|
| 1870 | 185,000 | 1,054,029 | 2,753,004 | 54 |
| 1871 | 195,657 | 945,851 | 2,432,427 | 55 |
| 1872 | 206,000 | 723,055 | 1,853,713 | 55 |
| 1873 | 219,974 | 951,342 | 4,220,252 | 88 |
| 1874 | 237,345 | 730,937 | 3,216,651 | 90 |
| 1875 | 249,604 | 924,266 | 4,506,902 | 100 |
| 1876 | 260,000 | 665,626 | 3,424,024 | 106 |
| 1877 | 272,243 | 974,333 | 4,976,022 | 106 |
| 1878 | 275,009 | 631,609 | 3,395,249 | 107 |
| 1879 | 265,000 | 779,738 | 4,029,229 | 107 |
| 1880 | 252,431 | 656,595 | 3,333,739 | 104 |
| 1881 | 322,337 | 436,991 | 2,137,326 | 100 |
| 1882 | 287.999 | 464,703 | 1,803,151 | 81 |

## 2 புதுப்பயிர்கள் பரீட்சிக்கப்படல்

பெருந்தோட்டக்காரரின் உடனடித் தேவையைப் பூர்த்தி செய்த பயிர் சிங்கோனுவாகும் இது 1867-ல் முதன் முதலாக இலங்கையிற் புகுத்தப்பட்டது. தவைட்சும் கிரேகரியும் அது கோப்பியின் துணைப் பயிராகப் பயிரிடலாம் என்று ஆலோசனை கூறினர். எனினும், அது ஒரு மருந்துப் பயிரெனப் பெருந்தோட்டக்காரர் நிராகரித்தனர். கோப்பியின் வீழ்ச்சிக்கு முன்னர் சில துண்டு நிலங்களில் தவைட்சிற்கு ஆதரவாகவே புதிய பயிர் பயிரிடப்பட்டது.[8] எவ்வாறெனினும் கோப்பியின் விளைச்சல் வீத வீழ்ச்சி லண்டனில் குயினைனுக்கு இருந்த அதிக விலை, அதாவது ஒரு அவுண்சிற்குப் பன்னிரண்டு சிலிங் என்பவை சிங்கோனு வளர்த்தலுக்குத் தூண்டுதலை அளித்தன. இதன் விளைவாக 1875-ம் ஆண்டளவில் 5000 ஏக்கர் நிலம் இப்பயிரின் கீழ் வந்தது.[9]

இதற்கெனப் புதிய நிலங்கள் திருத்தப்பட வில்லையேனும் 3000 அடி மேலிருக்கும் தோட்டங்களனைத்திலும் கோப்பிக்கிடையே சிங்கோனு வளர்க்கப் பட்டது.[10] இத்தகைய முறை உண்மையான சிங்கோனு நிலப்பரப்பைப் பற்றிய புள்ளிவிபரங்களைத் தர வாய்ப்பளிக்கவில்லை. பின் தரப்பட்ட மதிப்பீடுகள் உத்தியோகபூர்வமற்றவையாகும்,

சிங்கோனுத் தொழில் [11]

| ஆண்டு | பரப்பு | ஏற்றுமதி தொகை | மதிப்பு | குயினைன் விலை (லண்ட. அவு.) |
|---|---|---|---|---|
| 1870 | 500 | (இரு) | ரூபாய் | |
| 1875 | 5,000 | 19,152 | 17,963 | 12 சி. 6 பெ. |
| 1880 | 45,000 | 11,61,989 | 12,67,41 | 12 சி. |
| 1885 | 39,000 | 1,23,25,642 | 41,28,753 | 4 சி. 3 பெ. |
| 1890 | 30,000 | 87,79,140 | 10,53,497 | 1 சி. 5 பெ. |
| 1895 | — | 9,19,820 | 73,586 | 1 சி. 2 பெ. |

சிங்கோனுவைப் பெருந்தோட்டப் பயிராகப் பயிரிடற்குப் பல கடுமையான வரையறைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தன. குறைந்தது கடல் மட்டத்திலிருந்து 3000 அடி உயரமுள்ள நிலம் தேவைப்பட்டது. இது பொதுவாக எல்லாக் கோப்பித் தோட்டங்களிலும் மேலான உயரத்தில் அமைந்து காணப்பட்டது. லண்டன் குயினைன் சந்தை இதிலும் முக்கிய வரையறையாக இருந்தது. மருந்துப் பொருளாதலின் சிங்கோனுவின் கேள்வி நெகிழ்ச்சியற்றிருந்தது இதன் காரணமாக லண்டனில் இலங்கைச் சிங்கோனு நிரம்ப, அதன் விலை விரைவாக வீழ்ச்சியுற்றது. [12] பெருந்தோட்டக்காரர் இப் பயிர்ச் செய்கையை 1880 அளவிற் கைவிட்டனர். அதன் பின்னர் ஏற்றுமதி செய்யப்பட்ட சிங்கோனு, கைவிடப்பட்ட நிலங்களில் இருந்து வந்தது. இது குறிப்பிடத்தக்க காலம்வரை நீடித்ததேனும், இதனைச் சேகரித்தல் குடியானவர் கையிலிருந்தது.

கொக்கோ ஒல்லாந்தரால் இலங்கைக்கறிமுகப் படுத்தப் பட்டதேனும், கோப்பி வீழ்ச்சியுறும்வரை அது பெருந்தோட்டப் பயிராகவில்லை. கலாநிதி துவைட்ஸ், கொக்கோ கோப்பிக்குத் துணைப்பயிராக அமைவதோடன்றிக் குடியானவராலும் பயிரிடப் படலாம் என்பதைக் கண்டார். [13] கோப்பி வீழ்ச்சியுற்றதும் பெருந்தோட்டக்காரர் இதனை வேறு பயிர்களிடையே பயிரிட்டனர். கொக்கோ விதைகளையும், பயிரிடல் பற்றிய குறிப்புகளையும் அரசாங்கம் காரியாதிகாரிகளின் மூலம் குடியானவரிடையே விநியோகித்தது. இத்திட்டம் கொக்கோ நிலத்தின் அரைப் பகுதி அப்பயிரின் கீழ் வரக் காரணமாக அமைந்தது. வேறு பயிர்களிடையே பயிரிடப்பட்டதாலும், சிறுதுண்டு நிலங்களிற் குடியானவராற் பயிரிடப்பட்டதாலும் சிங்கோனுவிற்குரிய புள்ளிவிபரம் போன்று இவ்விளைநிலத்தின் புள்ளிவிபரமும் சரியானதன்று.

கொக்கோத் தொழில் [14]

| ஆண்டு | பரப்பு (ஏக்கர்) | ஏற்றுமதி (அந்தர்) | விலை (அந்தருக்கு) |
|---|---|---|---|
| 1878 | 300 | 10 | — |
| 1879 | 500 | 42 | — |
| 1880 | 3,000 | 121 | — |
| 1881 | 5,460 | 283 | — |
| 1882 | 7,000 | 864 | 105 சி. |
| 1883 | 10,000 | 3,777 | 95 சி. |
| 1884 | 11,000 | 9,241 | 80 சி. |
| 1885 | 12,800 | 7,466 | 92 சி. |
| 1886 | 12,500 | 13,056 | 85 சி. |
| 1887 | 12,000 | 17,560 | 76 சி. 6 பெ. |
| 1888 | 12,000 | 12,231 | 87 சி. |

கொக்கோப் பயிர்ச் செய்கைக்கு வரையறைகள் காணப் பட்டன வேனும் சிங்கோனவைப் போலன்றி அது பெருந் தோட் டங்களில் ஒரு நிரந்தரத் துணைப் பயிராகவிருந்தது. அதன் வளர்ச்சிக்கு அதிக நிழல் வேண்டியிருந்தமையால், அதன் செய்கை தும்பறை களனிப் பள்ளத்தாக்குகளில் கட்டுப்பட்டிருந்தது. இங்கும் தேவையான நிழலை அளிக்க வேண்டி, நிழல் மரங்கள் நடப்பட வேண்டியிருந்தது; ஆனல் றப்பர் அறிமுகப்படுத்தப் படுமட்டும் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த மரங்கள் இங்கு நடப்படவில்லை.

கோப்பியின் வீழ்ச்சிக்குப்பின் பரீட்சார்த்தமாகப் பயிரிடப் பட்ட பயிர்களுள் தேயிலையும் ஒன்று. அதனைப் பயிரிட வேண்டி ஆரம்ப காலத்தில் நிகழ்ந்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை. 1841-ல் வோம்ஸ் சகோதரர்கள், புசல்லாவையில் ஒரு சிறு துண்டு நிலத்தில் சீனத் தேயிலையைப் பயிரிட்டனர். றுத்த லொன்றிற்கு £ 5 உற்பத்திச் செலவு காணப்பட்டது. சிறு நிலத் தில் பயிரிடப்பட்டபடியாற்றான் உற்பத்திச் செலவு அதிகமாக அமைந்தது. வோம்ஸ் சகோதரர் ஒரு சீன் 'டீ மேக்கரையே' வேலைக் கமர்த்தினர். அதிக பணத்தை விழுங்கும் இத்தகைய முயற்சி இலங்கைப் பெருந்தோட்டத்திற்குப் பொருந்தாது என்பது ஐயத் திற்கிடமின்றித் தெளிவாயிற்று. எனவே பின்னர் நிகழ்ந்த பரீட்சார்த்தங்கள் விரைவில் வளரக்கூடியதும், அதிக விளைச்ச லைத் தருவதுமான அசாமின் சுதேச இனத்தைச் சேர்ந்த தேயிலை வகையைக் கொண்டு நடத்தப்பட்டன.

விரிவடைந்து செல்லும் இந்தியத் தேயிலைத் தொழில் இலங்கையின் புதிய துணைப் பயிரிற் காட்டப்பட்ட ஆர்வத்தை அதிகரிக்கும் தூண்டுகோலாய் அமைந்தது. இப் பொருள் பற்றிப் பெருந்தோட்டக்காரர் சங்கம் 1867-ல் ஆராய்ந்து தேயிலைச் செய்கைபற்றி அறிதற்கும், அதனை இலங்கையிற் புகுத்துதற்கான வாய்ப்புகளை மதிப்பிடற் பொருட்டும், அனுபவமிக்க ஒரு பெருந்தோட்டக்காரரை அசாமிற்கு அனுப்பி வைத்தது.[16] இதேயாண்டில் இதற்குச் சாதகமான ஒரு அறிக்கையை அரசாங்கம் வெளியிடவே பலர் தமது தோட்டங்களில் ஒரு பகுதியைத் தேயிலையைப் பரீட்சார்த்தமாகப் பயிரிடப் பயன் படுத்தினர். 1867-ல் லூல்கொந்தர என்னும் பெருந்தோட்டத்தைச் சேர்ந்த ஜேம்ஸ் றெயிலர் இருபது ஏக்கர் காட்டு நிலத்தை இதற்கெனப் பயன்படுத்தினுர்.[17] இவரைத் தொடர்ந்து பலர் இம்முயற்சியி லிறங்கினர்[18] எனினும் 1867–70 வரை கோப்பியின் பொங்கு காலம் நிலவியது; எனவே தேயிலையில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை. 1869-ல் தேயிலை 250 ஏக்கர் நிலத்தில் மாத்திரம் பயிரிடப்பட்டது.[19]

## இலங்கையில் தேயிலைத் தொழில்

### ஆரம்ப தேயிலைத் தொழில்[20]

| ஆண்டு | பரப்பு (ஏக்.) | ஏற்றுமதி (ருத்.) | மதிப்பு |
|---|---|---|---|
| 1867 | 10 | — | — |
| 1870 | 250 | — | – |
| 1875 | 1,080 | 1,438 | 2,402 |
| 1876 | 1,750 | 757 | 1,907 |
| 1877 | 2,720 | 2,105 | 3,457 |
| 1878 | 4,700 | 19,607 | 20,900 |
| 1879 | 6,500 | 81,493 | 85,229 |
| 1880 | 9,274 | 162,575 | 150,641 |
| 1881 | 13,500 | 348,573 | 322,993 |
| 1882 | 15,000 | 697,268 | 591,805 |

கோப்பியின் விளைச்சல் வீதம் வீழ்ச்சியுறத் தொடங்கத் தேயிலையில் ஆர்வம் அதிகரித்துச் சென்றது. எனினும் 1882-ம் ஆண்டுவரை உள்ள புள்ளி விபரங்கள் அதிகரிப்பு வீதம் பின்

னைய காலங்களோடு ஒப்பிடும்போது குறைவாக இருந்ததென் பதைத் தெரிவிக்கும். ஆரம்பத்தில் தேயிலைப் பயிர்ச் செய்கை யில் ஈடுபட்டவர்களைப் பல பிரச்சினைகள் எதிர்நோக்கின. கோப் பியின் வீழ்ச்சி பல நிலக்கிழார்களைச் சீரழித்திருந்தது. அத் துடன் முதலுக்காக நிதி பெறுவதும் கடினமாக அமைந்தது. தமது நிலங்களை வேறு பயிர்ச் செய்கைக்கு மாற்ற வசதியுள்ளவர்கள் விரைவில் பயன் தரக் கூடிய சிங்கோனா போன்ற பயிர்களையே பயிரிட விரும்பினர். தேயிலை வளர்வதற்கு 3 தொடங்கி 6 வருடங்கள் தேவைப்பட்டன ; அத்தோடு தொழிற்சாலை கட்டவும், பொறிகளை வாங்குதற்குமாகப் பெரும் முதல் தேவைப்பட்டது [21] இலங்கையில் அனுபவம் மிக்க பல பெருந் தோட்டக்காரர்கள் இருக்கவில்லை ; இவ்வேளையில் கூலி களும் கோப்பித் தோட்டங்களில் வேலை செய்வதிலேயே விருப் பம் காட்டினர். இதைவிடப் போதிய அளவு தேயிலை விதை களைப் பெருமளவு பெறுவதில் உள்ள கஷ்டமும் ஒரு முக்கிய அம்சமாக அமைந்தது. அஸ்ஸாமின் தேயிலைத்தொழில் இலங் கையில் தேயிலை விதைக்குச் சடுதியாக எழுந்த கேள்வியைச் சந்திக்கமுடியாதிருந்தது , அத்துடன் இலங்கைக்குப் பெருமள வில் ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையை அடைவதற்கும் பெரு மளவில் ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையை அடைவதற்குப் பல் ஆண்டுகள் எடுத்தன [22]

இலங்கைக்கு விதை நாற்று இறக்குமதி மதிப்பு [23]

| ஆண்டு | ரூபா | ஆண்டு | ரூபா |
|---|---|---|---|
| 1869 | 5,880 | 1880 | 46,672 |
| 1870 | 5,716 | 1881 | 47,712 |
| 1871 | 3,960 | 1882 | 44,617 |
| 1872 | 5,014 | 1883 | 176,327 |
| 1873 | 6,374 | 1884 | 213,000 |
| 1874 | 12,811 | 1885 | 818,815 |
| 1875 | 31,467 | 1886 | 37,222 |
| 1876 | 29,423 | 1887 | 162,389 |
| 1877 | 64,672 | 1888 | 215,866 |
| 1878 | 116,805 | 1889 | 55,765 |
| 1879 | 191,122 | 1890 | 4,783 |

1883-ன் பின் தேயிலைப் பயிர்ச்செய்கையை ஒரு பொருளியல் முயற்சியாக்கி அதன் விரிவடையும் வீதத்தை அதிகரிக்க வேண்டிப் பல சக்திகள் ஒன்று சேர்ந்தன. பிரதியீட்டுப் பயிர்கள் அரைகுறையாகவே பலனளித்தன. சிங்கோனு விலைகள் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்தன; கொக்கோச் செய்கை ஒருசில மாவட்டங்களுள்ளே கட்டுப்பட்டிருந்தது. தேயிலை கடல்மட்டத்திலிருந்து 6000 அடிக்கு மேலும் அமைந்த மண்ணில் நன்கு வளரும் என்பது அறியப்பட்டது. இலங்கைப் பெருந்தோட்டங்களின் விளைச்சல் அஸ்ஸாமின் பழைய தோட்டங்களிலும் அதிகமாயிருந்தது; பொதுவாக ஒரு ஏக்கரின் உற்பத்தி 500 இறுத்தல் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலைக்கும் அதிகமாயிருந்தது; சில வேளைகளில் 1000 இறுத்தலும் உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வேளையில் தேயிலை விதை பெருமளவில் இலங்கைக்கு வந்து கொண்டிருந்தது; பெருந்தோட்டக்காரர்கள் தேயிலைப் பயிர்ச்செய்கையிலும் பண்படுத்தலிலும் அனுபவம் பெற்றுக் கொண்டிருந்தனர். ஏற்கனவே நோயுற்றிருந்த கோப்பிப் புதர்களில் பச்சை உறிஞ்சும் பூச்சிகளின் தாவலும் இதுவரையும்--அதாவது 1880-ன் நடுப்பகுதிவரை--நோயால் பீடிக்கப்படாத ஊவாப்பகுதியின் கோப்பியில் ஹெமிலியா வெஸ்டறிக்ஸ் பீடித்தலும், பழைய கோப்பிச் செய்கையின் வீழ்ச்சியை உறுதிப்படுத்தின. தேயிலைத் தோட்டக்காரர், கோப்பி முனைவர்களை எதிர்நோக்கிய ஒரு சிறுகாலப் பிரச்சினைகளையே எதிர்நோக்க வேண்டியிருந்தது; உடனடியாகக் கோப்பியிலிருந்து தேயிலைக்கு ஒருமனதான மாற்றம் நிகழ்ந்தது. நிலம் மிகையாகக் காணப்பட்டது. கோப்பி நிலங்கள் மாத்திரமல்லாது, கோப்பிக்கென வாங்கப்பட்டுப் பயிரிடப்படாத காட்டு நிலங்களும் வறிதே கிடந்தன.

தேயிலை றப்பர் பரப்பு (ஏக்) [24]

| ஆண்டு | தேயிலை | கோப்பி | ஆண்டு | தேயிலை | கோப்பி |
|---|---|---|---|---|---|
| 1883 | 19,797 | 250,740 | 1890 | 235,794 | 44,217 |
| 1884 | 57,626 | 202,869 | 1891 | 261,179 | 34,927 |
| 1885 | 120,728 | 167,677 | 1892 | 269,854 | 24,044 |
| 1886 | 164,728 | 89,813 | 1893 | 303,886 | 10,664 |
| 1887 | 199,647 | 68,623 | 1894 | 331,466 | 9,056 |
| 1888 | 231,601 | 69,941 | 1895 | 322,810 | 8,832 |
| 1889 | 207,413 | 49,284 | 1896 | 368,824 | — |
| | | | 1897 | 404,574 | — |

## 3. தேயிலைத் தொழிலும் வெளிநாட்டு வர்த்தகத்தின் விருத்தியும்

தேயிலை நிலங்களின் விரைவான வளர்ச்சி 1897 வரை தொடர்ந்து நிகழ்ந்தது. வருடந்தோறும் சராசரி 20 000 ஏக்கர் நிலம் தேயிலைச் செய்கைக்குட்பட்டது.

கால நிலையும், மண்வளமும் கோப்பியிலும் தேயிலைக்கு வாய்ப்புள்ளதாய் அமைந்தன. கோப்பிக்கு ஒழுங்காக இரசாயன வளமாக்கிகள் இடவேண்டியிருந்தது. ஆனால் தேயிலை எக்கால மும் வளரக்கூடிய ஒருபயிர். எனவே அது எந்நிலத்திலும் வளரு தல் இயல்பு. அடிக்கடி கோப்பிச்செடியை நோய் தாக்குதற்கு வாய்ப்பற்ற மண்வளமே காரணமாக அமைந்தது. இதைவிட கோப்பி ஒரு பருவகாலப் பயிராகும்; கோப்பிக் கொட்டை வரண்ட மாதங்களிலேயே சேகரிக்கப்பட்டது. எதிர்பாராத விதமாக ஏற்படும் மழை பயிரைப் பாழ்படுத்துவதோடு பெருந் தோட்டக்காரர்களுக்குப் பெருமளவு நட்டத்தையும் ஏற்படுத் தியது. ஆனால் தேயிலையின் செழிப்பு, மத்திய உயர்பூமி அனுப விப்பது போன்ற நாளாந்த மழையினால் அதிகரிக்கும்.

தேயிலை : மாகாணப் பரம்பல் (ஏக்.) [25]

| ஆண். | மேற்கு | தெற்கு | மத்திய | வ. மே. | ஊவா | சப்ரகமுவா |
|---|---|---|---|---|---|---|
| 1886 | 27485 | 5150 | 128562 | 121 | 3561 | a |
| 1887 | 29629 | 6000 | 153847 | 711 | 10000 | — |
| 1888 | 34896 | 5796 | 190198 | 650 | b | — |
| 1889 | 10995 | 7060 | 150190 | 800 | 14268 | 24250 |
| 1890 | 14922 | 8271 | 167689 | 800 | 18377 | 25735 |
| 1891 | 15974 | 8682 | 179835 | 850 | 23609 | 32279 |
| 1892 | 17338 | 9040 | 195040 | 820 | 25799 | 26287 |
| 1893 | 17750 | 7993 | 212116 | 1396 | 32743 | 32434 |
| 1894 | 19124 | 10075 | 229027 | 1292 | 38145 | 33699 |
| 1895 | 22072 | 11500 | 214504 | 1385 | 34527 | 38915 |
| 1896 | 23959 | 12760 | 246666 | 1440 | 41541 | 52573 |
| 1897 | 27315 | 14540 | 251744 | — | 53500 | 56035 |

இலங்கையில் தேயிலைத் தொழில் நிறுவப்படுதலும் லண்டன் சந்தையில் முக்கிய மாற்றங்களும் ஒரேநேரத்தில் நிகழ்ந்தன வரும் கறுப்புத் தேயிலையில் 80 வீதத்தை ஐக்கிய இராச்சியம்

நுகர்ந்தது. இவ்வாறு லண்டன் விற்பனைகள் தேயிலை விலைகளின் போக்கைக் குறிப்பனவாக அமைந்தன. அஸ்ஸாமிலும் இலங்கையிலும் புதிதாக நிறுவப்பட்ட தொழில்களிலிருந்து பெறப்படுவதும், அதிகரித்து வருவதுமான ஏற்றுமதி காரணமாக லண்டனில் பெருமளவில் தேயிலை கிடைக்கக்கூடியதாயிருந்தது. சிலகாலத்திற்கு ஐக்கிய இராச்சியத்தின் தேயிலை நுகர்ச்சி போதியளவு விரைவாக விரிவடைந்து விலைகளை உறுதியாக வைத்திருந்தது ; ஆனால் 1883-ன் பின் விலை வீழ்ச்சியடையத் தலைப்பட்டது. 1883-ல் தேயிலையின் சராசரி விலை 1 சிலின் 3 பென்சாகும். 1897 அளவில் அது 9 பென்சாக விற்கப்பட்டது. (எல்லாத் தேயிலைக்கும் லண்டனின் மொத்த விற்பனவுச் சராசரி)[26]

ஆரம்பத்தில் உற்பத்தியாளர்கள் கடுமையாகப் பாதிக்கப் படவில்லை. ஏனெனில் அவர்கள் முன்னர் பெரு நயத்தை அனுபவித்திருந்தனர். 1880-ல் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு இறாத்தல் தேயிலையின் உற்பத்திச் செலவு 6 பென்சாக இருந்தது. இந்நேரத்தில் விற்கும் விலை ஒரு சிலிங்கிற்கு மேலாக இருந்தது.[27] நயக்குறைவு பெருந் தோட்டக்காரர்களை அச்சமடையச் செய்யவில்லை. இதைவிட அவர்களால் 1897 அளவில் உற்பத்திச் செலவை 4 பென்சாகக் குறைக்க முடிந்தது.[28] சில பெருந் தோட்டங்கள் 1893 அளவில் நட்டத்தில் இயங்கத் தலைப்பட்டாலும் முழுத்தொழிலையும் நோக்கும்போது அது 1897 வரை நயத்தைக் காட்டியது.[29]

அரசாங்கத்தின் வருவாய் ஏற்றுமதி வர்த்தகத்திற்றான் பெருமளவு தங்கியிருந்தது. இதில் பெருந் தோட்டங்களின் உற்பத்தி பெரும்பங்கை வகித்தது. கோப்பியின் செழிப்புக் காலத்தின்போது தேசியவருமானம், ஏற்றுமதி வரி, துறைமுகத் தீர்வைகள், புகையிரத சேவையால் கிடைத்த நயம் என்பவற்றிலிருந்தே பெறப்பட்டது. கோப்பியின் ஏற்றுமதி வீழ்ச்சியுற வருவாய் பெருமளவு குறைந்தது. ஏனவே பொதுவேலைகளில் செலவிடப்படும் பணம் மிகக் குறைந்த அளவிற்குக் குறைக்கப் பட்டது.

தேயிலைத் தொழிலின் விருத்தியோடும் அதன் ஏற்றுமதியால் கிடைக்கும் வரியோடும் மேலதிகமாகப் புகையிரதசேவை வருவாய்களும் அரசாங்கத்தின் வருவாயை விரைவாக ஈடுசெய்தன. அரசாங்கத்தின் வருவாய் பழைய நிலையை அடைய பொது வேலைத்திட்டங்களில் அதிக பணம் செலவிடப்பட்டது. நானுஓயாவிலிருந்து ஹப்புத்தளை வரை பிரதான இருப்புப்பாதை

நீட்டப்பட்டதோடு தோட்டப் பயிர்ச்செய்கை செய்யும் பிரதேசத்திலும் ஏனைய பிரதேசத்திலுமாக இருப்புப் பாதைகள் அமைக்கப்பட்டன. கொழும்புத் துறைமுகம் அதிகரித்துவரும் வர்த்தகத்திற்கு ஈடுகொடுக்கவேண்டிப் பெருப்பிக்கப்பட்டது.[30] தோட்ட மாவட்டங்களுக்கு வெளியேயும் பெருஞ்செலவு ஏற்பட்டது. சர். ஆர்தர் கோடன், சர் ஆர்தர் ஹவ்லொக், சர் ஆர்தர் வெஸ்ற்றிஜ்வே ஆகிய தேசாதிபதிகளின் காலத்தில் (1882–1903) ஆண்டொன்றிற்கு 4 லட்சம் ரூபாய் நீர்ப்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்யும்பொருட்டுச் செலவிடப்பட்டது.[31]

1897-ம் ஆண்டில் தேயிலைப் பயிர்ச் செய்கையின் விரிவாக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இக்காலத்தில் பெரும்பாலான உற்பத்தியாளர்கள் நயமின்றித் தேயிலையை விற்றனர். தலைக்கு 6 இருத்தலாக அதிகரிக்க நுகர்ச்சியோடு ஐக்கிய இராச்சியமே தொடர்ந்து பிரதான நுகர்ச்சி நாடாக இருந்தது. எவ்வாறெனினும் உற்பத்தி கேள்வியினும் அதிகமாகக் காணப்பட்டது. இலங்கைத் தேயிலையின் சராசரி விலை 1897-ல் 7·71 பென்சாக இருந்தது ; ஆனல் பெரும்பாலான பெருந்தோட்டங்கள் கீழ்நாட்டிலும், இடைநாட்டிலும் காணப்பட்டன. இவை குறைந்த விலையைத் தரும் குறைந்த தர தேயிலையை உற்பத்தி செய்தன.

விலை தொடர்ந்து 1905 வரை வீழ்ச்சியுற்றது; அப்போது இலங்கைத் தேயிலையின் சராசரி விலை 6·99 பென்சாக இருந்தது.[32] இதன் பின்னர் விலை அதிகரித்ததெனினும் போர்வரைக்கும் நயம் சிறிதளவாக இருந்தது ; விரிவாக்கம் நடைபெறவில்லை ; சில தோட்டங்கள் றப்பர்ச் செய்கைக்கு மாறின.

இந்நூற்றுண்டு மாற இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகம் முன்னைய ஆண்டுகளைவிடப் பல வகைகளைக் காட்டிற்று. 1870-ல் தொட்டு தென்னைப் பிரயோசன உற்பத்தி முக்கியமாக எண்ணெயும் கொப்பராவும் மொத்த ஏற்றுமதியோடு தொடர்புபட்ட அளவில் அதிகரித்தன. 4½ வீதத்திலிருந்து 9 வீதமாக 1880 லும், 15 வீதமாக 1890 லும் 17 வீதமாக 1900 லும் 24·5 வீதமாக 1910 லும் அதிகரித்தது.[33] இது இலங்கையின் இரண்டாவது முக்கிய ஏற்றுமதிப் பொருளாக இருந்தது. இது தேயிலையைப் போலன்றி, குடியானவரின் உற்பத்தியாகும். சிறிய ஆட்சி நிலங்களிலும் குடியானவரின் தோட்டங்களிலும் ஒழுங்கற்ற முறையில் தென்னை வளர்க்கப்பட்டது. இது கடற்கரையின் மணல் நிலங்களிற் செழிப்புற்று வளருமாகையால் மேற்கு, தென்மேற்குக் கரைகளில் புத்தளம் தொட்டு மாத்தறை

வரையுள்ள பகுதிகளிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், கிழக்கு மாகாணத்தின் கரையோரத்திலும் வளர்க்கப்பட்டது. 1860-ல் 2 இலட்சம் ஏக்கர் நிலம் தென்னைச் செய்கைக் குட்பட்டிருந்தது என மதிப்பிடப்பட்டது.[34] 1900 அளவில் அது 6 இலட்சத்தை அடைந்தது. இவற்றுள் 10 வீதமே பெருந்தோட்டக்காரர் கையில் இருந்தது. இப்பெருந் தோட்டங்கள் சுதேச முதலாளிகளின் கையில் இருந்தன. தென்னையைப் பொறுத்த அளவில் ஐரோப்பிய முயற்சி சந்தையளவிற் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. தென்னிந்தியாவில் ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த தாபனங்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தென்னைப் பொருட்களை ஓரளவிற்குப் பயன்படுத்தித் தொழில் நடத்தின.[35]

## 4. பெருந்தோட்ட றப்பர்த் தொழில்

வருவாய் மிக அளிக்காத தேயிலை விலைகளின் விளைவாகப் பெருந் தோட்டத் துறைகளில் ஏற்பட்ட மந்தம் றப்பர்த் தொழில் விருத்திக்குரிய வாய்ப்புக்களை மேலும் அதிகரித்தது. றப்பர் தரும் மரங்கள் 1880-ல் இலங்கைக் கறிமுகப்படுத்தப்பட்டனவேனும், ஒழுங்கான பயிர்ச்செய்கை அந்நூற்றுண்டு மாறுமட்டும் நிகழவில்லை. தேயிலைத் தொழிலை நன்கு நிறுவுவதில் முனைந்திருந்த பெருந்தோட்டக்காரர்களால், தமது நேரத்தையோ அன்றி வருவாய்களையோ, றப்பரிற்கெனச் செலவிட முடியாதிருந்தது. றப்பர் பெறவேண்டி ஆரம்பத்தில் நிகழ்ந்த பரிசோதனைகள் ஊக்கத்தை நல்குவனவாக அமைந்தில. இப்பரிசோதனைகள் கஸ்டில்லோவா, சியரா என்னும் இனங்களைக் கொண்டு நடைபெற்றன; பின்னர் இவை இலங்கையின் மண்வளத்திற்கும் காலநிலைக்கும் ஏற்றனவல்ல என்பது கண்டு பிடிக்கப்பட்டது. அந்நூற்றுண்டின் இறுதியில் தென்னமெரிக்சுப் 'பாரு' றப்பர் புகுத்தப்பட்டது; அது நல்ல விளைவைத் தந்தது, அவ்வினத்தின் அடிப்படையிற்றுன் இலங்கையின் றப்பர்த் தொழில் அமைந்தது. பாரு றப்பர் நல்லதொரு சந்தர்ப்பத்தில் புகுத்தப்பட்டது; இக்காலத்தில், மோட்டார்த் தொழிலின் விருத்தி காரணமாக கழிவு றப்பருக்கும் உயர்ந்த விலை கொடுக்கப்பட்டது.[36]

1900-ல் ஒடுக்கப்பட்ட நிலங்களிலோ அன்றித் தேயிலையின் இடையேயோ பயிரிடப்பட்ட றப்பர் கொண்ட நிலம் 1750 ஏக்கராகும். ஒரு சிலரே றப்பரைத் தனித்துப் பயிரிட்டனர்.

1904-ல் சிறந்த பாரு றப்பர் 5 சிலிங் விலைபெறத் தொடங்க, றப்பர்த் தொழிலில் உண்மையான ஆர்வம் தொடங்கியது. இவ் விலையேற்றம் 1905 ல் அது சிலங்காக உயர்வதற்கு ஒரு ஆரம்பப் படியாக அமைந்தது. உயர்ந்த விலைகள் 1908 ம் வரை நிலவியது[37] இச் செழிப்புக்காலத்தில் 1,50.000 ஏக்கர் றப்பரின் கீழ் வந்தது. இச்செழிப்பு சருவதேசச் செழிப்பாக அமைந்தது. கீழைத் தேயத்தில் முதலீடு செய்யவேண்டிப் புதுத் தாபனங்கள் தோன்றின, அமெரிக்க ஐரோப்பிய வர்த்தக மையங்களில் பங்குகள் விலைக்கு வந்தன. வெளியே இருந்து வந்த முதலீட்டின் ஒரு பகுதியை இலங்கையும் பெற்றது, மலாயாவே இதிற் பெரும் பங்கைப் பெற்றது. அபிவிருத்திக்காகத் தேவைப்பட்ட நிதி, இலங்கையிலிருந்த பெருந்தோட்ட முகவர்களாலும் தேயிலைத் தாபனங்களாலும் திரட்டப்பட்டன.[38]

மலாய றப்பர்த் தொழிலோடு ஒப்பிடின் இலங்கையில் அதன் வளர்ச்சி படிப்படியாகவே நிகழ்ந்தது. 1905 ன் செழிப்பின் போது மலாயாவிற் பெரும் படியான அபிவிருத்தி நிகழ்ந்தது. 1910-ல் சிறந்த கடும் றப்பரின் விலை 12 சி. $8\frac{3}{4}$ பென்சாக உயர்ந்த போது ஏற்பட்ட செழிப்பின் போது இவ்வபிவிருத்தி பன்மடங்கு பெரிதாக அமைந்தது.[39] இரண்டாவது செழிப்பு இலங்கையை அவ்வளவு பாதிக்கவில்லை; விரிவாக்கத்தில் ஒரு வகைப்பட்ட உறுதிநிலை இலங்கையிற் காணப்பட்டது. நன்னிலங்கள் காணப்படாமையும், தேயிலை விலை அதிகரித்துச் சென்றபடியால் றப்பர் தேயிலையினிடத்தைப் பெறுவது நயமற்றதாய் அமைதலுமே விருத்திக்குத் தடையாய் அமைந்தன. வெளிநாட்டு மூலதனம் காட்டிய சொற்ப ஆர்வத்திற்கு இதுவே காரணமாகும்.[40]

றப்பர் விளை நிலப்பரப்பு[41]

| ஆண்டு | இலங்கை | மலாயா |
|---|---|---|
| 1900 | 1750 | — |
| 1904 | 25000 | — |
| 1905 | 40000 | 40000 |
| 1906 | 100000 | 85000 |
| 1907 | 150000 | 126235 |
| 1908 | 180000 | 168045 |
| 1909 | 184000 | 196953 |
| 1910 | 203000 | 246774 |
| 1911 | 215000 | 352974 |
| 1912 | 217000 | 399197 |
| 1913 | 229000 | 433324 |

றப்பரின் விருத்தி ஏற்றுமதியைப் பல்திறப்படுத்தியது. முதலாம் உலகப்போரின்போது இலங்கையின் ஏற்றுமதியில் 90 வீதத்தை தேயிலை றப்பர் தென்னை என்பன வகித்தன. புதுப் பயிர்கள் புகுத்தப்பட்ட பின்னரும் கோப்பிக் காலத்துப் பொருளாதார அமைப்பு மாறவில்லை. பெருந் தோட்டத்துறையினதோ அன்றிக் குடியானவரது துறையினதோ பொருளாதாரத்தைப் புதுப்பயிர்கள் மாற்றவில்லை. ஆனல் காணப்பட்ட ஒரேஒரு வேற்றுமை என்னவெனில், தேங்காய் உற்பத்தி குடியானவர்களை வெளிநாட்டு வர்த்தகத்துடன் தொடர்புகொள்ளச் செய்தமையே.

## 5 முதலாம் உலகப் போரும் சந்தையிற் சமநிலையின்மையும்

மேற்கு ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்குமான இலங்கையின் ஏற்றுமதி பல கஷ்டங்களைப் போர்க்காலத்தில் ஏற்படுத்தியது ; ஆனல் வளமாக்கிகளின் பற்றுக்குறையைத் தவிர்ந்த ஏனையவை 1915 வரை புலப்படவில்லை. போரின் முதலிரு ஆண்டுகளிலும் தேயிலை, றப்பர் விலைகள் அதிகரித்தன. தேயிலை சராசரி 11 சிலிங் 7 பென்சாகவும், றப்பர் $2\frac{1}{2}$ சிலிங்காகவும் 1914-ல் விற்கப்பட்டது.[43] போர் அதிகரிக்க ஏற்றுமதி தடைப்படுமெனக் கருதிய பிரித்தானியா, அதிகமாக இறக்குமதி செய்து சேமித்துவைக்க விரும்பியமையாலும், ஆயுதந் தாங்கிய படைகளுக்குப் பெருமளவு தேவைப்பட்டபடியாலும், தேயிலையின் ஏற்றுமதி அதிகரித்தது. ஆனல் றப்பர் போர்முயற்சிக்கு முக்கியமற்றதாகையால், அதன் கேள்வி வீழ்ச்சியடைந்தது. சிறிதளவு றப்பரே பிரித்தானியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இவ் வீழ்ச்சியை அமெரிக்காவிற்கு நிகழ்ந்த ஏற்றுமதி நிரவியது. போர்க்காலத்தில் அமெரிக்கா இலங்கையின் பண்படுத்தாத றப்பரின் பிரதான நுகர்வோனுக மாற அமெரிக்கச் சந்தை உறுதிப்படுத்தப்பட்டது இவ்வம்சம் போரின் பின்னரும் முக்கியமானதாக அமைந்தது. இதன் பின் பண்படுத்தாத றப்பரின் விலை அமெரிக்கத் தொழிற்றேவையோடு ஒரு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. 1915-ம் ஆண்டின் இறுதிப் பகுதியளவில் ஏற்றுமதிக்குரிய வழக்கான வழிவகைகள் மூடப்பட்டிருந்தன ; அவற்றுள் மூன்று மூக்கிய பயிர்களுக்குமுரிய ஏற்றுமதி கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டது. கப்பல்களில் ஏற்றுமதிப் பொருட்களை அனுப்பிவைத்தற்கு இடம் பெறுதல் மிக முக்கிய

இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகம் : மொத்த மதிப்பின் சதவிதம்[42]

| | 1911 | 1912 | 1913 | 1914 | 1915 | 1916 | 1917 | 1918 | 1919 | 1920 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாக்கு | 1·3 | 1·4 | 1·2 | — | 1·2 | — | — | 1·8 | — | 1·1 |
| கறுவா | 1·1 | 1·4 | 1·0 | — | — | — | — | 1·0 | — | — |
| கொக்கோ | 1·3 | 1·4 | 1·3 | — | 1·1 | — | — | 1·1 | — | — |
| தெங்கு | 19·8 | 15·3 | 20·7 | 15·4 | 14·4 | 13·2 | 10·6 | 15·8 | 22·6 | 24·1 |
| காரீயம் | 3·7 | 4·2 | 3·9 | 1·9 | 2·9 | 7·6 | 7·1 | 2·3 | — | — |
| றப்பர் | 20·0 | 28·8 | 28·4 | 28·2 | 30·5 | 37·5 | 44·7 | 32·1 | 37·8 | 34·1 |
| தேயிலை | 46·6 | 42·1 | 37·4 | 40·9 | 44·8 | 35·4 | 31·2 | 39·0 | 37·7 | 29·2 |
| ஏனைய. | 2·2 | 5·4 | 5·9 | 7·4 | 5·1 | 6·3 | 6·4 | 7·9 | 6·9 | 11·5 |

மான கட்டுப்படுத்தும் காரணியாக இருந்தது ; ஏற்றுமதிச் செலவு நன்கு உயர்ந்தது. கட்டுப்பாடற்ற நீர்மூழ்கிச் சண்டையில் இருந்து காத்துக்கொள்ளவேண்டிக் கப்பல்கள் சுவெஸ் வழியாகச் செல்லவேண்டி ஏற்பட்டதால் இப்பிரச்சினை உச்ச நிலையை அடைந்தது.

இத்தீவின் மூன்று முக்கிய ஏற்றுமதிகளின் பிரதிபலிப்பு நுகர்வோரது சந்தையின் தன்மைக்கும் ஒவ்வொரு பொருளினதும் கேள்விக்கேற்பவும் வேறுபடும். தேயிலையின் முக்கிய சந்தையாக ஐக்கிய இராச்சியம் அமைந்தது. தேயிலை போரினை ஊக்கப்படுத்துதற்கு இன்றியமையாதது எனக் கருதப்பட்டது. 1915-ன் பிற்பகுதியில் கப்பற் போக்குவரத்து கடினமானதாய் அமைந்தபோதிலும் நிரந்தர நிரம்பலை அளிக்கப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ் ஐக்கிய இராச்சியத்தின் இறக்குமதி வினியோகம் கொண்டு வரப்பட்டது.

உற்பத்தியாளரோடு பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் உணவு அமைச்சு, தேயிலையை அவர்களிடம் நேரடியாகப் பெற்று அதற்கு ஏற்ற விலையைக் கொடுத்தது. ஒரு குறிக்கப்பட்ட அளவு தேயிலையே கொள்வனவு செய்யப்பட்டதாலும், தனிப்பட்டோரது ஏற்றுமதி தடைசெய்யப்பட்டபடியாலும் இலங்கையின் ஏற்றுமதி 1917--18-ல் குறைந்தது. எனவே உற்பத்தியாளரிடம் பெருந்தொகையான தேயிலை தேங்கிக் கிடந்தது.[44] இத்தகைய கட்டுப்பாடுகளே இந்தியாவிலும் நிகழ இத்தகைய விளைவுகளே அங்கும் ஏற்பட்டன.

ஐக்கிய அமெரிக்கா போரில் ஈடுபட்டதனுல் றப்பரின் ஏற்றுமதி குறையவே ஐக்கிய இராச்சியத்திற்குரிய ஏற்றுமதி குறைக்கப்பட்டதனுல் ஏற்பட்ட பிரச்சினைகள் மிகவும் மோசமடைந்தன.[45] இத்துடன் றப்பரின் மொத்தத் தொகை கப்பற் போக்குவரத்துப் பிரச்சினையை அதிகரித்தது. விலை வீழ்ச்சியுறத் தொடங்கியதேனும் செலவிற்கும் வருமானத்திற்குமிடையே அதிக வித்தியாசம் காணப்பட்டபடியால் பயிர்ச் செய்கையும் உற்பத்தியும் நயம் தருவனவாகக் காணப்பட்டன. றப்பர்க் கைத்தொழிலில் இருமுக்கிய போக்குகள் போராண்டுகளிற் காணப்பட்டன. 1914-ன் முன்னர் நிரம்பல் கேள்விக்கமைய இருக்கவில்லை. இதன் விளைவாக விலைகள் மிகையானவையாய்க் காணப்பட்டன. நூற்றுண்டுத் தொடக்கத்தில் பயிரிடப்பட்ட நிலங்களில் இருந்து உற்பத்தி கிடைத்ததால் நிரம்பல் அதிகரித்தது. அத்தோடு சந்தையும் போட்டித்தன்மை யுடையதாகக் காணப்பட்டது. பால்தரு மரங்கள் முதிர்ச்சியடைந்து காணப்பட்டமையும், தொழில் நுட்பங்கள் விருத்தியடைந்து காணப்பட்டமையும் உற்பத்திச் செலவைக் குறைத்த மற்றைய போக்காகும். இவ்விரு போக்குகளும் ஒன்றையொன்று ஈடு செய்தன. எனவே இவ்வாண்டுகளில் றப்பரே வருவாய் தரும் பிரதான வழியாக அமைந்தது. 1914--18 வரையில் ஒரு லட்

சத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் இத்தொழிலில் சேர்க்கப் பட்டன. இத்துடன் குறிப்பிடத் தக்க அளவு பெருந்தோட்டங் களும், சிறு ஆட்சி நிலங்களும் சுதேசக் கட்டுப்பாட்டில் இருந் தன. இத்தகைய வாய்ப்புக்களைக் கொண்ட மலாயாவும் டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளும் சிறு ஆட்சி நிலக்கிழார்களே உற்பத்தி யின் முக்கிய கர்த்தாக்கள் என்பதை நிலைநிறுத்தின.

தெங்குப் பொருள் ஏற்றுமதி கப்பற் போக்குவரத்துக் குறைவால் அதிகம் பாதிக்கப்பட்டது. ஐக்கிய இராச்சியமே இதன் பிரதான நுகர்வோனாய் அமைந்தது. எனவே போக்கு வரத்து அருமையாக நுகர்வு குறைந்தது. நான்கு யுத்த ஆண்டு களில் தெங்குப்பொருளின் விலைவீழ்ச்சி சுமார் 50% எனக் கணக்கிடப்பட்டது. 1913-ல் 20 7% தத்தில் இருந்து 1917-ல் 10·6% என்ற முறையில் தெங்கு ஏற்றுமதியின் பெறுமதி வீழ்ச்சியடைந்தது. இந்நிலையில் சிறு ஆட்சி நிலக்கிழார்கள் றப்பர் உற்பத்தியில் ஈடுபடத் தலைப்பட்டனர்[46]

தெங்குப் பொருள்களின் விலை[47] (ரூபா சதத்தில்)

| ஆண்டு | கொப்பரா (கண்டி) | எண்ணெய் (தொன்) | தெங்குமா (ருத்.) | கயிறு (அந்.) | தும்பு (அந்.) |
|---|---|---|---|---|---|
| 1913 | 91·88 | 619·94 | 00·24 | 13·57 | 10·40 |
| 1914 | 73·39 | 550·70 | 00·22 | 12·48 | 9·40 |
| 1915 | 61·73 | 516·77 | 00·19 | 10·58 | 7·36 |
| 1916 | 64·77 | 545·27 | ·19 | 9·99 | 8·11 |
| 1917 | 38·43 | 463·80 | ·16 | 9·20 | 5·93 |
| 1918 | 47·81 | 594·96 | — a | — a | — a |
| 1919 | 94·13 | 759·60 | 28 | 9·80 | 10·08 |
| 1920 | 109·53 | 782·75 | 29 | 10·64 | 15·10 |

யுத்த நாளில் இத்தகைய கஷ்டங்கள் இருந்த போதிலும் தேயிலை, றப்பர்க் கம்பனிகள் போதிய அளவு நயத்தை ஈட்டின. கீழ்வரும் அட்டவணை தேயிலை றப்பர்க் கம்பனிகளின் நிதி நிலை களைக் காட்டும்.

### தேயிலை றப்பரால் ஸ்டேலிங் கொம்பனி விளைவுகள்
### ரூபா கொம்பனி விளைவுகள் [48]

| ஆண்டு | சராசரி சாதாரண லாப வீ. | கொம் பனி தொ. | வருமான மில் கொம் பனிகள் | சராசரி சாதாரண லாப வீ. | கொம் பனி தொ. | வருமான மில் கொம் பனிகள் |
|---|---|---|---|---|---|---|
| 1911 | — | — | — | 15·32 | 31 | 2 |
| 1912 | — | — | — | 17·11 | 34 | 2 |
| 1913 | 12·71 | 53 | 5 | 12·18 | 37 | 9 |
| 1914 | 11·52 | 56 | 9 | 13·79 | 41 | 10 |
| 1915 | 18·27 | 56 | 2 | 27·82 | 40 | 3 |
| 1916 | 17·26 | 56 | 2 | 18·17 | 43 | 6 |
| 1917 | 15·08 | 56 | 4 | 15·37 | 43 | 10 |
| 1918 | 12·24 | 56 | 3 | 11·46 | 43 | 11 |
| 1919 | 15·84 | 56 | 4 | 10·43 | 44 | 12 |
| 1920 | 3·10 | 56 | 36 | 1·18 | 44 | 36 |
| 1921 | 6·78 | 56 | 26 | 98·06 | 44 | 13 |
| 1922 | 12·70 | 56 | 12 | 15·83 | 43 | 4 |

### பயிர்செய் பரப்பு [49]

| ஆண்டு | தேயிலை | றப்பர் | தெங்கு | கொக்கோ |
|---|---|---|---|---|
| 1913 | 482743 | 232731 | 948474 | 36143 |
| 1914 | 486536 | 168178 | 973503 | 34129 |
| 1915 | 426816 | 198588 | 977701 | 41538 |
| 1916 | 498064 | 221632 | 968630 | 45183 |
| 1917 | 508779 | 294160 | 904674 | 44280 |
| 1918 | 555689 | 281491 | 925921 | 30851 |
| 1919 | 499538 | 308687 | 1011570 | 31235 |
| 1920 | 502645 | 320131 | 945057 | 31750 |
| 1921 | 418135 | 390115 | 820201 | 33229 |

## 6 போரின் பின் சமமில் நிலை :

போரின் பின்னர் நிலவிய தன்மைகளுக்கேற்ப குறிப்பிடத் தக்க அளவில் தேயிலை, றப்பர்த் தொழில் வேறுபட்டமைந்தன. கப்பற் போக்குவரத்துச் சுலபமாகியதாலும் நுகர்ச்சி நாடுகளிலும் உற்பத்தி நாடுகளிலும் இருப்பில் இருந்த சரக்கு விடுவிக்கப்பட்டமையாலும் கேள்விக்கு மிஞ்சிய நிரம்பல் ஏற்பட்டது. எனவே, பொருட்களை வாங்கும் ஒவ்வொரு நுகர்வோனும் வெளியீட்டைக் கட்டுப்படுத்தும், ஒரு அளவு பொருளை வாங்கினுன் என்று கூறலாம்.

இலங்கைத் தேயிலை ஏற்றுமதிப் பரம்பல் [50]

| | 1921 | 1922 | 1923 | 1924 | 1925 | 1926 | 1927 | 1928 | 1929 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஐக்கியராச்சியம் | 69·5 | 69·2 | 66·6 | 65·3 | 64·3 | 65·6 | 64·3 | 59·5 | 62·0 |
| அவுஸ்திரேலியா | 9·3 | 7·1 | 6·0 | 7·6 | 7·4 | 7·5 | 8·0 | 8·4 | 8·0 |
| தெ. ஆபிரிக்கா | — | — | — | — | — | 3·1 | 3·5 | 3·1 | 3·4 |
| கனடா | 2·4 | 3·3 | 3·4 | 3·8 | 3·1 | 2·7 | 2·5 | 3·1 | 2·6 |
| நன்னம்பிக். முனை | 1·4 | 1·4 | 1·4 | 1·5 | — | — | — | — | — |
| ஈராக் | — | — | — | — | — | 1·5 | 1·2 | 2·5 | 1·5 |
| நெதர்லாந்து | 1·5 | 1·9 | 1·8 | 1·5 | 1·8 | — | — | — | — |
| நியூசிலந்து | 3·0 | 3·3 | 3·6 | 2·9 | 3·4 | 4·0 | 3·8 | 4·1 | 4·1 |
| சிலி | — | — | — | — | — | — | 1·5 | — | — |
| எகிப்து | 1·1 | 1·5 | 2·7 | 2·2 | 3·0 | 2·3 | 2·4 | 3·6 | 3·0 |
| ரஷியா (ஆசியா) | — | — | — | — | — | — | — | 1·5 | — |
| ரஷியா (ஐரோப்.) | — | — | — | — | — | — | — | — | 1·1 |
| ஐ. அ. நாடுகள் | 8·8 | 7·7 | 8·2 | 7·5 | 7·4 | 7·0 | 6·0 | 6·4 | 6·6 |
| ஏனையன | 3·1 | 4·4 | 6·3 | 7·7 | 9·7 | 6·4 | 6·7 | 8·4 | 6·8 |

இலங்கையின் றப்பர் ஏற்றுமதிப் பாம்பல் (%) [51]

| | 1921 | 1922 | 1923 | 1924 | 1925 | 1926 | 1927 | 1928 | 1929 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஐக். இராச். | 33·6 | 21·1 | 26·4 | 23·7 | 26·6 | 31·0 | 27·7 | 22·5 | 22·2 |
| பிரித். பிரதே. | — | 1·1 | — | — | 2·0 | 1·9 | 2·9 | 2 2 | 3 5 |
| பிரான்சு | — | — | 1·6 | 2·1 | 1·2 | 1·3 | 1·1 | 2·4 | 1·9 |
| ஜெர்மனி | 4·9 | 4·2 | 2·3 | 4·8 | 3·6 | 2·6 | 2·9 | 5·3 | 5·7 |
| இத்தாலி | — | — | — | — | — | — | — | — | 1·3 |
| அ. ஐ. நா. | 58·8 | 71·4 | 66·6 | 67·2 | 65·4 | 6·9 | 63·2 | 65·2 | 63·3 |
| ஏனையவை. | 2·8 | 2·2 | 3·1 | 2·2 | 1·2 | 1·4 | 1·4 | 1·9 | 2·0 |

ஏனைய உற்பத்தி நாடுகளை முக்கியமாக டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளைப் போலன்றி, இலங்கையிற் போதிய அளவு தேயிலையின் நிலப்பரப்பு அதிகரிக்க வில்லையேனும், சந்தை நிரம்பியதால் ஏற்பட்ட விளைவுகளுள் தனக்குரிய பங்கை இலங்கை அனுபவித்தது. இலங்கை இப்பொழுது ருஷியாவின் பச்சைத் தேயிலைச் சந்தையை இழந்தது ; அத்துடன் இத்தேயிலையைத் தானுகவே கைவிடவேண்டிய நிலையும் ஏற்பட்டது. தேயிலைத் தொழிலில் நிரந்தரத் தன்மையை ஏற்படுத்த வேண்டி இலங்கையிலும் இந்தியாவிலும் 1920-ல் வரையறை செய்யும் ஒரு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

போர்க் காலத்தில் றப்பரின் பரப்பளவு இலங்கையில் அதிகரித்தது. டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் போரின் பின் நிலவிய ஆண்டுகளில் இரண்டாவது பெரிய உற்பத்தியாளனுய்த் தம்மை நிறுவின. உற்பத்தியதிகரிப்பு, ஐக்கிய அமெரிக்க, ஐரோப்பிய கைத்தொழில் மந்தம் என்பவற்றின் விளைவாக நுகர்ச்சி பாதிக்கப்பட்டது. கைத்தொழிற் சமமின்மை வேகம் அதிகரித்ததன் விளைவாகப் பாதுகாப்புக் கட்டுப்பாட்டு முறைகள் போர்க்கால முடிவிற் கொண்டுவரப்பட்டன. உறுதி நிலையின் சாயல் தோன்ற முன்னரேயே 1920-ல் வரையறை செய்யும் திட்டம் கட்டாயமாக்கப்பட்டது.

தெங்குப் பொருள் விலையின் வரலாறு முற்றிலும் வேறுபட்ட ஒன்ருக அமைந்தது. தெங்குப் பொருளைச் சேமித்து வைக்க முடியாது. எனவே பொருட்கள் இருப்பிற் குவியவில்லை. விலைகள் குறைய உற்பத்தியும் குறைக்கப்பட்டது. நன்கு நிறுவப்படாத சுதேசத் துறையினரால் நிருவகிக்கப்பட்ட இத்தொழில் போர்க்காலத்தின் இறுதியில் திடீரென ஏற்பட்ட கேள்வியைச் சந்திக்க முடியாததால் விலைகள் அதிவிரைவாக உயர்ந்தன. உயர்விலைகள் உற்பத்தி அதிகரிக்காதபடியால் 1922 வரை நிலைத்திருந்தன.

1922--1930 வரை ஏற்பட்ட மந்தநிலைக் காலங்களில் தெங்கின் விலை தேயிலை, றப்பர் விலையிலும் உறுதி பெற்றிருந்தது. ஏனெனில் தேயிலை, றப்பர் என்பன பெருந் தோட்டங்களினின்று அதிக செலவிற் பெறப்பட தெங்குப்பொருள் சிறு ஆட்சி நிலங்களில் இருந்து வந்ததால் செலவு குறைந்தமைய விலை நிலையாய் அமைந்தது. தேயிலை றப்பரில் உற்பத்தியைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் சாத்தியமானதன்று. ஆனுல் குடியானவர்களோ விலை வீழ்ச்சிக்கேற்ப பயிரை மாற்றியமைக்கவோ, அல்லது வேறுபயிர் செய்யவோ வல்லவர்களாய் அமைந்தனர் தேயிலை றப்பரைப் போலனறி தெங்குற்பத்தியைப் பொறுத்த அளவில் சந்தையைப் பாதித்தற்கு ''இருப்புகள்' இல்லை புதிதாகச் சந்தைக்கு வரும் பொருட்களே விலையை நிர்ணயித்தன.

## 7. பெருந்தோட்டப் பயிர்கள் 1922—31

இலங்கைப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் வரலாற்றில் 1922-ம் ஆண்டு ஒரு திருப்பமாக அமைந்தது. போரினுல் ஏற்பட்ட கஷ்டங்கள் நீங்கின ; வெளிநாட்டு எரு வகைகளை இலகுவிற் பெறக்கூடியதாய் இருந்தது. நுகர்ச்சி நாடுகளும் கொள்வனவு வலுவை மீண்டும் பெற்றன. இதன் பின்னர் சந்தையைப் பாதிக்கும் காரணிகள் வெளிச் செல்வாக்கின் கீழிருக்கவில்லை. ஏற்றுமதிச் செலவில் ஏற்றத் தாழ்ச்சிகள் காணப்பட்டனவேனும் அவை குறைந்து சாதாரண நிலை மீண்டும் நிலவியது.

இலங்கை மொத்த நிரம்பலில் ஒருசிறு பகுதியை அளித்ததாலும், அந்நிரம்பல் தேயிலை, றப்பர்த் தெங்குப் பொருட்களில் தங்கியிருந்ததாலும் உலகச் சந்தையின் விலையில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்ச்சிகள் முக்கிய பங்கை வகித்தன. 1922-ல் சர்வதேச றப்பர் வெளியீட்டில் இலங்கை 12·5%த்தையும், 1931-ல் 9%த்தையும் அளித்தது 1931-ல் 25% தேயிலையையும் 20% தெங்குப் பொருட்களையும் உற்பத்தி செய்தது. எனவே விலை இலங்கை உற்பத்தியாளனின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டிருந்தது

ஐக்கியராச்சியத்திற்கான கப்பல் தீர்வை (தொன்னுக்கு)[52]

| தேயிலை | | | றப்பர் | | |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் 4, | 1921 | 100 சி | ஏப்ரல் | 1921 | 100 சி |
| ஏப்ரல் 11, | 1921 | 65 சி | யூன் | 1921 | 65 சி |
| யூன் | 1921 | 75 சி | ஒக்டோ. | 1921 | 70 சி |
| ஆகஸ்ட் | 1921 | 65 சி | நவம்பர் | 1922 | 60 சி |
| ஒக்டோபர் | 1921 | 70 சி | பெப்ரவரி | 1923 | $52\frac{1}{2}$ சி |
| நவம்பர் | 1921 | 60 சி | மே | 1924 | $57\frac{1}{2}$ சி |
| பெப்ரவரி | 1922 | 50 சி | டிசம்பர் | 1924 | $62\frac{1}{2}$ சி |
| பெப்ரவரி5, | 1922 | $47\frac{1}{2}$ சி | யூலை | 1925 | $72\frac{1}{2}$ சி |
| ,, 26, | 1922 | $52\frac{1}{2}$ சி | ஒக்டோபர் | 1925 | $77\frac{1}{2}$ சி |
| யூன் | 1922 | 55 சி | சனவரி | 1927 | 70 சி |
| யூன் 22 | 1922 | $57\frac{1}{2}$ சி | மே | 1928 | 65 சி |
| மே | 1931 | $52\frac{1}{2}$ சி | மே | 1931 | $52\frac{1}{2}$ சி |

ஏற்றுமதி வர்த்தகம் : மொத்த மதிப்பின் வீதம் : 1921-27[53]

| | 1921 | 1922 | 1923 | 1924 | 1925 | 1926 | 1927 | 1928 | 1929 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாக்கு | 1·3 | 1·1 | 1·1 | — | — | — | — | — | — |
| கறுவா | — | — | — | — | — | — | 1·1 | 1·3 | — |
| கொக்கோ | — | 1·1 | — | — | — | — | — | — | 1·0 |
| தேங்காய்மா | 10·4 | 6·8 | 6·5 | 5·7 | 3.8 | 3·4 | 4·6 | 5·1 | 2·9 |
| கயிறு | — | 1·1 | 1·3 | 1·4 | — | — | 1·2 | 1·2 | 1·1 |
| கொப்பரா | 9·5 | 9·7 | 5·2 | 8·0 | 7·8 | 7·8 | 7·1 | 8·1 | 6·5 |
| எண்ணெய் | 5·9 | 5·0 | 4·0 | 4·1 | 3·4 | 3·1 | 3·7 | 4·9 | 4·4 |
| றப்பர் | 21·0 | 22·4 | 1 7·9 | 37·6 | 36·6 | 36·6 | 28·9 | 20 6 | 22·9 |
| தேயிலை | 43.9 | 49·0 | 52·9 | 55·8 | 40·5 | 42·3 | 40·6 | 51·3 | 50·4 |
| பொன் | — | — | — | — | — | — | — | — | 4·0 |
| ஏனையவை | 8.1 | 6·2 | 6·6 | 7·1 | 6·9 | 6·7 | 6·0 | 7·7 | 6·8 |

உலகில் றப்பர் தேயிலை தெங்குப் பொருட்களின் பரம்பலில் இலங்கையின் நிலையினைக் கீழ்வரும் அட்டவணைகள் வாயிலாக அறியலாம்.

### 1929ன் இறுதியில் றப்பரின் கீழிருந்த பரப்பு (ஏக்.)[54]

| | முதிர்ச்சியடைந்தது | முதிராதது | மொத்தம் |
|---|---|---|---|
| மலாய | 2,475,000 | 470,000 | 2,945,000 |
| டச்சுக் கிழக் கிந்தியதீவுகள் | 2,125,000 | 1.030,000 | 3,155,000 |
| இலங்கை | 490,000 | 50,000 | 540,000 |
| சரவாக் | 850,00 | 175,000 | 260,000 |
| இந். (பர்மாஉட்பட) | 130,000 | 40,000 | 170,000 |
| பிரி. வடபோணியோ | 80,000 | 40,000 | 120,000 |
| பிர. இந்து சீனம் | 100,000 | 195,000 | 295,000 |
| சீயம் | 35,000 | 1,15,000 | 150,000 |
| மொத்தம் | 520,000 | 2,115,000 | 7,635,000 |

### உற்பத்தி நாடுகளின்
### ஆண்டுக்குரிய தேயிலை ஏற்றுமதி (1000 இறாத்தல்)[55]

| | 1929 | 1930 |
|---|---|---|
| இந்தியா | 382,918 | 359,296 |
| இலங்கை | 251,588 | 243,117 |
| டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் | 159,724 | 158,774 |
| சீனு | 126,364 | |
| யப்பான் | 18,320 | |
| போமோசா | —(a) | —(a) |
| பிரஞ்சிந்தோ சீனம் | 2,238 | 1,204 |
| நியாசாலாந்து | 1,755 | 1,940 |
| கெனியா | — | 161 |
| உகண்டா | — | — |
| தங்கனிக்கா | — | — |
| தென்னுபிரிக்கா | 260 | 79 |
| மொசம்பிக் | 124 | 116 |
| | 966,959 | 895,6[illegible]1 |

உலக தெங்குப் பரப்பு 1931 [56]

| | பரப்பு | பரப்பு% |
|---|---|---|
| இந்தியா | 1,400,000 | 20 |
| இலங்கை | 1,100,000 | 15 |
| மலாயா | 600,000 | 8 |
| பிரி. தென்கடற் தீவுகள் | 600,000 | 8 |
| பிரி. மேற்கிந்தியத் தீவுகள் | 100,000 | 1 |
| பிரி.போர்ணியோ கெனியாவும் ஏனையவும் | 100,000 | 1 |
| டச்சுக் கிழக்கிந்திய தீவுகள் | 1500,000 | 21 |
| பிலிப்பைன் தீவுகள் | 1400,000 | 20 |
| வெளி தென் கடற்தீவுகள் | 300,000 | 4 |
| சீயம் | 100,000 | 1 |
| மொசம்பிக், பிரஞ்சிந்தோ சீனமும் ஏனைய வெண்நாடுகளும் | 100.00 | 1 |

இலங்கை உற்பத்தியின் மொத்த விற்பனவுச் சராசரி
(கொழும்புச் சந்தை விலை) [57]

| | றப். (ரு.) ரூ. ச. | தேயி. (ரு) ரூ. ச. | கொப்ப. கண்டி ரூ. ச. | தே மா. (ரு.) ரூ. ச. | எண் தொன் ரூ. ச. | கொக்கோ அந்தர் ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|
| 1919 | 1·05 | 55·9 | 94·13 | —38 | 759·60 | 53·08 |
| 1920 | —80 | 43·7 | 109·53 | —29 | 782·75 | 44·60 |
| 1921 | —52 | —71 | 87·16 | —26 | 629·03 | 28·23 |
| 1922 | —53 | —85 | 78·52 | —22 | 538·13 | 37·77 |
| 1923 | —88 | 1·02 | 87·61 | —24 | 584·05 | 35·71 |
| 1924 | —75 | 1·04 | 85·42 | —22 | 574·11 | 33·30 |
| 1925 | 1·73 | —96 | 80·36 | —20 | 543·17 | 33·17 |
| 1926 | 1·21 | —99 | 79·40 | —20 | 539·36 | 30·41 |
| 1927 | —95 | —94 | 76·88 | —19 | 491·73 | 52·22 |
| 1928 | —55 | —85 | 76·22 | —19 | 489·02 | 58·89 |
| 1929 | —52 | —81 | 64·47 | —16 | 412·33 | 53·46 |
| 1930 | —27 | —75 | 52·36 | —13 | 351·63 | 57·51 |
| 1931 | —14 | —37 | 35·06 | —10 | 253·52 | 29·71 |

போரின் பின் 1920-ல் கீழ்நிலையடைந்த தேயிலைவிலை, பாது காப்புக் கட்டுப்பாட்டின் விளைவாகப் பழைய நிலையடைந்தது. இலங்கை, இந்திய உற்பத்தியாளர்கள் சிறந்த தளிர்களையே

கொய்து உற்பத்தியைக் குறைக்க அதன் விளைவாகத் தேயிலையின் விலை கூடிற்று. ஆனால் மற்றைய பிரதேசங்கள் உற்பத்தியில் மாற்றம் செய்யவில்லை, எனவே பிரித்தானிய சந்தையில் கேள்வி நிரம்பலிடையே சமநிலையைப் பாதுகாக்க முடியவில்லை. 1925-ல் தொடங்கிய விலைகளின் வீழ்ச்சி 1932-ல் சருவதேசியக் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்படும் வரை நீடித்தது; இலங்கைத் தேயிலையின் விலை இந்திய அல்லது டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளின் விலையிலும் உயர்ந்தது. மேலதிக உற்பத்தி காரணமாக இலங்கை உற்பத்தியாளர் அதிக கஷ்டத்திற்குள்ளாகவில்லை. இருந்தும் இங்கும் விலை உற்பத்திச் செலவு நிலைக்கு வீழ்ச்சியடைந்தது.

போரின் பின்னர் றப்பர் விலைகள் வீழ்ச்சியுறத் தொடங்கின. ஸ்டீவின்சன் கட்டுப்பாட்டின் இரண்டாம் வருடத்தின் போதே, 1923-ல் விலை வீழ்ச்சி மறைந்தது. இலங்கையின் றப்பர்த் தொழிலில் மந்தம் 1927-ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஏற்பட்ட தொழில் மந்தத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. ஏனெனில் அந்நாடு உலக மொத்த றப்பர் வெளியீட்டில் 70%த்தை நுகர்ந்தது.

முக்கிய பயிர்கள் விளைவிக்கப்பட்ட விளை நிலங்கள் (ஏக்.) [59]

| | தேயிலை | றப்பர் | தென்னை | கொக்கோ |
|---|---|---|---|---|
| 1922 | 418135 | 390115 | 820001 | 33229 |
| 1923 | 418135 | 390115 | 820006 | 33229 |
| 1924 | 418048 | 399115 | 820001 | 33229 |
| 1925 | 44000 | 438950 | 881000 | 34280 |
| 1926 | 442034 | 475051 | 883460 | 34556 |
| 1927 | 449922 | 490000 | 887132 | 33651 |
| 1928 | 457379 | 533652 | 878501 | 33563 |
| 1929—31 | 457000 | 354000 | 1100000 | 34000 |
| 1932 | 457000 | 534000 | 1100000 | 34000 |

விலைகள் நிலையற்றிருக்கும்போது பயிர்களின் பரப்பளவு விரிவடைவது இயற்கைக்கு முரணாய் அமையும் எனத் தோன்றலாம். தென்னையைப் போலன்றி றப்பர் தேயிலை மேலதிக உற்பத்தியின் விளைவால் விலைகள் குறைந்தன. தோட்டப் பயிர்களின் நீண்ட வளரும் காலத்தைக் கொண்ட பெருந்தோட்டப் பயிர்களைப் பொறுத்த அளவில் விலைகளுக்கும், பயிரிடப்படும் அளவிற்கும் "இணைப்பு" காணப்படவில்லை. பிரித்தானியப்

பிரதேசங்களின் வெளியீடு குறைக்கப்பட, விலைகள் செயற்கை முறையில் உயர்ந்தனவேனும், ஏனைய பிரதேசங்கள் தமது வெளியீட்டை அதிகரித்ததனால் இவ்வுயர்ச்சியைப் பேணமுடியவில்லை. பிரித்தானியப் பெருந்தோட்டக்காரர் வரையறைத் திட்டத்தைக் கைவிடவே மேலதிக உற்பத்தி புலனாயிற்று இவ்வாறு 1927-ல் பிரித்தானிய வரையறைகள் காணப்பட்டபோதும் விலைகள் தொடர்ந்து வீழ்ச்சியுற்றன. எந்த வரையறை செய்யும் திட்டமும் டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் பங்கெடுத்துக்கொள்ளாதவிடத்து பயன் தராது என்ற உண்மை தெளிவாயிற்று.

மந்தம் இலங்கையை மிகக் கேவலமாகப் பாதித்தது. அதன் கட்டுப்பாட்டிற் கப்பாற்பட்டிருந்தது; அத்துடன் ஏற்றுமதியில் 90% தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்களாக இருந்தமையின் தீவு முழுவதினதும் பொருளாதாரம் நலிவுற்றது.

---

# FOOT NOTES

1 Ceylon Blue Book Statistics (Series) Furguson: Directory & Hand Book of Ceylon.

2 Ferguson: Ceylon in the Jubilee Year (Lond. 1887) p. 82

3 Gennox. A. Mills. Ceylon Under British Rule. (Oxford. 1933) p. 248. Ferguson Ceylon in 1838.

4 Ceylon Blue Book (Series).

5 Ferguson: Ceylon in Jubilee Year p. 64. Coffee price rose because of an influx of an inferior coffee from Brazil. Consequently better grade fetched high prices.

6 Kandian Peasantry Commission Report. S. P. XVIII p. 69.

7 Ceylon Blue Book (Series) Furguson Directory & Hand Book.

8 Villiers Mercantile Lore (Colombo 1940) p. 258.

9 Ferguson Ceylon Hand Book and Directory.

10 Owen: Chinchona Planters Manual (Colombo 1881) p 190

11 Ibid. Ferguson: Ceylon Hand Book & Directory (Series)

12 Governors' address to the Legislative Council.

13 Ferguson: Ceylon in 1883 p. 238. Ceylon Mercantile and Planting Directory 1891--92 (Colombo 1892) p. 56.

14 Ferguson: Ceylon Hand Book and Directory. (Series)

15 -do-; Pioneers of the Planting Enterprise in Ceylon (Colombo 1890) p. 52. Villers: Recollections of James Stewart (Col 1935) p. 127.

16 Tropical Agriculturist 1885--6

17 Villers Rec. of James Stewart (Col. 1935) p. 65: Planters Assn. of Geylon. Proceedings Cent. issue (1854-1954).

18 Early Pioneers in Tea: Elplunstone; Armstrong (Rookward; Bayley Mo (awella) M/s Reid, Rutherford and Todd railway contractors. took up tea cultivation on the Mariwatte Estate and in the district of Yakdersa and in the Keleni Valley (From Ferguson: Pioneers of the Planting Enterprice)

19 Ferguson: Ceylon Merc & Planting Directory 1891-2 (Col. 1892) p. 45.

20 Ibid pp. 45-46.

21 Ibid p. 40.

22 Ibid p. 40.

23 Ceylon Blue Book

25 Ceylon Blue Book series.

(a) பரப்புப் புள்ளிவிபரம் இல்லை

(d) சப்பிரகமுவா 1889 சர். ஆதர் கோல்டன் தேசாதிபதியாக இருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்டது:

26 Statistical abstract of the U. K. (Series)

27 The Statist reported in 1895 that the tea trade was as yet profitable despite the increase in production and the consequent fall in prices (Statist 13 Ap. 1899)

28 Cost of Production From: Rutherd's Planters' Note Book (Col. 1885) Ferguson: Ltd. Companies of Ceylon (Col. 1898) etc.

29 C. O. 54: 660 Grenlenton to colonial office 13 Feb. 1889.

30 Vide B. L. Panditharathna. The Harbour & Port of Col., a Geographical appraisal of its historical &

functional aspects (Ceylon J. of Hist. & Social Studies) Vol. 3 No. 2, 1960)

31 C. O. 54662 Government despatch No. 71 of 28 Feb 1900.

32 All prices from the Statistical Abstract of the U K.

33 Based on the statistics from Ceylon Blue Book (series)

34 Ferguson : Ceylon Merc and Planting Directory 1891–2 p. 109-115.

35 Non Ceylonese share in the Coconut Acerage was estimated to be between 5 and 10 percent of the total Area, (Banking Commission Report 1934)

36 Mills : Ceylon under British Rule (Oxford 1933) p. 254.

37 Wills Agriculture iu the Tropics. (Cambridge 1909) p. 123-129

38 Villiers Mercantile Lore (Col. 1940) p. 39.

39 Rubber Prices from Riekinson : The World Rubber position (London).

40 Villiers Mercantile Lore pp, 39-40.

41 Ferguson : Ceylon Hand Book and Directory Malayan State Information Agency. Bul. of Federal Dept. of Agriculture.

42 Based on Ceylon Blue Book figures Turner Ceylon Hand Book (Col. 1922)

43 Ferguson Directory and Hand Book (Series).

44 Wickizer : Tea under International Requlations (Starford U. S. A. 1944). to 9

45 Ceylon Administrative Reports . Report of the P.C.C. 1917.

46 Planters Assn. of Ceylon Proceedings (Col. 1917) p. 42.

47 Ceylon Blue Book
--a 1918 prices not available

48 Maclaremn : Tea Rubber and Cocoa. (London 1924) p. 155.

49 Ceylon Blue Book (Series)

50 U. K, Colonial Office Report (Series).

51 Colonial Office Reports.

52 Ceylon Assn. in London Proceedings (Lond. 1931) p. 37.

53 Based on Ceylon Blue Book Statistics Col. Office Report Ceylon.

54 Dr. Whitford's Report on Plantation Rubber, 1930 quorted in Baur: The Rubber Industry (London 1948) p. 2.

55 International Tea Committee Bullettin Vol. 1. No. 1 January 1936. (a) Not known.

56 Banking Commission Report S. P. XXXIV 1934.

67 Ceylon Blue Book.

58 Imperial Economic Committee Report on Tea (London 1946) p. 40.

59 Ceylon Blue Book (Series).

# இலங்கையிற் பாராளுமன்ற அமைப்பின் வளர்ச்சி

கலாநிதி. ஏ. ஜெயரத்தினம் வில்சன்

**பா**ராளுமன்ற ஆட்சியமைப்பு திருப்திகரமாகச் செயற் பட வேண்டின் அதற்குச் சில தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டியதவசியமாகும். ஐக்கிய இராச்சியம் இதற்கான இலட்சிய எடுத்துக் காட்டாகக் காட்டப்படுமேனும், அவ்வமைப்பு பிரித்தானியருக்கே உரியதென்பதையும் அது வெற்றிகரமாகச் செயற்படுதற்குப் பிரித்தானியாவில் நிலவும் சில தனித்தன்மைகளும், பொருளியல், அரசியல் அடிப்படைகளும் காரணமாய் அமைந்தன என்பதையும் மக்கள் உணரத் தவறிவிடுகிறுர்கள்.

வர்த்தகப் பண்பாட்டைக் கொண்ட வியாபாரிகளின் நாட்டிற்கே உரிய, செழிப்புள்ள பொருளியல் அமைப்பிற் பேரம் பேசி விட்டுக்கொடுக்கும் தன்மை என்பவை அங்கு நிலவுகின்றன. இதனைப் பாராளுமன்ற அமைப்பிற்கு பிரயோகிக்கும் போது அரசாங்கக் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் உள்ள தொடர்பைச் சீராக்கப் பயன்படும். ஆங்கிலோ சாக்சனியர் புகுத்திய கிரிக்கட் என்னும் தேசிய விளையாட்டால் தோன்றிய விதிகளுக்கமைய விளையாடும் எண்ணம் கூட்டாக இயங்கும் பாங்கு என்பவை மந்திரி சபையை, இயங்குவதற்கு வேண்டிய ஒத்தியங்கும் தன்மையை அளித்தது. இத்தகைய காரணங்களுக்காகவே பிரித்தானிய சூழ்நிலையைக் கொண்ட நாடுகளான கனடா, அவுஸ்திரேலியா, நியூசீலந்து ஆகிய நாடுகளோடு ஓரளவிற்குத் தென்னுபிரிக்காவிலும் கூட இத்தகைய அமைப்பு நன்கு தொழிற் படுகிறது. பிரித்தானிய அமைப்பைப்போல் திறமை கொண்டனவும், ஆனுல் முற்றிலும் வேறுபட்ட ஆட்சியமைப்பைக் கொண்டனவுமான அரசுகளை ஐரோப்பாவிற் காணலாம். முதலில் எமது சிந்தையிற் புகுவது பிரான்சிய அமைப்பேயாகும்.

---

Dr. A. J. Wilson B. A. (Hons.) Ph. D. (Lond.)
அரசியல் விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக்கழகம்.

தமிழாக்கம்: திரு. வெ. நடராசா.

மூன்றாவது குடியரசின் தன்மை நிலையற்ற ஆட்சியமைப்பேனும் எழுபது ஆண்டுகளுக்கு மேல் நிலைத்த அக்குடியரசின் பாராளுமன்ற அமைப்பினாலேதான் வெற்றிகரமாக முதலாவது உலக மகா யுத்தத்தில் ஈடுபட முடிந்ததென்பதை மறக்க முடியாது. பிரெஞ்சுக்காரர் தற்பொழுது அமெரிக்கக் குடிபதி ஆட்சி முறையும்; வழக்கமான பாராளுமன்றக் குடியாட்சி முறையும் இணைந்தவொரு முறையைப் பரீட்சித்துப் பார்க்கின்றனர். டீகாலின் கீழ் இவ் அமைப்பு திருப்திகரமாகச் செயற்பட்டு வருகிறது. இவ்வாட்சிமுறை பிரெஞ் மண்ணில் நன்கு வேரூன்றி விடும் என்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. இதைப்போன்று சுவீடன், நோர்வே, டென்மார்க்காகிய நாடுகளிலும் அவற்றிற்கே உரியதான சமூகக் குடியாட்சி முறைகள் காணப்படுகின்றன. சுவிற்சலாந்தில் அதற்கே உரிய தனித்தன்மையான குடியொப்பக் குடியாட்சிமுறை நிலவுகிறது. இத்தகைய உதாரணங்களைக் காட்டுவதேனெனில் வெஸ்ட்மினிஸ்டர் அமைப்பில் புனிதத்தன்மை எதுவுங் காணப்படவில்லை என்பதைக் குறிப்பிடவே. எமது அமைப்பு வெஸ்ட்மினிஸ்டர் ஆட்சி அமைப்பைப் போன்றது. தமது பழைய குடியேற்ற நாடுகளில், அவை விடுதலை பெற்றபோது தமது ஆட்சியமைப்பைப் புகுத்திச் சென்றது பிரித்தானியர் இழைத்த ஒரு தவறாகும். இதன் விளைவாகவே, சில ஆண்டுகள் இவ்வாட்சிமுறையை அனுபவிக்க, கானா, நைஜீரியா, தங்கனிக்கா ஆகிய ஆபிரிக்க நாடுகளும், ஆசியாவில், பர்மா; பாகிஸ்தான் என்பனவும் இலங்கையும் கூட சில பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டியிருக்கின்றன. தனது பழைய சாம்ராச்சியத்தினை ஒட்டிய கொள்கைகளில் பிரித்தானியர் இழைத்த பெருந்தவறு இதுவேயாகும். அவர்களின் தேவைக்கும் திறமைக்கும் ஏற்ற ஆட்சி முறையைத் தேர்ந்தெடுக்கவேண்டிய அரசியற் திட்ட நிர்ணய மன்றங்களை ஏற்படுத்த வேண்டிய வாய்ப்புகள் மக்களுக்கு வழங்கப்படவில்லை. இக் குடியேற்ற நாடுகளுக்கு வெஸ்ட்மினிஸ்டர் ஆட்சியமைப்பின் மறு படிவங்களே வழங்கப்பட்டன.

பாராளுமன்ற ஆட்சியமைப்பிற்கு ஒரு சில முக்கிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று கூறப்பட்டது. அவை எவை? வளர்ந்துவரும் பொருளாதாரச் சூழ்நிலையில் பாராளுமன்ற ஆட்சிமுறை நன்கு தொழிற்படும். பலமற்ற பொருளாதார அமைப்புகள் அனுபவிக்க முடியாத ஒரு 'இன்பியற்' பொருளாக அமைந்தன. இங்கு தீர்வு காண்பதற்குரிய ஆலோசனைகளை நான் கூறவில்லை; ஆனால் அதனை நுணுகி ஆராய்வேன். காலஞ் சென்ற பேராசிரியர் லஸ்கி,

'இங்கிலாந்திற் பாராளுமன்ற ஆட்சி' என்ற நூலில் (P. Govt. in Eng.) பின் வருவனவற்றைக் கூறுவதன் வாயிலாக இக் கருத்தை வெளிப்படுத்துகிறுர்.

' உலகனைத்து முள்ள நாடுகள் பிரித்தானிய யாப்பினை அடி யொற்றி அமைய அதன் பெருமையும் வெற்றியும் காரணமாக இருந்ததேனும் அது பின்பற்றப் பட்ட நாடுகளில் வெகு அருமை யாகவே எக்காலப் பகுதியிலும் வெற்றியைத் தந்தது. ஏனெ னில் அதைச் செயற் படுத்திய நாடுகள் வெற்றிதரும் பொருளி யலமைப்பையே வேண்டி நின்றன...''

பொருளியற் செழிப்புடன் அடிப்படைகளின் உடன்பாடும் ஒரு பிரச்சினையாக அமைந்தது. இத்தால் நான் குறிப்பது என் னவெனில், அப்பொழுது நிலவும் பொருளாதார அரசியல் அமைப் புகளின் எல்லைக்குள் அரசியற் கட்சிகள் இயங்கத்தயாராய் இருக் கவேண்டும். அவர்கள் தனிப்பட்ட சொத்துக்களைக் கௌரவிக்கத் தயாராய் இருக்கவேண்டும். நாட்டின் அரசாங்கத்திற்கென ஏற் படுத்தப்பட்ட பாராளுமன்ற நிறுவனங்களின் சூழ்நிலையினுள் இயங்க அவை விருப்புடையனவாக இருத்தல் வேண்டும். ஐக்கிய இராச்சியத்திலும், வெள்ளையர் டொமினியன்களிலும் இவ்வ டிப்படைகளில் உடன்பாடு காணப்படுகிறது.

இந்நாட்டில் நாம் எதைக் காண்கிறோம். கட்சிகள் வீழ்ச்சி யடையும் பொருளாதாரத்தின் குமுறலைப் பிரதிபலிக்கின்றன. இங்கு, நலிவுற்ற, பிணிகொண்ட பொருளியல் நிலவுகிறது. எனவே, அடிப்படை ஒற்றுமை முக்கிய கட்சிகளுக்கிடையே காணப்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந் திரக் கட்சியும் பாராளுமன்ற நிறுவனங்களை ஏற்றுக் கொள்ளல் தனிப்பட்ட சொத்துக்களைக் கௌரவித்தல் என்ற அடிப்படை யில் இயங்குமேனும் ல. ச. கட்சி, பொதுவுடைமைக் கட்சி போன்றவை பொருளியலடிப்படையில் முன்னைய இரண்டிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இவ் இடதுசாரிக் கட்சிகள் தேசத்தின் தற்போதைய பொருளியலடிப்படைகளைக் கௌர விக்கத் தயாராய் இருக்கவில்லை. இப்பொழுது நிலவுகின்ற பாராளுமன்ற நிறுவனங்களை இவை பேணக்கூடுமேனும், இவை திடீரென்று அவர்கள் சிந்தையிற் கொண்டிருக்கும் பொருளா தார, அரசியல் சமூகப் புரட்சிகளுக்குட்பட்டு மாற்றியமைக்கப் படலாம். இவ்வாருக, தேசிய அடிப்படைகளில் அடிப்படை வேறுபாடுகள் காணப்படுகிறது. இடதுசாரிகளுக்கும் அரசாங் கத்திற்குமிடையே சகிப்புத்தன்மையோ, உடன்பாடோ காணப்

பட்ட வாய்ப்புகள் இல்லை. ஏனெனில் இடதுசாரிகள் பதவிக்கு வரின் தமக்கு பிரித்தானியாவில் பொதுநல நாடுகள் அமைப்பு, வெளிநாட்டுக் கொள்கை போன்ற விடயங்களிலும் முக்கிய கட்சிகளிடையே உடன்பாடு நிலவுகின்றது. இத்தகைய உடன் பாடே சகிப்புத்தன்மை, உடன்பாடு என்பவற்றை உண்டு பண்ணும். இத்தகைய உடன்பாடுதான் பழமைக் கட்சியின் ஆதரவாளருக்கு, தொழிற்கட்சி பதவிக்கு வந்தால் அல்லது வரும்போது பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்ற பயமேற் படாது தடுக்கின்றது. இதுவே தொழிற்கட்சிக்கும் பொருந்தும். இக் கட்சி பழமையாளர் தமது விரோதிகள் என்ற அடிப்படை யிற் செயற்படுவதில்லை. மற்றைய கட்சி பிரதிபலிக்கும் நல உரிமைகளை பாழ்படுத்தும் வகையில் இயங்கக்கூடாது என்ற பொது உடன்பாடு இவ்விரு கட்சிகளிடையேயும் நிலவுகிறது தேசத்தி னடிப்படையில் இவ்விரு க்ட்சிகளுக்கிடையேயும் ஒரு பரந்த உடன்பாடு காணப்படுகிறது.

மீண்டுமொரு சந்தர்ப்பம் கிடைக்குமோவென வலதுசாரிகள் ஐயுறுகின்றனர், இத்தகைய ஒரு நிலையே 1947—52 ஐ. தே. கட்சி ஆட்சியில் நிலவியது. இக்காலத்தில் ல. ச. க. முக்கிய எதிர்க்கட்சியாக அமைந்தது. மாட்சிமை தங்கிய அரசியின் மாற்றரசாங்கம் என்ற அடிப்படையில் அதன் உரிமைகளும் கௌரவமும் மிக அருமையாகவே கௌரவிக்கப்பட்டன. பாராளுமன்ற நடவடிக்கைகளின் ஒழுங்கைப் பொறுத்த அளவில் ல. ச. கட்சியினர் கோரிக்கைகள் அரசாங்கத்தால் கவனிக்கப்படவில்லை. அத்துடன் லங்கா சமசமாஜ கட்சிப் பிரதிநிதிகளின் தொகுதிகளில் அரசாங்கம் 'மாற்ருந்தாய்' மனப்பான்மையைக் காட்டியது. இத்தகைய நிலை நிலவக் காரணமென்னவெனில் அரசாங்கக் கட்சி, ல. ச. க. பதவிக்கு வரின் தாம் பதவிக்கு மீண்டுமொரு தடவை வர வாய்ப்புக் கிடையாது என்பதை உணர்ந்திருந்தமையேயாகும். பாராளு மன்றச் செயல்கள் நன்கு செயலாற்றப் படுவதற்கு உதவி யளிக்கக் கூடிய, ஒருமித்த நம்பிக்கை கட்சிகளிடையே காணப் படவில்லை. டொனமூர் மந்திரிகள் சபையில் இடம் பெற்ற டி. எஸ். சேனநாயக்காவும் அவரது சகாக்களும் (இவர்களிற் பெரும்பாலோர் ஐ. தே. கட்சியிற் சேர்ந்தனர்) இடது சாரிக ளுக்கு மிகப் பாதகமாக அமையக்கூடிய ஒரு பிரதிநிதித்துவ முறையைக் கண்டனர். யாப்பின் 40, 41-ம் பகுதிகளில் தேர்தற் ருெகுதி பிரசுரிக்கப்படும் முறை குறிப்பிடப்பட்டுள்ளது. எமது யாப்பின் சிற்பிகளில் ஒருவரான சேர் ஐவர் ஜென்னிங்ஸ்

தேர்தற் றெகுதிகள் ஏனைய காரணங்களுடன் (1) மக்கட் செறிவு குறைந்த பகுதிகளுக்கு அதிக பிரதிநிதித்துவம் அளித்தல். (2) தாழ்நில சிங்களப் பகுதிகளுக் கெதிராகக் கண்டிச் சிங்களப்பகுதிக் கதிக பிரதிநிதித்துவம். (3) முக்கியம் வாய்ந்த செல்வங் கொழிக்கும் பகுதிகளுக்கு மாறுகப் பிற்போக்கான பகுதிகளுக் கதிக பிரதிநிதித்துவம் என்ற அடிப்படைகளிற் பிரிக்கப்பட்டன என்றார். இதன் விளைவுகளை ஒருங்கு நோக்கின் பிற்போக்கு, நாட்டுப்புறம் என்பவற்றிற்கு யாப்பு அதிக பிரதிநிதித்துவத்தை அளித்தது. நகர்ப் புறங்களுக்குக் கிடைக்க வேண்டிய அதிக பிரதிநிதித்துவம் அதற்கு வழங்கப்படாது நாட்டுப்புறங்களுக் களிக்கப்பட்டது. உதாரணமாக 1946 ன் தேர்தற் றெகுதிப் பிரிவினைக் குழுவின் ஆலோசனைக்கியைய அபிவிருத்தியடைந்த மேல்மாகாணம் ஒவ்வொரு 93,320 மக்களுக்கும் ஒரு பிரதிநிதியைப் பெற பின்தங்கிய வடமத்திய மாகாணம் ஒவ்வொரு 27,876 மக்களுக்கும் ஒரு பிரதிநிதியைப் பெற்றது. இதேபோன்று பின்தங்கிய கீழ்மாகாணம் 38,878 மக்களுக்கொரு பிரதிநிதியைப் பெற்றது. இந்நிலையை வேறு வழியில் விளக்கப்போனல் தெரிவு செய்யப்பட்ட 95 பிரதிநிதிகளுள் 12 பேர் 55 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களால் தெரிவு செய்யப்பட 55 பேர் 25,550 ஆயிரம் மக்களாற் றெரிவு செய்யப்பட 28 தொகுதிகள் 25 ஆயிரத்திற்குக் குறைந்த மக்கட் தொகையைக் கொண்டிருந்தன. இறுதிப் பாகுபாட்டினுள் அடங்கும் தொகுதிகளுள் எட்டு 15 ஆயிரத்திற்கும் குறைந்த மக்களைக் கொண்டிருந்தன. மன்னர், வவனியா, மதவாச்சி, அனுரதபுரம், ஹொரவப் பொத்தானை, பொலன்நறுவ, பண்டாரவளை, அப்புத்தளை என்பவையே அவை. வாக்களிப்பு முறையிற் காணப்பட்ட சமமின்மை நகர மக்களிலும் பார்க்க இயல்பாகவே பழமை மனப்பாங்குள்ள பிற்போககான கிராமப் புறங்களுக்குச் சாதகமாக அமைந்தது. மேலும், பணவருவாய், ஒழுங்கு செய்யும் திறன் என்பவற்றோடு வாக்காளர்களை வாக்களிப்பு நிலையத்திற்குக் கொண்டுசெல்ல வாகனங்களைப் பயன்படுத்தும் தன்மை என்பவற்றைக் கொண்ட கட்சிகளுக்கு இது சாதகமாய் அமைந்தது. பெருநிதி கொண்ட கட்சிகளுக்கு இவற்றைச் செய்யும் திறன் இருத்தல் இயல்பே. இவ்வாறு ஆரம்பத்தில் இருந்தே இடதுசாரிகள் பின்தங்கிய நிலையில் வைக்கப்பட்டார்கள்.

இடதுசாரிகளுக் கெதிராகக் கொண்டிருந்த வாய்ப்புக்களோடு திருப்தியடையாத ஐ. தே. கட்சி இந்தியத் தொழிலாளர்களிடமிருந்து வாக்குரிமையைப் பறிக்கச் சட்டங்களியற்

றிற்று. சமூகத்தின் இப்பகுதி, 1947-ன் சனப்பிரதிநிதி சபையில் எட்டு அங்கத்தவர்களைக் கட்டுப்படுத்தியதோடு ஏறத்தாழ இருபது பேரின் முடிவுகளைத் தனது செல்வாக்கிற் குள்ளாக்க முடிந்தது. இவ்விருபது தொகுதிகளிலும் இந்தியர் வாக்கு 1947-ல் இடதுசாரிகளைச் சென்றடைந்தது. குடியுரிமைச் சட்டம் நன்கு ஒழுங்கு படுத்தப்பட்ட தொழில் வர்த்தகத்தைத் தாக்கியதால் இடதுசாரிகளுக்கு எதிராகத் திருப்பப்பட்டது. இதன் விளைவுகள் 1952-ன் தேர்தலின்போது வெளிப்பட்டன. இந்தியரது வாக்கு விலக்கப்பட்ட பின்னர் தேர்தற் ெறுகுதியைத் திரும்பப் பிரித்தற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை. எனவே 15000 வாக்காளர்கள் கொண்ட தொகுதிகள் 8-ல் இருந்து 15 ஆக அதிகரித்தன. அரசியலுணர்வு மிகக் கொண்ட மேற்கு, தெற்கு, வடமேற்கு மாகாணங்கள் பின்தங்கிய நிலையில் விடப்பட்டன. இந்தியத் தொழிலாளரின் வாக்குரிமை பறிக்கப்பட்டதன் விளைவாக, தலவாக்கொல்லை, நுவரெலியாப, கோட்டகலை, மஸ்மெலியா, அப்புத்தளை என்பவை 'கோட்டை'களாக மாறின. புதிய தேர்தற் றெகுதிப் பிரிவினைகள் தோன்றுதபடியால் இந்நிலை 1956 தேர்தலிலும் நிலவியது. எவ்வாறெனினும் 1956-ல் பண்டாரநாயக்காவின் மகாசன எக்ஸத் பெரமுனை கிராமப்புற மக்களின் ஆதரவைப் பெற முடிந்தது. ஆனால் பொருளாதாரப் பிரச்சினைகளிற் புரட்சித் தன்மைகளைக் கொண்டிருந்ததாலும், மொழி, மதப் பிரச்சினைகளிற் தீவிரவாதத்தை அனுட்டித்ததாலுமே இத்தகைய ஆதரவைப் பெறமுடிந்தது. தேர்தல் தொகுதிகளின் அமைப்பு பண்பாட்டிற் தீவிரத்தையும் அரசியற் பொருளாதாரப் புரட்சியையும் கொண்ட ஒரு கலவையான அரசியலொழுங்கை உருவாக்க வாய்ப்பளித்தது. அரசியல் பொருளாதார சமூகப் பிரச்சினைகளைத் தாராள மனப்பான்மையுடன் அணுகும் அறிவுள்ள, புதுமைவாதியான பண்டாரநாயக்கா காலப்போக்கில் தான் அமுல் நடத்த வேண்டி இருந்த சில கொள்கைகளுக்குச் சாதாரண சூழ்நிலையில் தமது ஒப்பத்தைக் கொடுக்காதிருந்திருக்கலாம். தேர்தற் றெகுதிகளின் அமைப்பு அவரை, ஐ. தே. கட்சியைப் பதவியிலிருந்து நீக்குதற் பொருட்டு, வேறு வழியற்ற நிலையில் இக்கொள்கைகளை ஏற்கத் தூண்டியிருக்கலாம். இடதுசாரிகள் 1947—1952 1952—1956 வரை தேர்தற் தொகுதிகளில் தமக்கென ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தால் அவரும் வலுப்பெற்றூர். 1960-ல் புதிய தொகுதிகளின் பிரிப்பை யொட்டித் தேர்தல்கள் நடந்தன. தொகுதிகள் ஏறத்தாழ 50 வீதத்தால் அதிகரிக்கப்பட்டன. புதிய தொகுதிப் பிரிவினை பழைய கொள்கையின் அடிப்படையிலேயே நிகழ்ந்தது. பிற்போக்கான கிரா

மப் பகுதிகளுக்கு அதிக பிரதிநிதித்துவம் வழங்கப்பட மக்கட் தொகை மிக்க நகர்ப் புறங்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. எனவே இடதுசாரிகளையும் தொழிலாளர் வர்க்கத்தையும் அரசியலதிகாரம் பெறவொட்டாமல் தடுக்கும் முறையில் யாப்பு வகுக்கப்பட்டுள்ளது என்ற பொது முடிபிற்கு நாங்கள் வரவேண்டியிருக்கிறது. நான் முன்பு கூறியபடி, இது இடதுசாரிகளுக்கும் வலதுசாரிகளுக்கு மிடையே உடன்பாடு காணப்படாததன் விளைவேயாகும். இடதுசாரிகளை நிரந்தரமாகப் பதவிக்கு வராது தடுப்பதினால் ஆபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. இதன் விளைவாக அவர்கள் பாராளுமன்ற நடவடிக்கை தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளைப் பயன்படுத்த முனையலாம். அவர்கள் ஒருவேளை கிராமப்புறத்து ஆதரவைப் பெறுது விடக்கூடும். இத்தகைய ஒரு சூழ்நிலையில் அவர்கள் ஐ. தே. க; ல. சு. க. என்பவற்றைப் பதவியிலிருந்தகற்றவேண்டி அவற்றின் மத, மொழிக் கொள்கைகளைப் பின்பற்றலாம், அல்லது வேறு நடவடிக்கைகள் எடுக்கலாம்.

*1956*-ல் திரு. பண்டாரநாயக்காவின் காலத்தில் அரசாங்கத்திற்கும் இடதுசாரிகளுக்கும் உள்ள தொடர்பு விருத்தியடைந்தது. எனினும் அப்பொழுது, நிலவிய அமைப்பினுள் இயங்க விரும்பியோருக்கும், அவ்வமைப்பை வேரோடு களைய விரும்பினோருக்கும் இடையே திட்டமான பிரிவினையே எழும் என இறுதியாக நான் நினைக்கிறேன். இத்தகைய ஒரு பிரிவினை இன்றைய பொருளியற் சூழ்நிலையில் தவிர்க்க முடியாத நிகழ்ச்சியென்றே நான் நம்புகிறேன். இத்தகைய ஒரு பிரிவினை ஏற்பட்டால் மாறுபட்ட கருத்துடைய இரு சாராருக்கு மிடையே ஒரு ஜீவமரணப்போராட்டமே நிகழுகின்றது. பாராளுமன்ற நிறுவனங்கள் இதன் பின்னர் ஒரு சாராரையே நிரந்தரமாகப் பதவியில் வைத்திருக்க முயலும் கருவிகளாகவே இயங்கும்.

பாராளுமன்ற அமைப்பு நன்கு செயற் படுதற்கு வேண்டிய ஒரு தேவையாக இன ஒருமைப்பாடும் அமைகிறது. வளர்ந்து வரும் பொருளிய லமைப்பினுள் இன, பண்பாட்டு, மத வேறுபாடுகளும் தேசிய கட்டுக்கோப்பிற் காணப்படலாம். இத்தகைய ஒரு நிலையே கனடாவிற் காணப்பட்டது. அங்கு, ஆங்கிலேயரும் பிறெஞ்சுக்காரரும் ஒருவரோடொருவர் உடன்பாடடையவும்; சகிப்புத் தன்மையடையவும் பழகிவிட்டனர். ஜேர்மனியர் பிரான்சியர், இத்தாலியர் ஆகியோர் வாழும் சுவிற்சலாந்திற்கும் இது பொருந்தும். ஆனல் பிரச்சினைகள். சுருங்கிச்செல்லும் பற்றுக்குறைவான பொருளாதார அமைப்பி

லேயே தலையெடுக்கின்றன. இத்தகைய ஒரு நிலையிலேதான் மத இன சாதிப் பிரிவுகளைச் சாதகமாக்கிக் கொண்டு குழப்பங்கள் எழுகின்றன. இதுவே இலங்கையிலும் நிலவுகிறது என்பதை நாம் எம் பார்வையினூடாகக் காணக் கூடியதாயுள்ளது. அனுபவிக்கவும் செய்கிறோம். தேசத்தினை உருவாக்கும் இனங்கள் தமக்குள்ளே பிணக்குக ளடையும்போது பாராளுமன்ற நிறுவனங்களும் குறைபாடுகளை நிவிர்த்தி செயயவேண்டிய தனது பண்பை இழந்து விடுகிறது. இத்தகைய வகுப்புவாதப் பிரச்சினைகள் சந்திக்கு எடுத்துச் செல்லப்படுவதையே 1956 தொடக்கம் காண்கின்றோம்.

திறமையாகப் பாராளுமன்ற அமைப்பு செயற் படுதற்கான இன்னொரு அம்சம், கட்டுக்கோப்புள்ள அரசியலில் ஒருமனப் பான்மையுள்ள எதிர்க் கட்சியாகும். நிலையான அரசாங்கத்தை அமைக்கக்கூடிய ஒரு கட்சியும், தேவையான நேரத்தில் அரசாங்கத்தை ஏற்று நடத்தக்கூடிய இன்னொரு எதிர்க்கட்சியும் அவசியமாகும். பிரித்தானிய அமைப்பு முறையிலேயே இயங்கும் ஐக்கிய இராச்சியம், கனடா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென்னுபிரிக்கா, ஆகிய நாடுகளில் இத்தன்மையே நிலவுகிறது. இத்தத்துவம் தற்பொழுது ஒரு கட்சியே அரசாங்கம் நடத்த வல்லமையுடையதாயிருக்கிறது எனத் திருத்தப்படலாம். எதிர்க் கட்சி நலிவுற்றுப் பிரிவுற்றுப் பதவியேற்கும் சந்தர்ப்பத்தை அரிதாகக் கொண்டிருக்கிறது என்பதையே இது கருதுகிறது. இதனை ஒரு கட்சிக் குடியாட்சி என வழங்கலாம். காங்கிரசு அரசியற் தனியுரிமை பெற்று விளங்கும் இந்தியாவின் நிலைமை இதுவே. அயூப்கான் ஆட்சியைக் கைப்பற்றிய முஸ்லீம் லீக்கின் நிலையும் இதுவேயாகும். நீவின் யாப்பைத் தற்காலிகமாகத் தள்ளிவைக்கும் வரை பர்மாவில் அதிகாரத்தில் இருந்த பாசிச எதிர்ப்புக் கட்சியின் நிலைக்கும் இது ஏற்கும். இதே நிலைமையிற்றான் மலாயக் கூட்டாட்சியின் துங்கு அப்துல் ரஹ்மானின் கூட்டுக் கட்சியும் அமைந்துள்ளது. 1947-56 வரை ஐ. தே. க, நிலையும் இதுவாகத்தான் இருந்து வந்திருக்கிறது. இக்காரணத்திற்காகவே நன்கு ஸ்திரமாகவுள்ள-அழைக்கப்படும் நேரத்திற் பதவி ஏற்கக்கூடிய; அரசாங்கத்தின் தவறான போக்கிற் கெதிராகப் பொறுப்புள்ள கண்டனங்களை வெளியிடும் ஒரு எதிர்க் கட்சி தேவையாக இருக்கிறது.

1947-56 வரையும், அதற்குப்பின் 1960 வரையும் கூட நாம் திறமையானதொரு எதிர்க் கட்சியைப் பெற்றிருக்கவில்லை. முதலாவது பாராளுமன்றத்தில் இலங்கை, இந்திய காங்கிரஸ், ஒரு சிலகாலம் தமிழ்க் காங்கிரஸ் பின்

னர் தமிழரசுக் கட்சி, ஒருசில சுயேச்சைகள் என்பனவற்றின் ஆதரவைப் பெற்றிருந்த இடது சாரிகள் முக்கியமான எதிர்க்கட்சியாய் அமைந்தனர். எவ்வாறெனினும் இக்குழுக்கள் பெரும் போக்கானதொரு உடன் பாட்டிற்குட் பட்டு, ஐ. தே. க. எதிரான, மாற்றுக வரத்தவறிவிட்டன. திரு. சிறீநிசங்காவின் இல்லத்தில் நிகழ்ந்த படியால் ''யமுனு பேச்சுவார்த்தைகள் எனப் பெயர் பெற்ற எதிர்க்கட்சிகளின் உடன்பாடு, குறித்தெழுந்த பேச்சுவார்த்தைகள். எதிர்க் கட்சியின் பல்வேறுபட்ட குழுக்களில் காணப்பட்ட உடன்பாட்டுக்கு வரமுடியாத வேற்றுமைகள் காரணமாக முறிந்தன. அவர்கள் பொதுவானதொரு திட்டத்தைப் பொறுத்தளவில் உடன்பாட்டிற்கு வரவில்லை. இரண்டாவதாக ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்பதிலும் ஒரு முடிவுக்கு வரவில்லை. கலாநிதி N. M. பெரரா ஒரு தனிப் பெரும்பான்மைக் கட்சியின் தலைவராக இருந்தமையால் எதிர்க்கட்சித் தலைமைப் பதவிக்கு உரிமை பெற்றிருப்பினும் இப் பதவி ஏற்படுத்தற் படுவதற்கும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் எதிர்ப்பைக் காட்டினர். எனவே 1950, ஆனி 23-ல் சபா நாயகர் கலாநிதி N. M. பெரராவை எதிர்க்கட்சிகள் தலைவராகத் தெரிந்தன என்று பிரகடனப்படுத்த முடிந்தது. இவ்வாறாக, சபைப் பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் எதிர்க் கட்சித் தலைவராகும் வழக்கம் ஏற்படுத்தப்பட்டது. இதே அடிப்படையில் 1952-ல் பண்டாரநாயக்காவும் 1956-ல் Dr. N. M. பெரராவும் 1960 பங்குனியில் திரு. சி. பி. டி. சில்வாயும்; இப்போதைய பாராளுமன்றத்திற் திரு. டட்லி சௌநாயக்காவும் எதிர்க்கட்சித் தலைவராயினர்.

1965 ஸ்ரீமாவோ எதிர்க்கட்சித் தலைவர்: 1970ல் J.R.J

எதிர்க் கட்சித் தலைவரின் தெரிவு பற்றி சில குறிப்புகளைக் கூற விரும்புகிறேன். எதிர்க் கட்சித் தலைவரே, மாற்றுப் பிரதமராவர். நிலவும் அரசாங்கக் கட்சி தோற்கடிக்கப் பட்டால் புதிதாய் உருவாகும் அரசாங்கத்தின் பெரும் பங்கை அவரது குழுவகிக்கும் என்வே அவர் தனது கட்சியால் எந்நேரத்திலும் நிலவும் அரசாங்கத்திற்கு மாற்றுக அரசாங்கம் அமைக்க முடியுமென்ற தோரணையில் இயங்க வேண்டும். நாம் பெற்ற எதிர்க் கட்சிகளிற் சிலவற்றினது நிலையோ இத்தன்மை பெறவில்லை. முதலாவது பாராளுமன்றத்தில் கலாநிதி N. M. பெரராவைக் குறிக்கும்போது 1947 தேர்தலில் 95 தொகுதிகளில் 28-ற்கே இலங்கா சமஜமாஜக் கட்சி போட்டியிட்டது. இவற்றுள் 10 தானத்தையே அதாற் பெறமுடிந்தது. எதிர்க்கட்சித் தலைவர் ஒரு தேசியத் தலைவராகவே இருக்கவேண்டும். எனவே அரச அதிகார உரிமை வேண்டிப் போதியளவு தொகுதிகட்கு போட்டியிட்ட கட்சிக்குத் தலைவராக அமைய வேண்டும்.

1947-ல் 95-ல் 28-ற்கு போட்டியிட்டதனுல் இவ் இலங்கா சமஜமாஜக் கட்சிக்கு இது பொருந்தாது.--இரண்டாம் பாராளு மன்றத்தில் திரு. பண்டாரநாயக்க எதிர்க்கட்சித் தலைவரானுர். எனினும் 95-ல் 48 தொகுதிக்குப் போட்டியிட்ட இலங்கா சுதந்திரக்கட்சி 9 தொகுதிகளிலேயே வெற்றி பெற்றது. அவர் 48 தானங்களில் வெற்றி பெற்றிருந்தாலும் நியமன அங்கத் தவர்களின் துணைஇன்றி நிலையான அரசாங்கத்தை அமைத் திருக்க முடியாது. திரு. பண்டாரநாயக்கா ஒருவேளை கூட்டு அரசாங்கத்தை மனதில் வைத்து அரசாங்கம் அமைக்கும் நோக் குடன் பிரசாரம் செய்திருக்கக் கூடும்.

மூன்ரும் பாராளுமன்றத்தின் நிலை இன்னும் வேறுபட் டுக் காணப்பட்டது. கலாநிதி N. M. பெரரா எதிர்க் கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப் பட்டாரேனும் அவரது கட்சி பண்டாரநாயக்காவின் மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சி யோடு போட்டியிடுவதில்லையென ஒப்பந்தம் செய்திருந்தது. எனவே ல. ச. க. தேர்தலில் ஆட்சி அதிகாரம் பெறவேண்டிப் போட்டியிட்டது எனக் கூறுவதற்கில்லை. கலாநிதி N M. பெரரா பண்டாரநாயக்காவிற்காக விட்டுக் கொடுத்தார் என்று கூறுதல் பொருந்தும். மாற்று அரசாங்கமாக வர முயற்சி செய்யாது பண்டாரநாயக்கா பதவி பெற உதவிய தலைவரும் கட்சியும் எதிர்க்கட்சித் தலைமை பூண்டது இயற்கைக்கு முரணுக அமைந் ததே. ஐ. தே. கட்சிதான் உண்மையான 'மாற்ருக' இருந்தது.

இதிலும் பார்க்கத் தனித்துவம் மிக்கதொரு சூழ்நிலை 1956ல் பாராளுமன்றத்தில் ஏற்பட்டது. திரு. சுந்தரலிங்கம், தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம். எதிர்க்கட்சித் தலைவராக வேண்டுமென விரும்பினுர், 14 தானங்களிற் போட்டியிட்ட அக் கட்சி 10 தானங்களைப் பெற்றது. தமிழ் சுயேச்சைகள் திரு. செல்வநாயமம் எதிர்க்கட்சித் தலைவராவதற்கு உதவி புரி வர் எனத் திரு. சுந்தரலிங்கம் கருதினுர். இது நிகழ்ந்திருப்பின் தனித்துவமுள்ளதொரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கும். நான் முன் னர் கூறியபடி பாராளுமன்ற அமைப்பில் எதிர்க்கட்சித் தலைவர் பிரதமரின் மாற்ருவர். ஆனுல் தமிழரசுக் கட்சி எதிர்கால அர சாங்க மாவதற்கான முயற்சிகளை எடுக்க வில்லை. எனவே, அர சாங்கத்தை அமைத்தற்கு முற்ருக, வாய்ப்பற்ற ஒரு கட்சிக் தலை வரை எதிர்க்கட்சித்தலைவராக்குதல் முறையற்றதோர் செயலா கும். இத்தகைய ஒரு நிகழ்ச்சி பல இன மக்கள் வாழும் நாடு களில் ஏற்படக்கூடிய விதி விலக்கான ஒன்ருகும். இத்தகைய நிலை ஏற்படுவதற்கும் அதனுல் பாராளுமன்ற அமைப்புத் திரிந்து

இருபங்காவதற்கும் வாய்ப்புக்கள் உண்டு. 4-ம் 5-ம், பாராளுமன்றங்களில், இந்நிலை சாதாரண நிலைக்கு மாறியது. 1960 பங்குனியில் எதிர்க்கட்சித் தலைவராய் இருந்த சி. பி. டி. சில்வா பிரதமருக்கு உண்மையான மாற்றாக அப்போது விளங்கினார். தற்பொழுது திரு. டட்லி சேனநாயக்கா எல்லாவழிகளிலும் பிரதமருக்கு மாற்றாக அமைந்தார்.

எமது பாராளுமன்ற அமைப்பில் எதிர்க்கட்சித் தலைவர் பிரதமருக்கு உண்மையான மாற்றாகக் கருதப்பட வேண்டுமேயன்றி, எதிர்க் கட்சிகளின் சார்பில் பாராளுமன்ற நடவடிக்கைகளை சபை முதல்வரோடு ஒழுங்கு படுத்துபவரோ என்ற ஐயத்திற்கு முடிவுகட்டவேண்டும். முதலாம் பாராளுமன்றத்தில் அவர் பாராளுமன்ற நிகழ்ச்சிகளை அரசாங்கத்தோடு கலந்து ஒழுங்கு செய்யும் எதிர்க்கட்சிகளினது முதல்வராக விளங்கினார். 2-வது பாராளுமன்றத்தில் திரு. பண்டாரநாயக்கா பிரதமருக்கு மாற்றாக அதிகார வேட்கையைக் காட்டினார். 3-வது பாராளுமன்றத்தில் Dr. N. M. பெரரா, திரு. பண்டாரநாயக்கா தேர்தலில் வெற்றிபெற உதவினார் எனினும், பின்னர் தமது கட்சியைப் பண்டாரநாயக்கா மந்திரத்திற்கு மாற்றாகக் கருத முனைந்தார். 1960 பங்குனித் தேர்தல் ல. ச க. அதிகார வேட்கைக்குச் சான்று பகரும். 4-ம் பாராளுமன்றத்தில் திரு. சி. பி. டீ. சில்வாவும், தற்போது திரு. டட்லி சேனநாயக்காவும் பிரதமர் பதவிக்குத் தகுதிவாய்ந்த மாற்றாக அமைந்தனர். இதனால் நமது முடிபு யாதெனில் உண்மையாகவே அதிகாரம் பெற விரும்பியவராக இருத்தல் வேண்டும்; தீவடங்கிலும் அதிகாரம் பெற வேண்டி முயற்சி செய்யாத ஒரு சிறுபான்மைக் கட்சித் தலைவர் அதற்குத் தகுதியற்றவர் என்பதே. எனவே ஒரு சிறுபான்மைச் சமூகக்குழுவின் தலைவராக அவர் இருக்க முடியாது.

பாராளுமன்ற அரசாங்கம் நன்கு செயற்படுதற்கு எதிர்ப்பற்ற தலைமையுடைய பிரதமர் அவசியமாகும். வேறு எவராவது தலைமை வேட்கை யுடையோராயின் மந்திரத்தில் குழுப்பிரிவுகளும் ஒற்றுமையின்மையும் ஏற்படும். இது நிர்வாகத்தையும் கொள்கை உருவாக்கத்தையும் கெட்ட முறையிற் பாதிக்கும். ஓரளவிற்கு எமது நாட்டிற் பிரதமரின் தலைமை ஏற்றுக் கொள்ளப்பட்டதேனும் இத்தன்மை எல்லாக் காலத்தும் காணப்படவில்லை. திரு. டி. எஸ். சேனநாயக்கா வசதியான பேராண்மை கொண்டிருந்தும் அவரோடு போட்டியிட திறமை வாய்ந்த திரு. பண்டாரநாயக்கா இருந்தார். இக்காலத்தில் சேனநாயக்கா மந்திரிசபையில் பண்டாரநாயக்கா உறுப்பின

ராக இருந்தார். அவரைக் கட்டுப்படுத்துவது பிரதமருக்குக் கடினமானதாக இருந்தது. சில சமயங்களில், திரு. பண்டாரநாயக்கா மந்திரத்தின் கட்டுப்பாடுகளைப் பாரதூரமான முறையில் மீறிய குற்றத்திற்கு ஆளானார். திரு. டட்லி சேனநாயக்காவின் குறுகிய பதவிக்காலத்தில் சேர். ஜோன் கொத்தலாவல அவரோடு போட்டியிட்டார். சேர் ஜோனின் காலத்தில் வெளிப்படையாக அவருக்கு எதிர்ப்புக் காணப்படாதபோதும் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிற்கு அவ்வெண்ணம் இருந்ததாகக் கூறப்படுகிறது. திரு. பண்டாரநாயக்காவைப் பொறுத்தளவில் அவர் தமது காலத்திற் பெரும் பகுதியில் தனியாண்மை செலுத்தினாரேனும், பிற்காலத்தில் அவரது மந்திரத்தில் ஒரு பகுதியினர் திரு. தஹநாயக்காவே அவரை ஈடுசெய்யவல்லவர் என்ற எண்ணம் கொண்டிருந்தமை புலப்பட்டது. இன்றைய பிரதமரது மந்திரத்திலுள்ளோருக்குப் பிரதமராகும் எண்ணம் உண்டென்ற செய்திகள் எமக்குக் கிட்டுகின்றன வெனினும் அவரின் நிலைமை ‘அவரது தலைமை மாற்றப்படக் கூடாது என்ற கருத்து கட்சியுள் நிலவுவதால்’ எதிர்ப்பற்று அமைந்தது.

பிரதமர் அரசாங்கத்தின் தலைவரென்ற தோரணையில், தலைமையை அளிப்பதோடு அவரே பொதுஅபிப்பிராயத்தினைச் சிறந்த முறையில் விளக்கக் கூடியவராக இருத்தலால் தமது கருத்தை பாராளுமன்றக் குழுவிற் தேவை யேற்படின் துணிந்து வெளியிடக் கூடியவராகவும் இருக்க வேண்டும். திரு. டி. எஸ். சேனநாயக்கா காலத்தில் அவருக்கும் பாராளுமன்றக் குழுவுக்கும் வேற்றுமைகள் எழவில்லை. அவரால் நிலையான உறுதியான தலைமையை அளிக்க முடிந்தது. அவருக்குப் பின்னர் பாராளுமன்றக் குழுவின் கை மேலோங்கியது. இது திரு. டட்லி சேனநாயக்கா சேர். ஜோன் என்போரது காலத்தில் தெளிவாகப் புலப்படவில்லை. ஆனால் அதன் பின்னர் பாராளுமன்றக் குரு அதிகாரத்தை அதிகரிக்கமுயன்றது. உதாரணமாகத் திரு. பண்டாரநாயக்கா பாராளுமன்றக் குழு ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால் சிங்களம் மட்டும் சட்டத்தின் முதற் தயாரிப்பைக் கைவிட வேண்டி ஏற்பட்டது. அதிருப்தியுள்ள அரசாங்கப் பாராளுமன்றக் குழுவினரைத் திருப்திப்படுத்த வேண்டி அவர் திரு. பிலிப் குணவர்த்தனவின் நெற்காணி மசோதாவையும் கூட்டுறவு வங்கி மசோதாவையும் திருத்தவேண்டி ஏற்பட்டது.

தற்போதைய பிரதமரின் காலத்திலும் இதேபோக்கு காணப்படுகிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, பத்திரிகை மசோதாவின் முதல் நகல் நிராகரிக்கப்பட்டதும், பிரதமர்

ஆதரித்த அரிசிவெட்டிற்கு பிரிவினையற்ற ஆதரவு கிடைக்காமல் விட்டதும் அமையும். இதில் எங்களுக்குத் தேவையானது என்னவெனில், பொருளாதார நெருக்கடிக் காலத்தில் பிரதமர் ஆளும் கட்சியின் முதல்வராக இருந்தால் மட்டும் போதாது என்பதே. முதலாவது போரின் நடுப்பகுதியின் பிற்காலத்தில் லோயிட் ஜோர்ச் தோல்வியுற்றுக் கொண்டிருந்த சமயம் சேர். வின்சன் சேர்ச்சில், 1931-ல் பொருளியல் மந்தம் உச்சநிலையை அடைய $1\frac{1}{2}$ கோடி மக்கள் வேலையற்றிருந்தபோது குடிபதி ரூஸ்வெல்ட்; அரசியல் நலிவுற்றபோது டீகால் என்பவர்கள் எழுச்சியடைந்தது போன்று உறுதியான நிலையான தலைமையை அளிக்கக் கூடிய பொதுப் பிரதமர் அமையவேண்டும். இக்கருத்தில் நோக்கும்போது பிரதமர், சகாக்களின் முதல்வராக இருக்க முடியாது. இச்சந்தர்ப்பங்களில் அவர் அரசாங்கத்தினது எதிர்ப்பற்ற எஜமானனுகை அமையவேண்டும். நாம் சிறந்த சில பிரதமர்களை அடைந்திருந்த பொழுதினும் துர்அதிர்ஷ்டவசமாக அவர்களுள் ஒருவராவது லோயிட் ஜோர்ச், சேர்ச்சில், ரூஸ்வெல்ட், டீகால் என்பவர்கள் போன்று சந்தர்ப்பத்திற் சேவைசெய்யத் தோன்றியவர்களல்லர்.

பிரதமரின் தலைமையோடு, மந்திரம் குழுவாக இயங்குதல், நெருங்கிய தொடர்புடையதாகும். "நிறுவனமாகக் கருதும்போது மந்திரத்தின் முக்கிய கூறு ஒற்றுமையாக, பிரிக்க முடியாத முறையில் இயங்குதலாகும்" என மோர்லிப் பிரபு கூறினர். பிரித்தானியாவினில் இது நீண்டகாலமாக வேரூன்றி விட்ட விடயமாகும். அரசியல் தனி மனிதத்துவத்திற்கு மதிப்பளித்த சாபக்கேடான டொனமூர் வழக்கங்கள் இந்நாட்டில் இன்னும் மடியவில்லை. டொனமூர் திட்டத்தின்கீழ் மந்திரிகள் தமது சொந்தத் திட்டங்களை அமுலாக்க முயன்றனர். அவர்கள் தங்களைக் கூட்டுப் பொறுப்புள்ள ஒருமைப் போக்குடையவர்களாகக் கருதவில்லை. அவர்கள் அநேகமாகத் தமது சகாக்களைக் கண்டித்ததோடு அவர்களுக்கெதிராக வாக்கும் அளித்தனர். யாப்பின் 46-ம் பகுதி மந்திரம் கூட்டாகப் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாக அமையும் எனக் குறிப்பிட்ட போதிலும் இவ்வழக்கம் தொடர்ந்து நிலவுகிறது. கூட்டுப் பொறுப்பு என்னும் தத்துவம் எமது நாட்டில் வேரூன்ற வேண்டிய ஒன்ருக இன்றும் அமைந்துள்ளது.

டி. எஸ். சேனநாயக்கா மந்திரிசபையில் இரு மந்திரிகள் இத்தத்துவத்தை வெளிப்படையாக மீறினர். இந்திய, பாகிஸ்தானியக் குடியுரிமைச் சட்டத்திற்கென வாக்கெடுப்பு நிகழும்போது, சபையை விட்டு வெளியேறியதற்காக திரு. சுந்தரலிங்

கம் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். அரசாங்கக் கொள்கைகளைக் கண்டிக்கும் அறிக்கைகளைத் திரு பண்டாரநாயக்கா விட்டாரேனும் அவர் மிக வலுப்பெற்றிருந்தபடியால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இத்தத்துவம் திரு. டட்லி சேனநாயக்கா காலத்திலும் மீறப்பட்டது. 'Primer Stakes' அறிக்கை வேறு விடயங்களோடு பிரதமர் விதிவிலக்கில்லாது பல அரசாங்க உறுப்பினர்மேல் கௌரவமற்ற, கேவலமான தாக்குதல்களைச் செய்தது. இதற்குக் காரணம் சேர். யோண் எனக் கூறப்பட்டது. சேர். யோணைப் பதவி நீக்கம் செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் அவர் தான் 'அதைச் செய்யவில்லை' என மறுக்கப் பிரச்சினை தீர்ந்தது. ஆனால் பின்னர் வெளிவந்த சான்றுகள் சேர் யோணே பொறுப்பாளியென நிரூபித்தன. சீனாவோடு றப்பர், அரிசி ஒப்பந்த முடிவு பற்றியும் ஒரு கருத்து வேற்றுமை மந்திரிசபையில் நிலவியது. வர்த்தகமந்திரி திரு. ஆர். ஜி. சேனநாயக்கா இதனை ஆதரிக்க, உணவு விவசாய மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா இதனை எதிர்த்தார். மந்திரிசபையின் அறையில் இதனைத் தீர்க்காது, பொது மேடைகளிற் பேசப்பட்டமையால் இவ்விடயம் அம்பலமாயிற்று. சேர் யோணின் மந்திரிசபையிலும் மந்திரிசபை ஒழுங்கு முறைகள் மீண்டும் மீறப்பட்டன. மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி என்னவெனில் வீடமைப்பு மந்திரி சேர் கந்தையா வைத்தியநாதன் 1954 ஆனியில் நேரு--கொத்தலாவல ஒப்பந்தத்தின் மொழிபற்றிய கூறுகளைப்பற்றி வெளிப்படையாகத் தமது கருத்து வேற்றுமைகளைத் தெரிவித்தார். வர்த்தக மந்திரி திரு. ஆர். ஜி. சேனநாயக்காவாலும் சில குழப்பங்கள் ஏற்பட்டன. அவர் அரசாங்கத்தின் சில கொள்கைகளைக் கண்டனம் செய்தார். பிரதமர் அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்காது, தொடர்புகளைச் சீராக்க முயன்றார். திரு. பண்டாரநாயக்கா மந்திரிசபையில் ஒழுங்குமுறை மிகச் சீர்கெட்டது. பல சந்தர்ப்பங்களில் குடியரசுச் சமஉடமைவாதிகளுக்கும் மத்தியவாதிகளுக்குமிடையே, பிணக்குகளும், கருத்து முரண்பாடுகளும் எழுந்தன. இந்நிலை குடியாட்சிச் சமஉடமைவாதிகள், மத்தியவாதிகளை மந்திரசபையில் இருந்து வெளியேற்றச் செய்வது பிரதமரை வற்புறுத்தியதில் வெற்றியடையும்வரை நீடித்தது.

இன்றைய மந்திரி சபையில் திரு. பீலிக்ஸிற்கும், அவர் நீதியமைச்சராக இருந்த காலத்தில் அவரது சகாக்களுக்குமிடையே எதிர்ப்புத் தோன்றியது. இச்செய்தி அவர் பாராளுமன்றத்தில்

தன்னை மந்திரிகள் சபையின் மத்தியிலிருந்து வெளியேற்றும்படி தனது சகாக்கள் ஐவர் பிரதமரை வேண்டினர் என்று கூறியதிலிருந்து உறுதிப்படுகின்றது.

மந்திரிசபையில் ஒற்றுமையின்மை பற்றிய சான்றுகளைக் கொண்டு பொருளாதார நெருக்கடிக் காலத்தில் மந்திரிசபை ஒற்றுமையாக, பிரிக்கமுடியாத, முழுமையான தொன்றாக இயங்கல்வேண்டும் என்பதை மீண்டும் எடுத்தியம்ப விரும்புகிறேன். வேற்றுமையும் பகைமையும் காணப்படின் முன்னேற்றம் தடைப்படும். இத்தகைய பகைமைகளும் வேற்றுமைகளும் இந்நேரத்தில் எமது நாட்டுக்கு உகந்ததன்று. இறுதியாக நாட்டின் பெயரளவு பற்றிய ஐயப்பாடு எழுகிறது.

பெரும்பாலும் அத்தலைமை ஆளுநர் முதல்வரையே (Governer General) குறிக்கும். பாராளுமன்ற அமைப்பு நன்கு தொழிற்பட வேண்டின் நாட்டின் தலைவர் பாரபட்சமின்றி இயங்குவதோடு அரசியற் சக்தியிற் கால்வைக்கவும் கூடாது. இது யாப்பிலும் கூறப்பட்டுள்ளது. யாப்பினது 4-ம் பிரிவின் 2-ம் துணைப் பிரிவு ஆளுநர் முதல்வர் கூடியமட்டும் தமது கடமைகளை ஐக்கிய இராச்சியத்தில் நிலவும் வழக்குகளுக்கேற்ப இயற்றவேண்டும் எனக் குறிக்கிறது. வேறுவிதமாகக் கூறின் அரசரைப்போல் அவரியங்கவேண்டும். பேராசிரியர் லஸ்கி 'லொக் தொட்டு பெந்தம் வரைக்கும் இங்கிலாந்தின் அரசியற் சிந்தனைகள்' என்ற தமது கட்டுரை யொன்றினில் அரசரின் நிலையை ஒரே வசனத்தில் நன்கு விளக்கியுள்ளார். "கட்சி வேறுபாடுகளுக்கு மேலாக அரசர் இருப்பது இங்கிலாந்தினது யாப்பமைப்பின் முக்கியகூறு; நன்கு கட்டுக்கோப்புடன் அமைந்த சண்டைக்குள் அவர் கௌரவ சின்னமாக அமைகிறார்' எனக் கூறுகிறார். எமது அரசியல் ஒழுங்கில் இத்தகைய நிலையையே ஆளுநர் முதல்வர் வகிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

துரதிர்ஷ்டவசமாக, எமது நிலைமை சற்று வேறுபட்டமைந்தது. முடியாட்சி பிரித்தானியாவில் நிரந்தரமான ஒன்று. மன்னர் தமது பதவியைக் கௌரவமான முறையிற் பயமின்றி வகிப்பதற்காகச் சில வழக்கங்களும் மரபுகளும் பிரித்தானியாவிற் றோன்றியுள்ளன. இலங்கையிலுள்ள அவரது பிரதிநிதியின் நிலை அவ்வாறமையவில்லை. ஏனெனில் அவர் மன்னர் விரும்பும் காலம் மட்டும் பதவி வகிக்கிறார். "பாராளுமன்றத்திற் பெரும்பான்மைப் பலம்கொண்டுள்ள பிரதமரிற்கும் அரசாங்கத்திற்கும் விருப்பமுள்ள வரை அவர் பதவியில் இருப்பார் என யாப்பின் 4-ம் பிரிவின் 2-ம் துணைப் பிரிவு குறிக்கின்றது. இதுவே பாகித்

தானின் பிரதம நீதிபதி வெளியிட்ட சட்டரீதியான நிலைமையு மாகும். பாகித்தானக் கூட்டரசுக்கும் மௌலவி தமிசுடின்கான் என்பாருக்குமிடையில் நிகழ்ந்த வழக்கின் தீர்ப்பில் ''ஆளுநர் முதல்வரைத் திரும்ப அழைக்கும்படி மாட்சிமை தங்கிய அர சியைக் கோருவது சரியேயென்றும் அத்தோடு டொமினியனின் அரசாங்கம் மக்களை நன்கு பிரதிபலித்தால் அரசி அங்கு ஆலோ சனையை ஏற்பதே இயல்பு'' என்றும் கூறினர். எனவே, ஆளு நர், முதல்வர் அரசியைப் போன்று சுதந்திரமானவரல்லர். அவர் எந்நேரத்திலும் திருப்பியழைக்கப்படலாம். இது டொமி னியன்களில் இருமுறைதான் நிகழ்ந்தது. 1931-ல் ஐரிஷ் குடி யரசின் ஆளுநர் முதல்வர் திரு. ஜேம்சு மக்நீல் திரும்ப அழைக் கப்பட்டார். சேர். ஒலிவர் குணத்திலக்காவும் 1962-ல் திரும்ப அழைக்கப்பட்டார். பாகித்தானின் மூன்றும் ஆளுநர், முதல் வர் சர். குலாம் முகமதைத் திருப்பி அழைப்பிக்க, நாகிமுதீன் பிரதமர் பதவியிலிருந்து விலக்கப்பட்டபோது அவரால் எடுக் கப்பட்டது. அவர் அரசியோடு தொலைபேசியிற் தொடர்பு கொள்ள முயன்றார். ஆனல் தொடர்பு வெட்டப்படவே அவ ரது முயற்சி தோல்வியுற்றது.

யாப்பின்படி ஆளுநர், முதல்வர் இரு முக்கிய கடமைகளை இயற்றுதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை ஆராய நான் விரும்புகிறேன். முதலாவது கடமை பிரதமரின் தெரிவோடு தொடர்பு கொண்டதாகும். தெரிவுசெய்யு மிவ் அதிகாரத்தோடு பதவி நீக்கம் செய்யும் உரிமையும் தொடர் புடையது. இரண்டாவது கடமை பாராளுமன்றத்தினைக் கலைப் பதோடு தொடர்புடையதாகும். சாதாரண நிலையில் இது ஒரு இலகுவான காரியம். ஏனெனில் சனப்பிரதிநிதிகள் சபையில் பெரும்பான்மைக் கட்சித் தலைவரே இப்பதவிக்குத் தெரிவுசெய் யப்படுவது வழக்கம். (இவர் சனப்பிரதிநிதிகள் சபையில் இருக்க வேண்டிய அவசியமில்லை; பிரபுக்கள் சபையிலும் அங்கம்வகிக் கலாம்.) ஓரிருவரிடையே இருந்து தெரிவு செய்யப்படவேண் டிய சூழ்நிலைகளும் ஏற்பட்டன. சோல்பறிப் பிரபு, டட்லி சேனநாயக்ககா, சேர். யோண் என்பவரிடையே தெரிவை நடாத்தவேண்டி ஏற்பட்டது. அவர் முன்னவரையே தெரிவு செய்தார். 1960-ல் திரு டட்லி, பாராளுமன்றத்தில் தோற் கடிக்கப்பட்டவுடன் சேர். ஒலிவர், சி. பி. டி. சில்வாவைப் பிர தமராக்கி இருக்கலாம். ஆனல் அவர் திரு டட்லியின் பாராளு மன்றக் கலைப்பு ஆலோசனையை ஏற்றார். இத்தகைய தருணத் தில் ஆளுநர், முதல்வரின் விருப்பு வரையறுக்கப்பட்டுள்ளது. அவர் அரசியலெண்ணம் கொண்டிருப்பின் அரசியல் நோக்கிற்

காக, அல்லது தமது சொந்த முன்னேற்றத்திற்காகத் தனது அதிகாரத்தைப் பயன் படுத்தலாம். நியமனம் செய்யும் அதிகாரம் தன்னோடு பதவி நீக்க அதிகாரத்தையும் கொண்டது. இவ் அதிகாரம் சாதாரண நேரத்திற் பயன் படுத்தப்படுவதில்லை பிரதமர் யாப்பை வெளிப்படையாக மீறினல் அல்லது பாராளுமன்ற நம்பிக்கையை இழந்தபின் பதவியில் இருந்த விலக மறுத்தால் இவ் அதிகாரம் பயன் படுத்தப்படும். இக்கால வரையில் இத்தகைய நிகழ்ச்சி ஏற்பட்டதில்லை. ஆனல் ஒரு சந்தர்ப்பத்தில் சேர் ஒலிவர் குணதிலகா இவ் அதிகாரத்தைப் பயன் படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். திரு. தஹநாயக்கா பிரதமராய் இருந்தபோது, தமது சகாக்களின் பெரும்பான்மையோரை பதவிநீக்கம் செய்தபோது நிகழ்ந்தது. திரு. தஹநாயக்கா சனப் பிரதிநிதிகள் சபையில் ஆதரவைப் பெற்றிருக்கவில்லை யென்றும், சபையில் அவர் தோற்றிருப்பாரென்பதும் வெள்ளிடை மலை. இக்காரணத்திற்காக அக்காலத்திற் பெரும்பான்மை வகித்த ல. சு. க. வின் சார்பில் திரு. சி. பி. டி. சில்வா திரு. தஹநாயக்காவைப் பதவி நீக்கம் செய்து தம்மை பிரதமராக்கும்படி ஆளுநர் முதல்வரை வேண்டினர். இதனற் பயனேதும் ஏற்பட்வில்லை.

ஆளுநர் முதல்வரின் மற்றைய முக்கிய அதிகாரம் சபையினைக் கலைத்தலாகும். சாதாரண காலத்தில், பிரதமர் பெரும்பான்மை ஆதரவு கொண்டிருக்கும், நேரத்தில் அவர் பிரதமரின் ஆலோசனைப்படி நடப்பார். ஆனல் அவர் தனது சொந்த எண்ணப்படி நடக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. கட்சி நிலைமைகள், சபையில் தெளிவற்றுக் குழம்பிக் காணப்படும் போது இந்நிலை தோன்றும். இத்தருணத்தில் மாற்றுப் பிரதமர் ஒருவரைப் பெற முடியும் என அவர் கண்டால் கலைப்பு யோசனையை அவர் நிராகரித்து விடலாம் உதாரணமாக 1960 சித்திரையில் அவர் டட்லியின் யோசனையைத் தள்ளி திரு. சி. பி. டி சில்வாவைப் பிரதமராக்கியிருக்கலாம். இத்தகைய நிலை எதிர்காலத்தில் ஏற்படலாம். ஒரு புத்தியுள்ள ஆளுநர் முதல்வர் தனது சொந்த நலத்திற்காக இவ் அதிகாரத்தைப் பயன் படுத்தலாம்.

பிரதமரை நியமித்தலும் சபையைக் கலைத்தலும் தெளிவான வழக்குடை அதிகாரங்கள். எமக்குந் தெரியாத வழியிலும் அவர் தலையிடலாம். அவர் ஒரு பிரதமரது அரசியல், மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்க உதவலாம். உதாரணமாக 1958–வைகாசியிலெழுந்த அவசரகாலத்தின் போது முன்னைய ஆளுநர் முதல்வர் இதனையே செய்தார். சந்தர்ப்பத்துக்கேற்ப அவர் அதிகாரம்

செலுத்தலாம். அவசர காலத்தின் முதலிரு கிழமைகளிலும் இதுவே நிகழ்ந்தது. இத்தகைய தருணங்களிற் தலையிடும் தன்மை பதவியில் இருப்பவரிற் தங்கியுள்ளது சேர் ஒலிவரோடு ஒப்பிடும் போது சான்ருண்மையின் படிவங்களாக சேர் மொன் மேசன் மூரும் சோல்பறிப் பிரபுவும் அமைந்தனர். ஆனல் சேர் ஒலிவர் வலியவராகவும் அரசிய லெண்ண முடையவராகவும் அதனுல் தலையிடும் மனப்பான்மை கொண்டவராயு மிருந்தார். இதனுலவர் வாரிசுகளும் அவர் அடிச்சுவட்டையே பின்பற்றுவர் என்பதற்கில்லை.

இங்கு கூறியவற்றிலிருந்து எமது பாராளுமன்ற அமைப்பு சில வகையில் நன்கு இயங்கிய தென்பது தெரியும். ஆனல் பல வகைகளில் எதற்காக அது புகழப்பட்டதோ அதற்கு முற்றிலும் முரணுக இயங்கிற்று. எமது பாராளுமன்ற அமைப்பு பொருளாதாரப் பிரச்சினையைத் தாங்கி நிற்குமா, தீர்க்குமா அல்லது டீகாலின் 5-ம் குடியரசு கைக்கொண்ட குடிபதி ஆட்சியமைப்புப்போன்ற வேறு முறைகள்தான் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்குமா என்ற ஐயப்பாடு எழுகிறது. இத்தகைய பிரச்சினைகள் பிரதிநிதித்துவ யாய்பு நிர்ணய சபை ஒன்றினுல் ஆராயப்படவேண்டும். நான் முன்பு கூறியபடி பிரச்சினைகளும் குழப்பங்களும் பிரித்தானிய அமைப்பை அப்படியே ஒற்றிக் கொண்டதால் ஏற்பட்டன எமது நிலைமை வழக்காறுகள் பொருளாதார அமைப்பு பொது அபிப்பிராயத்தின் பாங்கு என்பவை பிரித்தானியாவில் வழக்கி லிருப்பவையினின்றும் வேறுபட்டவை. எனவே அதனை இலங்கையில் நன்கு செயற்படுத்த முடியாது. எனவே நாங்கள் எமது மக்களின் தேவைக்கும் திறமைக்கும் ஏற்றதொரு அமைப்பினை ஏற்படுத்திக்கொள்ளல்வேண்டும்.

# * முதலாம் விஜயபாகு, இலங்கையின் விடுதலை வீரன்

பேராசிரியர் க. அ. நீலகண்ட சாஸ்திரி, M. A.

முதலாம் விஜயபாகு (வெற்றிப்புயம்) இலங்கையை அரசாண்ட பெருமன்னர்களுள் ஒருவன். ''விஜயவாகுவே இலங்கையை ஆண்ட மிகச் சிறந்த அரசன் என்பது திண்ணம்'' என்று கலாநிதி: பரணவிதான அவர்கள் கூறியுள்ளார்கள்.[1] அவன் அரசுகட்டில் ஏறும்பொழுது சோழ அரசாட்சி இலங்கையில் நன்கு நிலைநாட்டப் பெற்று விட்டது. சுதேச மன்னர்கள் ரோஹனத்தின் மலைப்பிரதேசங்களில் ஒளிந்து வாழ்ந்தனர். சைவசமயத்தைச் சார்ந்த தோழர்களால், புத்தசமயம் அதைத் தாங்கும் அத்திவாரத்தோடு சேதப்படுத்தப்பட்டது. இலங்கை மன்னன் ஒருவன் தன் குடும்பத்தோடு கைதியாக சோழநாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கேயே சில ஆண்டுகளின் பின்னரிறந்தான். இந்நிலை விஜயபாகுவின் அரசாட்சியின் நடுப்பகுதியில் மாற்றம் அடையத் தொடங்கியது. சிங்களத் தலைவர்களிடையே நிலவிய பிளவு, அவர்களை அழித்தோ அல்லது அடக்கியோ நீக்கப்பட்டது; தென்னிந்தியாவில் நிலவிய அரசியல் குழப்பம் தமிழ்ச்சோழர் ஆதிக்கத்தை இத்தீவினின்றும் அகற்றுவதற்குத் துணை புரிந்தது. அத்துடன் இலங்கை முழுவதும் ஒரே அரசனின் கீழ் ஒன்றுபடுத்தப்பட்டது. போர்களினாலும், அந்நியர் கைப்பற்றுதலினாலும் ஏற்பட்ட சேதம் பரிகாரம் செய்யப்பட்டது. புத்தசமயம் முன்னிருந்த நிலைக்கு வந்தது. இலங்கை மறுபடியும் இந்துசமுத்திரத்தின் எல்லையிலுள்ள நாடுகளுடன் தொடர்பு கொண்டு ஒரு முக்கிய நாடாக விளங்கிற்று

---

* இக்கட்டுரை Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society என்ற சஞ்சிகையின் New Series Vol. IV Part I வெளியீட்டில் 1955-ல் வெளியானது. இதனைத் தமிழாக்கி வெளியிட அனுமதித்த ஆசிய வேத்தியற் கழகத்தின் இலங்கைக் கிளை ஸ்தாபனத்திற்கும் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியாருக்கும் எமது நன்றி.

மூலம்: ஆங்கிலம்

தமிழாக்கம்: செல்வி. தவமணி சிதம்பரநாதன் B. A. (Hons.)

1. A. S. C. 1949, p. 31.

மேற்கூறப்பட்டவையெல்லாம் விஜயபாகுவின் சாதனைகள். அவனது அரசாட்சியை விரிவாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். ஆகையால் சூளவம்சத்திலே கூறப்பட்டுள்ள சிறந்த வரலாற்றைப் பின்பற்றிச் சென்று, தென்னிந்திய, இலங்கைச் சான்றுகளால், சூளவம்சத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளைப் பூர்த்தி செய்வோம். இக்கட்டுரையாசிரியருக்கு சிங்கள மொழியறிவின்மை தவிர்க்கமுடியாத ஒரு தடை விதிக்கின்றது. 'அப்ஹாம்' (Upham) என்பவர், 'ராஜரத்னகர', 'ராஜாவளி' ஆகிய நூல்களிற்கு எழுதிய மொழிபெயர்ப்பு (1833), வரலாற்று நூல்களென எழுதப்பட்ட சிங்களக் காலவரிசைச் சரித்திரங்களிற்கு (Chronicles) ஒரு நம்பகமான மாதிரி எனின் அதிக செய்திகள் அவற்றினின்றும் கிடைக்கமாட்டா எனலாம். ஏனெனில், அவை சூளவம்சத்தினின்றும் தரத்தில் குறைந்தனவாகக் காணப்படுகின்றன.

விஜயபாகு அரசியலுக்கு வருமுன்பிருந்த இலங்கையின் நிலையைக் கலாநிதி பரணவிதான அவர்கள், பின்வருமாறு வருணிக்கின்றார். [2] "வடக்கே, கங்கைக்கரையில் மட்டுமே தங்கள் படையெடுப்பை நிறுத்திய வெற்றிகரமான சேனைகளையுடையவர்களாகவும், இந்தோனேசிய—சைலேந்திரர்களின் செருக்கையடக்கிய கடற்படை வன்மையுடையவர்களாகவும் விளங்கிய சோழர்களால், விஜயபாகு பிறப்பதற்கு சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது கி. பி 1041-ஆம் ஆண்டளவில் இலங்கை கைப்பற்றப்பட்டது. அநுராதபுரத்திலிருந்து கடைசி மன்னன் உயிரோடு கைப்பற்றப்பட்டான். பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு, ஒரு சோழ, இராணுவத் தேசாதிபதி ஏறக்குறைய முழு இலங்கையையுமே சோழ சாம்ராச்சியத்தின் ஒரு மண்டலமாக நிர்வகித்து வந்தான்.

அந்நிய ஆதிக்கத்தின் கீழ் சிங்களவர் எப்பொழுதும் கலகக்காரர்களாக விளங்கினர். ஆகையால் அடிக்கடி ஏற்பட்ட மக்களின் எழுச்சிகள் கொடூரமான முறையிலே அடக்கப்பட்டன. இலங்கையின் கிராமங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் தஞ்சாவூரிலேயுள்ள பெரிய கோவிலைப் பரிபாலிப்பதற்கு உதவியது. சோழத் தேசாதிபதியின் ஆணைக்குள்ளடங்காத பகுதிகளில் வாழ்ந்த சிங்கள மக்கள் நிலை இன்னும் அதிக துன்பகரமாக விருந்தது. அப்பகுதிகளில் முறையான தலைவர்களின்மையால், வெளியிலிருந்து வந்தவர்களும் அப்பகுதிகளில்

2—மு. கு.—பக்: 30—31+Colas I (பக்: 296—303) என்பதையும் பார்க்கவும்.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.________



திடீரெனத் தலைவர்களாகத் தோன்றியவர்களும், ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் தமது ஆணையை நிலைநாட்ட ஒருவரோடொருவர் போர்புரிந்து, இறுதியில் எல்லோரும் ஒருவர்பின் ஒருவராக சோழரோடு எதிர்ப்பட்டு அதிக துன்பத்துக் குள்ளானார்கள்.

அநுராதபுரத்தில் அரசாண்ட ராஜபரம்பரை அற்றுப்போய் விட்டமையால், பல தலைமுறைகளாக ரோஹனத்தில் வாழ்ந்து வந்த ஒரு கிளைப்பரம்பரைக்கு இலங்கையின் அரசுரிமை சென்றது இக்குடும்பத் தலைவன் ''மஹாஸாமி'' என்ற பட்டம் தரித்திருந்தான்.

இக்காலப் பகுதியில், சோழநாட்டிலே கைதியாக இறந்த 5-ம் மஹிந்தனுடைய பேரனான ''மொக்கலான'' ரோஹினத்தின் ''மஹாலோமி''யாக இருந்தான். இவன் 'தாடோப திஸ்ஸ' மன்னனின் பரம்பரையிலே 'லோகிதா' என்ற பெண்ணை விவாகம் செய்தான். இவர்களின் மூத்தமகன் 'கித்தி'. 'கித்தி' பதின்மூன்று வயதிலேயே விற்போரில் சிறந்த ஒரு வீரனாகத் திகழ்ந்தான். இவனே, ஒக்காக வம்சத்து மஹரஜ 'அபாஸல மேவனு'க்கும், சமகுலத்துதித்த 'தெவ்கொன்' என்ற அரசிக்கும் பிறந்த மகன் என்று அம்பகமுவாக் கல்வெட்டிற்[3] குறிப்பிடப்பட்டுள்ள விஜயபாகு. ஆனால் மஹரஜ அபாஸலமேவன், தெவ்கொன் ஆகிய பெயர்கள் நான்காம் மகிந்தனுடைய பெற்றோரின் பெயர்களாகும் தவறுபோல் தோன்றும் இப்பெயர் ஒற்றுமையை விளக்குவதற்கு கலாநிதி : விக்கிரம சிங்ஹ அவர்கள் பின்வரும் கருத்தினைத் தெரிவிக்கின்றார் :--

''இது ஒரு தவறாக இருக்கவேண்டும். அல்லாவிடில் இப்பெயர்கள் விருதுப் பெயர்களாக ராஜபரம்பரையில் யாருக்காவது கொடுக்கக்கூடியனவா யிருந்தபடியால், இங்கு இவர்களிற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று கொள்ளவேண்டும்.''

'' 'மூலஸாலா' என்ற கிராமத்தில் சிறுவனாக இருக்கும் காலத்திலேயே ''கித்தி'' இலங்கையை அந்நிய ஆட்சியினின்று மீட்க எண்ணங் கொண்டிருந்தான். இவ்வெண்ணத்தோடு இவன் 'புத்தராஜ' என்ற சேனாபதியுடன் சேர்ந்து கொண்டான். இப்புத்தராஜ 'கித்தி' என்றே பெயருள்ள அரசவையதிகாரி ஒருவருடன் சேர்ந்து, 5-ம் மஹிந்தன் காலந்திலேயே

3. E. Z. II No. 35.
4. மு. கு. பக் : 204.

''சோழப்படையை முற்முக அழிப்பேனெனத் தீர்மானித்திருந் தான்.[5] புத்தராஜ அக்காலந்தே ரோஹனத்தை ஆண்ட ''லோக'' அல்லது லோகேஸ்வர என்ற சேனுபதியோடு சண்டையிட்டுக் கொண்டு 'சுண்ணஸாலா' என்ற பகுதிக்கு ஓடிஞன். அவ்விடத்தே 'கித்தி' (விஜயபாகு) அவனைச் சேர்ந் தான். கித்தியை நற்காலம் எதிர்நோக்கியிருப்பதை ஒரு சோதி டன் கூறக்கேட்ட 'புத்தராஜ' கித்தியின் எண்ணங்கள் நிறை வேறுவதற்குத் தன்னுல் இயன்ற உதவிகளைச் செய்வதென்று தீர்மானித்தான். அதனுல் புத்தராஜ தூதனுப்பி யழைக்கக் கித்தி, இரகசியமாக வீட்டை விட்டு வெளியே ''சைரீவக்கபிட்டி'' என்ற கிராமத்துக்கு விரைந்து சென்முன். அங்கேயிருந்து, லோகேஸ்வர மன்னனின் ஆட்சியிலிருந்த 'போதிவால' என்ற கிராமத்தைத் தாக்கிக் கைப்பற்றிஞன். இக்கிராமத்தைத் திரும்பவும் பெற லோகேஸ்வரா எடுத்த முயற்சிகள் வெற்றி கரமாகத் தடுக்கப்பட்டன. தன் 'சுண்ண ஸால'வுக்குச் சென்று, அங்கிருந்த காலத்திலே மலயநாடு முழுவதையும் கித்தி தன தாணையின் கீழ்க் கொண்டுவந்தான்.'' இங்ஙனம், சூளவம்சத்தில் காணப்படும் பொதுப்பட்ட கூற்றினைத் திடீர் வெற்றியின் விளைவினைக் குறிப்பிடுவதாக விளங்கிக்கொள்ளலாகாது. ஆனுல் பின் விரிவாகக் கூறப்படும் பல ஆண்டுக்கால முயற்சிகளின் பொதுப்பட்ட விளைவுகளைச் சுருங்கக் கூறும் ஒரு முன்னுரை யாகவே கொள்ளவேண்டும். ஏனெனில் லோகேஸ்வர மன்னன் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளாது, திரும்பத் திரும்பத் தனது சேனையை அனுப்பிக்கொண்டே யிருந்தான். ஆனுல் தனக்கு வெற்றி கிட்டாமையால் அதிக ஆத்திரம் அடைந்தான். இஃது இவ்வாருக, கித்தி, தனது பதினைந்தாவது வயதில் (கி. பி. 1055) தனது ஆதரவாளர்களின் சம்மதத்தோடு, சிறப்பாக முற்கூறப்பட்ட அரசவையதிகாரியாகிய 'கித்தி' என்பவனின் மகனும், ரோஹணத்தில் வலிமைவாய்ந்த ஒரு தலைவனுமான 'தேவமல்ல' என்பவனின் சம்மதத்தோடு, 'வாள் தரித்து ஆதிபாதப் பதவியை கண்டிப்பாகக் கோரினுன்.'' பின் ஒரு ''பெரிய சேனையோடு,'' 'கித்தி' ஹிரஞ்ஞுமலயத்திற்குச் சென்று. அங்கே ரேமுண மலையில் படையுட னிருந்தான். லோகேஸ்வர அவனை அங்கிருந்து அகற்றுவதற்கு எடுத்த முயற்சி

5. C. V. 55 : 27. சூள வம்சத்திலிருந்து மேற்கோளாகக் குறிப்பிடப்படும் பகுதிகள் கைகருடைய ஆங்கில மொழி பெயர்ப்பிலுள்ள பகுதிகள். வேறு மொழிபெயர்ப்பெனின் அது குறிப்பிடப்படும்.

தோல்வியுற்றது. அதனுல் போரைக் கைவிட்டு, பலகாலம், செல்லுமுன் இறந்தான். இவன் ஆறு ஆண்டுகளாக ஆண்ட மன்னன்.

இதோடு கித்தியின் ஆரம்பத் தொல்லைகள் முடிவடையவில்லை. ரோஹணத்திலுள்ள 'கஸ்ஸப்ப' என்ற அரசன் இவனை எதிர்த்தான். இந்தக் கஸ்ஸப்ப "கேஸ தாது நாயக்கா" என்று வருணிக்கப் பட்டுள்ளான். இவ்விருது புத்தரின் மயிர்த்தாதினைப் பாதுகாக்கும் தொழிலை மேற்கொண்ட ஒரு பிரபுக்குலத்தோடு தொடர்புடையதென்றும் கைகர் (Geiger) கருதுவர். அல்லாவிடில் 'கேஸதாதுநாயக' என்பது கேஸதாதருடைய தலைவன் என்ற பொருளை மட்டும் கொள்ளாது, கேஸதாதுக் குலத்திலே ஓர் உயர்பதவியைக் குறிப்பதாகவும் இருக்கலாம். எனவும் கைகர் குறித்துள்ளார்.[6] இஃதெங்ஙனமாயினும் கஸ்ஸப, லோகேஸ்வர இறந்தபின்னர்தான் ரோஹணத்தில் அரசுக்கு வந்திருக்க வேண்டும். அக்காலத்திலேயிருந்த சோழத்தேசாதிபதி இவனை ஒரு முக்கிய பகைவனுகக் கருதி "புலத்தி நகரத்தினின்றும் புறப்பட்டு காஜரகமத்திற்கு*ப் படையெடுத்துச் சென்றனன். ஆனுல் கேஸதாது தமிழர் சேனையைத் துரத்தி 'றக்கபாசன' (இப்போதுள்ள றக்குவானை எனத் திரு விஜேசிங்ஹ கருதியுள்ளார். இதை கைகர் குறுப்பிட்டுள்ளார்.) என்ற எல்லையில் காவலாளரை நியமித்து, வெற்றிப் பெருமிதத்தோடு தனது சேனையோடு கதிர்காமம் சென்றடைந்தான்." இங்ஙனம் சோழர் சேனையோடு போரிட்டு வென்றமையால் செருக்கடைந்திருந்த உள்ளூர் அரசனை, ஆதிபாத, நாட்டை விடுவிக்கவும் ஒன்றுபடுத்தவும் கருதினுகில் அடக்கவேண்டும். ஆகையால் 'கித்தி' "பஞ்ச யோஜன" (பஸ்துன்—கோறளை) முதலிய பகுதிகளிலிருந்து, சேனைகளைத் திரட்டிப் போருக்கு ஆயத்தமானுன், முதலில் 'கஸ்ஸப' தைரியத்தோடு 'ஸிப்பத்தலக' (?) வரைக்கும் முன்னேறிச் சென்ருன். அவ்விடத்து மக்களது ஆதரவின்மையால் 'கதிரங்காணி' (?)க்குத் திரும்பிச் சென்ருன். இப்பொழுது பதினுறு வயதினனுன கித்தி யாதொரு எதிர்ப்புமின்றி கதிர்காமத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இதன்பின் சிறிது

---

6 = C. V. I P. XXX.

7 = C. V. I. P. 93. Note 4.

* = (தற்காலத்துக் கதிர்காமம். பழைய குத்தஸாலா[7] ஆகிய புத்தளைக்கும் மஹாகமத்திற்கும் இடையேயுள்ள பழைய பாதையில் உள்ள இடம்.)

காலத்தில், ரோஹணத்தை ஆறு மாதங்கள் ஆண்ட 'கஸ்ஸப' போர்க்களத்தில் தோல்வியுற்று இறந்தான். முடிவில் ரோஹணம் கித்தியின் கையில் அகப்பட்டது.

இவ்வாறு, ரோஹணத்தைப் பகைவரிடமிருந்து மீட்டுத் தனது அரசுரிமையை நிலைநாட்டியபின், 'கித்தி' தனது பதினேழாவது வயதில் ''விஜயபாகு'' என்ற பட்டத்தைத் தாங்கினன். இப்பட்டம் எங்கும் யாவராலும் அறியப்பெற்றது.'' இதற் கடுத்தபடியாக, தன்னைச் சூழப் பரிவாரங்களைச் சேகரித்துச் சதுரோபாயங்களினல் ''ராஜரட்டையைச் சூறையாடும் சோழர்களை வீழ்த்தியழிக்கும் முயற்சியில் ஈடுபட்டான். முதலிற் போதிய ஆயத்தமின்றிச் செயலில் ஈடுபட்டமையால் அவனது முதல் முயற்சி தோல்வியடைந்தது ரோஹணத்தைக் கைப்பற்றி எவ்வளவு காலத்திற்குப்பின் சோழரோடு போர் தொடங்கினன் என்பது எமக்குத் தெரியாமையால் அக்காலத்துச் சோழ மன்னன் இரண்டாம் இராஜேந்திரனே (1052-64) அல்லது வீரராஜேந்திரனே (1063-69) என்று நிச்சயிக்க முடியாது. இரண்டாம் ராஜேந்திரன் காலத்துக் கல்வெட்டுக்கள் இதைப்பற்றி அதிகம் ஒன்றும் குறிப்பிடவில்லை. 1067-ம் ஆண்டுக்கு முன் வீரராஜேந்திரன் கல்வெட்டுக்கள் இலங்கையில் நிகழ்ந்த போர் எதையும் குறிப்பிடவில்லை. ஆகவே முதன் முதலில் விஜயபாகுவிற்கும் சோழருக்குமிடையில் நிகழ்ந்த போர் 1066-ல் நடந்திருக்கவேண்டும்''[8] எனக் கொட்றிங்டன் கூறுவார். ஆனல் அது சிறிது முன்பாகவும் நிகழ்ந்திருக்கலாம். இக்காலப் பகுதிக்குரிய தென்னிந்தியச் சாசனச் செய்திகளையும் சூளவம்சத்திற் கூறப்பட்டுள்ள சிங்கள வரலாற்றையும் ஒப்பிட்டு அவற்றிடையே அமைதி காண்பதிலுள்ள கஷ்டத்தை யாவருமறிவர்[9] ஆனற் கவனத்தோடு செய்தால் அவ்வளவு கஷ்டமாகத் தோன்ருது.

ஆகையாற் சூளவம்சத்திற் சொல்லப்பட்ட செய்திகளோடு நாம் ஆரம்பிக்கலாம். விஜயபாகுவின் போர் முயற்சிகளைக் கேள்வியுற்ற சோழமன்னன் புலத்தி நகரத்திலிருந்த (பொலநறுவை) சேனபதியை ரோஹணத்தின் மீது படையெடுத்துச் செல்லும்படி கட்டளையிட்டான். அக்கட்டளையை மேற்கொண்டு சோழச் சேனபதி ரோஹணத்தின் தலைநகராகிய கதிர்காமத்தையணுகினன். சோழச் சைனியத்தின் பலத்தை யறிந்த விஜயபாகு மலையிலுள்ள காட்டுப் பிரதேசத்துக்குள் பின்வாங்கிச்

8. Short History of Coylon p. 56.
9. 9 C V I p. 192 Note 1.

சென்றுவிட்டான். சோழப்படை கதிர்காம நகருள் புகுந்து சூறையாடி "அங்கு தங்கமுடியாமையால் விரைந்து திரும்பிச் சென்றுவிட்டது". பின் விஜயபாகு திரும்பி வந்து ஸிப்பதலக்காவை முற்றுகையிட்டான் அத்துடன் ராமஞ்ச தேசத்தரச உதவியை நாடினன். இவ்விடத்தில் சூளவம்சத்திற் கூறப்பட்ட மொழிநடை ஓரளவு விசித்திரமானதாகையால் அப்படியே கூறப்படல் வேண்டும். "அரசன் (விஜயபாகு) ராமஞ்ச தேசத்தரசனுக்குப் பெருந்தொகையான மக்களேயும் விலேமதித்தற்கரிய திரவியத்தையும் அனுப்பினன். பின் கற்பூரம், சந்தனக்கட்டை முதலிய பல்வேறு பொருட்கள் நிரம்பிய கப்பல்கள் துறைமுகத்தை வந்தடைந்தன. பல்வகையான பரிசுகளினல் போர் வீரர்களேத் தன்வசப்படுத்திப் பெரியதொரு சேனேக்குத் தலேவனய் தம்பலகாம என்ற இடத்திற் றங்கியிருந்தான்." இக்காலத்தில் பர்மா (ராமஞ்ச) தேசத்தரசன் புகழ்படைத்த சுநோரத (அநுருத்த) ஆவன். ஆனல் இவ்வரசனுக்குத் தூரதேசப் போர்களில் ஈடுபட விருப்ப மில்லேப்போலும்; அதனல் இங்ஙனம் விஜயபாகு அனுப்பிய தூது, அவனது இராணுவ பலத்தை அதிகரிக்க உதவாது, வாணிபத் தொடர்பை வளர்க்க உதவியது.[10] சொந்த நாட்டிலும் விஜயபாகுவிற்கு எதிர்ப்பு இருந்தது; அதையும் சமாதானப்படுத்த வேண்டியவனுனன். இதுதான் அவன் சோழரோடு செய்த போரின் முதற்படி என எண்ணுகிறேன் அடுத்த முறையில் தன்னிலேயை வெற்றியோடு சமாளிக்கக்கூடிய அனுபவத்தையன்றி வேறென்றையும் இதனல் அவன் பெறவில்லே. இது தென்னிந்தியச் சாசனங்களிற் குறிப்பிடப்படவில்லே. சூளவம்சத்திற் கொடுக்கப்பட்டுள்ள வரலாற்றின் ஆரம்பத்திற் சோழ அரசன் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் விஜயபாகு உண்மையில் பொலநறுவையிற் றங்கியிருந்த சோழ இராணுவத் தேசாதிபதியுடனே போரிட்டான் என்று நாம் கருதலாம்,

---

10. சோழருக் கெதிரான போராட்டத்திற் குறிப்பிடத்தக்க ஆதரவை அநுருத்தாவிடமிருந்து விஜயபாகு பெற்ருன்' எனக் கலாநிதி பரணவிதான அவர்கள் கருதுகின்ருர்கள்.

Ep, Ind. XVIII p. 333 A. S. C. Report 1949 p. 31.

Contre Coedes Les Etats Hindonises d'Indochine p. 255.

பர்மிய வரலாற்றுக்குப் பெயர் (Phayre) அமைந்த காலவரையறையைப் பின்பற்றி கைகர் (C. V. P. 214 Note 4) இதுபற்றி ஒரு கஷ்டம் இருப்பதாக எண்ணினர்.

தன் முதல் தோல்வியினுற் சோர்வடையாது, தனது போர்த் தந்திரத்தை மாற்றி யமைத்து, இராஜரட்டையிற் சோழருக் கிருந்த எதிர்ப்பை ஆதரித்துச் சோழருக்குத் தொல்லைகொடுக்க முயன்ருன். "இராஜரட்டை வாசிகள் எல்லோரும் மற்றவர்க ளோடு பகைமை பாராட்டித் திறை செலுத்தாதுவிட்டனர். சோழ மன்னனின் எதிரிகள் செருக்கு மிக்கவர்களாய், சோழ மன்னனின் ஆணைகளைக் கவனியாது, நியமிக்கப்பட்ட அதிகாரி களைக் கொடுமைப்படுத்தித் தம் மனம்போன போக்கிலே நடந் தார்கள்" எனச் சூளவம்சம் கூறுகிறது. இந்நிலை சோழத் தேசாதிபதியால் அடக்கமுடியாத ஒரு கலகமாகும். ஆகவே இந்நிலை சோழப் பேரரசனுக்கு அறிவிக்கப்பட்டது. சூளவம்சம் பின்வருமாறு தொடர்ந்து கூறுகிறது. "இதைக் கேள்வியுற்ற சோழமன்னன் ஆத்திரமடைந்து ஒரு பெரிய சேனையை அனுப்பி வைத்தான். அச்சேனை மகாதித்த என்னுமிடத்தில் வந்திறங்கி அங்குமிங்குமாகச் சனங்களைக் கொன்று இராஜரட்டை மக்களை அடக்கிற்று இச்சேனைத் தலைவன் கரைபுரண்டோடும் வெள்ளம் போன்ற சேனையை நடத்திக்கொண்டு சென்று ரோஹணத்தை எதிர்த்தான். அங்கு ரவிதேவ, சல என்ற வீரர்கள் விஜயபாகு வோடு பகைமை கொண்டு, தமிழ்ச் சேனையின் தலைவனைச் சென் றடைந்தனர். இவ்விருவரும் பெருந்தொகையான பரிவாரங்களு டன் தன்னை வந்தடைந்ததை அறிந்த தமிழ்ச் சேனுபதி, ரோஹ ணம் விரைவில் தன்வசப்படும் என நம்பினுன்". இவ்விடத்தில் சூளவம்சம் கூறிக்கொண்டுவந்தவற்றைத் திடீரென நிறுத்திவிடு கின்றது. இதனுற் சோழ தேசாதிபதியின் நம்பிக்கை நிறை வேறவில்லை என்று கருத இடமுண்டு.

வீரராஜேந்திரனது கல்வெட்டொன்று (1067) சோழ மன்னன் ஒரு பெரிய சேனையை அனுப்பினுன். அச்சேனை பாலம் அமைக்காது பெருந்தொகையான கப்பல்களிற் கடலைக் கடந்து சிங்கள சேனையைத் தோற்கடித்து விஜயபாகுவைத் துரத்தி, அவனது அரசியைக் கைதியாகக் கொண்டு, இலங்கை முழுவ தையும் வீரராஜேந்திரனது ஆணைக்குள் கொணர்ந்தது" என்று கூறுகின்றது. இங்கே, மேல் சூளவம்ஸத்திலிருந்து கொடுக்கப் பட்ட பகுதி கூறும் செய்தியைத்தான் உயர்வு நவிற்சியாகக் கூறுவதுபோல் தோன்றுகின்றது. விஜயபாகுவுக்கு இந்த நேரத்திலேயே ஒரு மனைவி இருந்தாளோ என்றும், அப்படி இருந்திருந்தால் அவள் சோழரால் கைப்பற்றப் பட்டாளோ என்றும் தெரியாது. முந்திய போர்களில் சோழர் கள் உண்மையாக இலங்கை யரசகுடும்பப் பெண்களைக் கைப் பற்றிய செய்தியை ஆதாரமாகக்கொண்டு, மேற்படி கூறுதல்

சோழரின் பெருமையைத் தம்பட்டமடிக்கும் ஒரு வழக்காறு எனக் கொள்ளலாம். இங்ஙனமே வீரராஜேந்திரன் இலங்கை முழுவதையும் அரசாண்டான்[11] என்று கூறுதலும் தவறு. சிறிது காலத்துக்கு அவனுடைய ஆணை இராஜரட்டையில் திரும்பவும் நிலைநாட்டப்பட்டு விட்டதென்றுதான் நாம் கருதலாம். விஜய பாகுவின் சேனுதிபதிகள் அவனைத் துறந்து சோழபக்கத்தைச் சார்ந்ததைச் சோழச் சாசனம் கூறவில்லை. இது இராஜரட்டை யில் சோழப் பிரசைகளை சோழ அரசாங்கத்திற்கு எதிராகத் தூண்டிவிட்டுச் சோழர்களுக்கு விஜயபாகு தொல்லை கொடுத் ததற்குப். பழிக்குப்பழி வாங்கும் நோக்கத்தோடு சோழர் செய்த சூழ்ச்சியின் பயனுகலாம். இப்போரில் இந்தக் கட்டத் தைப் பற்றிப் பரணவிதான அவர்கள் கூறுவது மிகப் பொருந் தும். அக்கூற்று வருமாறு : "தன் துணிவும் மனோதிடமுமின்றி வேறொரு உதவியுமில்லாமல் ஒரு பெரிய சாம்ராச்சியத்தின் இராணுவ பலத்தை விஜயபாகு எதிர்க்கவேண்டி யிருந்ததோ டல்லாமல், பல முறைகளில் அவனுக்கு வெற்றி கிட்டுவது போற்றோன்றும் சந்தர்ப்பங்களில் அவனது ஆதரவாளர்களே அவனைக் கைவிட்டுப்போக பின் திரும்பவும் எல்லாவற்றையும் முதலிலிருந்து தொடங்க வேண்டியவனுனன்."[12]

பலவகை ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்ட போதிலும் இப் போரின் இறுதிக் கட்டம் முடிவில் அவனுக்கு வெற்றியைக் கொடுத்தது. இக்கட்டம் ரோஹணத்தில் அவனது பன்னிரண் டாவது ஆட்சியாண்டில் (1070) தொடங்கிற்று அவனது 33 ஆவது வயதில் அநுரதபுரத்தில் அவன் பிரவேசித்ததோடு முடிவடைவதாகக் கொள்வதனுல், இக்கட்டம், மூன்று வருடங் கள் நீடித்தது. இப்பொழுது பலுட்ட எள்ள மலையிலுள்ள அரணிலிருந்து விஜயபாகு போரை ஆரம்பித்தான். இப்பலுட்ட மலை ரோஹணத்திற்கு மேற்கே தக்ஷிணதேசத்தின் எல்லையில் உள்ளது என்று கைகர் (Geiger) கூறுவர்.[13] சோழர்கள் இவ் வரணை முற்றுகையிட்டு ஒரு பெரிய போர் தொடர்ந்து நடந்தது. இறுதியில் தம்பவிட்டி (இப்பொழுது தக்ஷிணதேசத்து வடக்கே

11. Colas I. p. 332.

12 A.S.C. Report p. 31. சிங்கள அரசியைச் சோழர் கைப் பற்றியது உண்மையென ஈண்டும் பரணவிதான அவர்கள் ஏற்றுக்கொள்ளுகின்றுர்.

13. இது திஸ்ஸமஹாராமவிற்கு எட்டு மைல் கிழக்கேயுள்ள பலதுபன என்று ஹோக்காட் கருதுவர். C.V. பக். 203, குறிப்பு 2.

கேகாலை மாவட்டத்திலுள்ள தம்பவித என்ற இடமாயிருக்க வேண்டும்.[14]) என்ற கிராமத்தில் சோழச் சேனாதிபதியின் தலை துண்டிக்கப்பட்டமையால் தமிழ்ச்சேனை முற்றுகையை விட்டுப் புறங்காட்டி ஓடியது. வெற்றியடைந்த சேனை, சோழ சேனாதி பதியின் தலையைக் கொண்டு சென்று தம்மரசனுக்குக் காண் பித்து, புலத்தி நகரத்துக்குப் படையெடுத்துச் செல்ல அவன் அனுமதி பெற்று, இறுதியில் தமிழரிடமிருந்து எதிர்ப்பின்றி அந்நகரைக் கைப்பற்றிக் கொண்டது. இக்காலத்தே சோழ மன்னனாகிய முதலாம் குலோத்துங்கன் அவர்களைத் தண்டிப் பதற்கும், தன்னாணையைத் திரும்பவும் நிலைநாட்டவும் ஒரு பெரிய சேனையை அனுப்பினான். ''அநுரதபுரத்துக் கருகாமையில் கடும் போர் நடந்தது; பல சிங்களவர்கள் மடிந்தார்கள்.'' விஜய பாகுவின் இராச்சியத்திலுள்ளவர்களிற் பலர் தமிழர்களின் ஆணைக்குள்ளடங்கினர். விஜயபாகு புலத்தி நகரைவிட்டு கேகாலை மாவட்டத்தில் தென்மேற்கில் வக்கிரிகல எனப்படும் வாதகிரி என்னுமிடத்தில் அமைத்த அரணுக்குப் பின்வாங்கிச் சென்றான்.[15] அங்கிருந்து அவன் மூன்றுமாத காலம் தமிழர் முன்னேறாவண்ணம் போர் செய்தான்.

ஆனால் விஜயபாகுவுக்கு மேலும் உள்நாட்டுக் குழப்பங்களை எதிர்க்கவேண்டிய நிலை ஏற்பட்டது. தன் முயற்சியின் ஆரம் பத்தில் விஜயபாகு கொன்ற கேசதாதுவின் சகோதரன் தன் னைச் சூழக் கூட்டாளிகளைச் சேர்த்துக்கொண்டு குத்தசால (புத் தள) என்ற மாவட்ட முழுவதும் ஒரு புரட்சியை உண்டாக்கி னான். ''விஜயபாகு அங்கு விரைவாகப் படையெடுத்துச்சென்று மச்சுத்தல என்னுமிடத்தில் ஒரு பாசறையமைத்துத் தன் பகை வனை கதிரஸ்கனி என்னுமிடத்திலிருந்து துரத்திச்சென்று, குபூல கல்ல என்னுமிடத்திலிருந்து சோழமாகாணத்துக்கு, தன் மனைவி பிள்ளை, சேனை உட்படத் தன் உடமைகளை விட்டு ஓடும்வரை போர் செய்தான். விஜயபாகு தன் பகைவனின் பகுதியைக் கைப்பற்றி, தக்ஷிண தேசத்தெல்லையில் ரோஹணத்திற்கு மேற்கே காலி மாவட்டத்தில் தம்பலகாம என்னும் இடத்தில் புதிய அரணொன்றை நிர்மாணித்தான்.[16] இங்ஙனம் சோழரோடு தொடுக்கும் போர்களுக்கு ஆரம்பநிலையாக விளங்கும் இவ்விடத் தைப் பலப்படுத்திக்கொண்டு வளவகங்கையின் கீழ்ப்பகுதியி லுள்ள மகாநாககுலத்திற்குச் சென்று அங்கே தங்கியிருந்து படை

14. C.V. பக். 203. குறிப்பு 3.
15. மு. கு. பக். 204, குறிப்பு 2.

களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தான். பின் தன்னிரு கையாட்களை தக்ஷிண தேசத்துக்கூடாகச் சோழச் சேனைகளைத் துரத்திக்கொண்டு அனுராதபுரம் வரைக்குஞ் சென்று நாட்டைக் கைப்பற்றுமாறு பணித்தான்.

இங்ஙனம் அவன் அனுப்பிய சேனை அநுராதபுரத்தைக் கைப்பற்றி மாந்தைக்குச் செல்லுமுன் முகற்றறு Budalathala, Hapinagama. Buddhagara, Tilagulla, Nahagulla, Nandagalla முதலிய இடங்களைக் கைப்பற்றியது. அதே நேரத்தில் வேறொரு சேனை மலைநாட்டை தவிர்த்துக் கரையோரமாகச் சென்றது. இச்சேனையும் வெற்றியடைந்தது. கிழக்கு ரோஹணத்திலுள்ள Chagamaவைச் சூறையாடி மற்றைய பாசறைகளையும் கொள்ளையடித்து, புலத்தி நகருக்கருகில் சென்று, விஜயபாகுவை உடன் அவ்விடம் வரும்படி செய்தியனுப்பியது. எஞ்சிய சேனையுடன் விஜயபாகு மகாநாககுலாவை விட்டுப் புறப்பட்டு, மகியங்கனை தூபத்துக் கண்மையில் மகாவலிகங்கையி லுள்ள பாசறையில் தங்கிப் பின்னும் புறப்பட்டுப் புலத்தி நகருக்குச் சென்று இறுதிப் போருக்கு ஆயத்தமானான். "ஆனல் அங்குமிங்கும் காணப்பட்ட மறத்தன்மையுடைய சோழர் புலத்தி நகரில் கூடிப் போருக்கு ஆயத்தமானார்கள். சோழர் நகரிலிருந்து புறப்பட்டு வெளியே வந்து கடும்போர் புரிந்தனர். ஆனல் அவர்கள் தோற்கடிக்கப்பட்டு நகருக்கு திரும்பினர். பின் சிங்களச்சேனை ஒன்றரை மாதகாலமாக நகரை முற்றுகை யிட்டு இறுதியில் அந்நகரின் மதிலை யுடைத்துத் தமிழரை வேரோடழித்தனர்." விஜயபாகு வெற்றியுடன் நகருட் புகுந் தான். சோழமன்னன் தன் சேனையின் அழிவைக் கேள்வியுற்றுச் சிங்களவர் வலிமைபடைத்தவரெனக் கருதி வேறொரு சேனையை யும் அனுப்பவில்லை. இந்நிகழ்ச்சிக்குப் பின் ரோகணத்திலாரம் பித்த தன் 15-வது ஆட்சியாண்டில் விஜயபாகு ஆவலோடு எதிர்பார்த்திருந்த சிறந்த நகராகிய அநுராதபுரத்துக்குப் படையெடுத்துச் சென்றான்.

விஜயபாகுவுக்கு வெற்றியீட்டிய இப்போர் நிகழ்ந்த காலப் பகுதியை (1070--73) ஆராய்ந்து நோக்கும்போது 1-ம் குலோத் துங்கன் பட்டத்திற்கு வந்தவுடன் அவனுக்கிருந்த தொல்லை களே சோழர் இலங்கையை யிழத்தற்கு முக்கிய காரணமாகும் என்பது தெள்ளிதிற் புலனாகும். இங்ஙனம் கூறுவதனுல் விஜயபாகுவின் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும் வல் லமையோ அல்லது அவனது குறிக்கோளின் உயர்ச்சியையோ அல்லது அக்குறிக்கோளையோ அடைவதற்கு அவன் எடுத்த

விடா முயற்சியை மதிப்பிற் குறைப்பதற்கில்லை. அவனது அம்பகமுவ கல்வெட்டு பின்வருமாறு அவனருஞ் செயல்களைத் தொகுத்துக் கூறுகின்றது. "தன் சுயவீரத்தினுல் தமிழ்ப்படைகளாகிய இருளை அறவே அகற்றி இலங்கை முழுவதையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டு வந்தான்."

விஜயபாகு தன் வெற்றிக்குப்பின் புலத்தி நகருக்குத் திரும்பு முன் மூன்று மாதங்களை புண்ணிய தலங்களைத் தரிசித்துக் கொண்டும் எதிர்வரும் முடிசூட்டுதலுக்கு ஆயத்தம் செய்து கொண்டும் அநுராதபுரத்திலேயே கழித்தான். சோழரைப் பின்பற்றி இவனும் புலத்தி நகரையே இராசதானியாகக் கொண்டிருந்தான். அங்கே ஆதிமலையன் என்னும் புரட்சித் தலைவனை யடக்கி பட்டாபிஷேகத்திற்கு அநுராதபுரம் மீண்டான். இவ்விடத்தில் இவ்விதிகாச ஆசிரியர் விஜயபாகு யுவராஜனுக பதினேழு வருடம் செலுத்திய ஆட்சியின் வரலாற்றை இதிகாசத்திலெழுதிவித்தானென்றும் பின்னர் பதினெட்டாவது வருடத்தின், அதாவது பட்டாபிஷேகம் செய்த வருடத்தின் வரலாற்றை அத்துடன் சேர்ப்பித்துக் கொண்டான் என்றும் கூறுவர். கைகர் (Geiger) பின்வருமாறு குறிப்பிடுகின்ருர். "இப்பகுதி முக்கியமானது; ஏனெனில், ஒவ்வொரு வருட ஆட்சியிலுமுள்ள நிகழ்ச்சிகளை அரசவையிலே குறித்து வைத்திருந்தார்கள் என்பதைக் குறிக்கின்றது. விஜயபாகுவின் ஆட்சியின் வரலாறு சிறப்பாக ஒரு வரலாற்று நூலின் இயல்பைப் பெற்றிருக்கின்றது." இக்காலப் பகுதியில் சோழரின் மெய்க்கீர்த்தி (Prasasti) செய்யுள் வடிவிலே காலத்திற்குக் காலம் புதுப்பிக்கப் பெற்ற ஒரு இதிகாசம் போன்றது என்பதை யாவரும் அறிவர். பட்டாபிஷேகத்தின் பின்னரசன் புலத்தி நகரில் தங்கியிருந்தான். ஸ்ரீ சங்கபோதி என்ற பெயரால் அறியப் பெற்ருன். இவனும் மற்றைய இலங்கை மன்னர்களைப் போன்று இக்ஷவாகு வம்சத்திலுதித்தவன் என்று கருதப்பட்டான். இவனதாட்சியின் முடிவில் பொலநறுவையில் தமிழ்க் கல்வெட்டொன்று அவனைப் பின்வருமாறு வர்ணிக்கின்றது. இவ்வளம் பொருந்திய இலங்கைத் தீவின் சக்கரவர்த்தியும் சூரியவம்சத்து இக்ஷவாகுவின் சந்ததியின்னும் ஆகிய மன்னன் ஸ்ரீ சங்கபோதிவர்மன் அல்லது ஸ்ரீ விஜயபாகுதேவர், பல பகைவரை தோற்கடித்து அநுராதபுரத்துட் பிரவேசித்து புத்த சங்கத்தின ஆதரவோடு புத்தமதத்தைப் பாதுகாப்பதற்காக முடி தரித்தான்." தன் தம்பியாகிய வீரபாகுவை யுவராஜனுக நியமித்து தக்கிணதேசத் தாட்சிப் பொறுப்பை அவனிடம் கொடுத்தான். இவனுக்கும் இளைய சகோதரனுகிய ஜயபாகு ரோஹண மாகாணத்தின் ஆதிபாதப் பதவியை ஏற்ருன்.

இன்னெரு முறை புரட்சிக்காரர் தொல்லை கொடுத்தனர். சட்டகாககராத, (குடை தாங்குபவரின் தலைவன்) தம்மகேகய நாயக்க (நீதியவைத் தலைவர்) செட்டிநாத (வாணிபர் தலைவர்) என்ற பட்டங்களைத் தாங்கிய மூன்று சகோதரர் அரசனேடு பகைமை பூண்டு ஜம்புத்தீபத்திற்கு ஓடினர்கள். பின் பத்தொன்பதாவது ஆண்டில் திரும்பி வந்து இலங்கையை அடைந்து ரோஹணத்திலும், மலையநாட்டிலும் தக்கிணத்தேசம் முழுவதிலும் ஒரு எழுச்சியை யுண்டாக்கினர்கள். முதலில் ரோஹணத்திலும் மலையநாட்டிலும் உண்டான கலகத்தை அரசன் அடக்கிப் பின்னர் பெருமுயற்சியினுல் தக்கிணதேசத்துக் கலகத்தை யடக்கினன். பல கலகக்காரர்கள் கழுவேற்றப்பட்டனர்.

இந்நேரத்தில் முன்னிலங்கையை யாண்ட ஜகதிபால என்ற அரசனின் அரசி சோழரின் கைதியாக தென்னிந்தியாவில் சோழ சிறைச்சாலையில் இருந்து தப்பி, தன் மகளாகிய லீலாவதியை யழைத்துக்கொண்டு இலங்கை வந்து சேர்ந்தாள். இலங்கை மன்னன் அவள் ஒரு மாசற்ற இராசகுடும்பப் பெண் என்பதையறிந்து தனது மகஷி (அரசி) யாக லீலாவதியை அபிஷேகம் செய்வித்தான். ''இவர்களுக்குப் பிறந்த பெண் யசோதரா. இவள் வீரவர்மன் என்பவனை மணந்தாள். தன்னரசுரிமையைப் பெறுவதற்கு ஒரு மகனை விரும்பியரசன் கலிங்க அரசகுடும்பத்திலுள்ள திரிலோக சுந்தரி என்ற பெண்ணை மணந்தான். இவளுக்கு ஐந்து பெண்மக்களுடன் விக்கமபாகு என்ற ஒரு ஆண்மகவும் பிறந்தது. இவர்களின் விவாகங்களையும் பெற்ற பிள்ளைகளையும் பற்றிய செய்திகளை விரிவாகச் சூளவம்சம் கூறுகிறது. அவை இங்கே தேவையில்லை. விஜயபாகுவின் சகோதரி மித்தா என்பவள் ஒரு பாண்டிய அரசகுமாரனுக்கு மணம் செய்து கொடுக்கப்பட்டாள். இவர்களின் மகனுகிய மாருபரணன் விஜயபாகுவுக்கும் திரிலோகசுந்தரிக்கும் பிறந்த ரத்னுவளி என்னும் பெண்ணை மணந்தான். இவ்விருவருக்கும் பிறந்தவனே புகழ்படைத்த முதலாம் பராக்கிரமபாகு ஆவான். ரத்னுவளிக்கு மகனுக ஓர் பேரரசன் பிறப்பான் என்று விஜயபாகு குறிசொன்னதாகக் கூறப்பட்டுள்ளது. விஜயபாகுவின் மகன் இரண்டாம் விக்கிரமபாகு திரிலோகசுந்தரிக்கினமான சுந்தரி என்ற அரசகுமாரியையும் விஜயபாகுவுக்கும் அவன் இராணி லீலாவதிக்கும் மணஞ்செய்ததை நாம் கவனிக்க வேண்டும்.

1088-ம் ஆண்டில் ஒரு இராணுவக் கலகத்தையடக்க உதவியபின்னர் யுவராஜனுகிய வீரபாகு இறந்தான். புத்த பிக்குகளின் யோசனைப்படி ஜயபாகு அப்பதவியை ஏற்ருன். விக்

கிரமபாகு ஆதபாத பதவியை ஏற்ருன். இவன் கஜபாகு என்ற மகனைப் பெற்றபொழுது ''அரசன் தன் அமைச்சருடன் கலந்தாலோசித்து தன் மகனின் நலனைக் கருதி ரோஹணம் முழுவதையும் அவனுக்கு வாசஸ்தலமாகக் கொடுத்தான். விக்கிரமபாகு அங்கு சென்று மகாநாகசுல என்ற நகரைத் தலைநகராக்கி வாழ்ந்துகொண்டிருந்தான்.

சூளவம்ச ஆசிரியர் ''விஜயபாகு 55 வருடகாலமாக புத்த சங்கத்துக்கும் கொடிய தமிழர்களால் துன்புற்றிருந்த மக்களுக்கும் சேவை செய்து தனது ஆஞ்ஞா சக்கரத்தை வழுவின்றிச் செலுத்திப் பின் சுவர்க்கமடைந்தான் எனக் கூறுவர். பொலநறுவைத் தமிழ்ச் சாசனங்கள் இவன் 55 வருடங்கள் ஆட்சி புரிந்தானென்றும் 75 பிறந்த நாட்களைக் கொண்டாடினுன் என்றும் கூறுவதால் மேற்கூற்றை நிரூபிக்கின்றன. இவ்வளவு நீண்டகால அரசாட்சிக்கு கிடைக்கும் சான்றுகள் குறைவு, சாசனச் சான்றுகள் மிகக் குறைவு. இவ்வாட்சியின் வரலாற்றைப் பற்றி யதிக செய்திகள் சூளவம்சத்திலிருந்தும் கிடைக்கவில்லை. தன்நாட்டுச் சமயத்திற்கு அவனுல் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள், நீர்ப்பாசன வசதிகள், அவனது கல்வியறிவு, அவன் கல்விக்கு கொடுத்த ஆதரவு முதலியவற்றைப் பற்றி பொதுவாக நாம் அறிகின்ருேம். இப்பொழுது இச்செய்திகளை அவனது ஆட்சிக்காலச் சாசனங்களிலும் சூளவம்சத்திலும் கூறியுள்ளபடி சுருக்கமாக ஆராய்தல் வேண்டும்.

முதலாவதாகத் திருகோணமலைக்கு வடமேற்கே எட்டு மைல் தூரத்தேயுள்ள நடராஜர் கோயில் என்ற தமிழ்ச் சோழர் கோயிலில் காணப்பட்ட சிங்களச் சாசனங்கள் இரண்டைக் கவனிப்போம். இக்கோயில் இராஜராஜப் பெரும்பள்ளி எனப் பெயர் பெற்றது. சோழராட்சிக் காலத்தில் பொறிக்கப்பட்ட தமிழ்ச் சாசனங்களை அக்கோயிற் சுவர்களில் காணலாம். விஜயபாகு தனதாட்சியை நிறுவிய பின்னர் இச்சாசனங்கள் சிங்களத்திலிருத்தலைக் காணலாம். இவற்றில் முதலாவது சாசனத்தில் அரசனது பெயர் தெளிவாயிருந்தாலும் முற்றும் தெளிவாயில்லை. அடுத்த சாசனம் அழகிய ராஜா என்ற ஃசெட்டிவெலகம் என்ற இடத்திலுள்ள புத்தகோயிலுக்கு, கொடுத்த நன்கொடையை கூறுகின்றது. இச்சாசனத்திஞல் வெலகம் விகாரை எவ்விடத்திலிருந்தது என்பது அறியக்கூடியதா யிருக்கின்றது. தொப்பவீவா என்னுமிடத்தில் எடுக்கப்பட்ட ஒரு செப்பு நாணயம் விஜயபாகுவின் கதையைக் கூறுவதால், அதை இவன் காலத்தது எனக் கூறலாம். விஜயபாகு தனது பட்டாபிஷேகத்தைப்

பழைய தலைநகராகிய அநுராதபுரத்தில் நடத்தினாலும், 'சோழரைப் பின்பற்றி பொலநறுவையையே தன் இராசதானியாகக் கொண்டான். இது அரசியல் நிர்வாகத்தை மத்தியமயமாக்கும் முயற்சியின் ஆரம்பம் என்றும் இம்முயற்சியில் இறுதிநிலையை முதலாம் பராக்கிரமபாகுவின் காலத்திற் காணலாம் என்றும் கொட்றிங்ரன் கூறும் கூற்றை கலாநிதி பரணவிதானவும் ஆமோதிக்கின்றார்.

ஆனால் இவ்விராசதானியில் இவன் காலத்தில் புத்த தந்தத்திற்கு ஒரு கோயில் கட்டப்பெற்றாலும், முதலாம் பராக்கிரம பாகுவின் காலத்திற்கு முன்பு சிற்ப வேலைப்பாடமைந்த கட்டடங்கள் ஒன்றும் காணமுடியாது. இப்படியான இக்காலப் புதை பொருளாராய்ச்சியின் உத்தேசம் சூளவம்சத்திற் கூறப்பட்டுள்ள விஜயபாகுவின் வரலாற்றோடு சிறிது முரண்படுகின்றது. புலத்தி நகரிலே பல கொத்தளங்களோடு கூடியதும் நற்சாந்து பூசப் பெற்றதுமான ஒரு பெரிய மதிலைக் கட்டுவித்தான் என்றும், அம் மதிலைச் சூழ்ந்து ஒரு அகழியும், பகைவரால் அழிக்கமுடியாத சுவர்களும் கட்டுவித்தான் என்றும் சூளவம்சத்திற் கூறப்பட்டுள்ளது. புத்தகுருமாரின் உபயோகத்திற்குத் தலைநகரிலே பல சமயப்பள்ளிகளையும் கட்டுவித்தான் என்றும் கூறப்பட்டுள்ளது.

இவனுடைய 27ஆம் வருடத்திற்குரியது (1085) ஒரு முக்கிய சாசனம். இதுதான் பனகடுல செப்பேடு இரு மலைத் தொடர்களுக்கும் இடையேயுள்ள ஒரு கிராமத்திலிது எடுக்கப் பட்டது என்று பரணவிதான கருதுவர். இம்மலைத்தொடர்களில் ஒன்றுதான் விஜயபாகு பதினைந்தாவது வயதில் பாசறை வைத்த இடமென்று சூளவம்சத்திற் குறிக்கப்பெற்ற ரனமலகந்த ஆகும். அந்நேரத்தில் விஜயபாகு புத்தராஜ என்ற தலைவனின் பாதுகாப்பிலிருந்தான். இச்செப்பேடு விஜயபாகுவின் முயற்சியின் ஆரம்ப வரலாற்றையும் புத்தராஜனுடைய சேவையை நினைவுகூர்ந்து அவனுக்கு அரசன் கொடுத்த சன்மானத்தையும் அரசன் கூற்றாகவே கூறுகின்றது. இதில் அரசன் பின்வருமாறு கூறுகின்றான் "சோழத் தமிழர்களிடம் நாம் எம்மிராச்சியத்தை இழந்து மலைக்காடுகளில் ஒளித்துக்கொண்டிருக்கிற காலத்தில் ரோஹணத்தில் பாதுகாவலனாகிய சிற்றுபிம் தலைவன் Budal (Lord Budal of Sitarubim) தன் பரிவாரங்களி னுதவியால் எமது தந்தையாகிய மகாராச முகலன் உட்பட அரச குடும்பம் முழுவதையும் பாதுகாத்தான். எங்களைச் சிறுவயது தொடங்கியே வளர்த்துவந்தான். காட்டிலேயிருந்து பெற்ற கிழங்குகளினாலும் பச்சை மூலிகைகளினாலும் எம்மைத் தேடிக்கொண்டிருந்த

பகைவரிடமிருந்து காப்பாற்றினுன். இங்குமங்குமாக போர்களில் ஈடுபட்டு ரோஹணத்தை திரும்பவும் எங்களுக்கு கீழ்ப்படுத்தி, எங்களை மலைக்காடுகளிலிருந்து கொண்டுவந்து எம்மிராச்சியத்தில் நிலைநிறுத்தினுன்.'' இங்ஙனம் ஒரு அரசன் தன்னுதிக்கத்தின் உச்ச நிலையிலிருந்துகொண்டு தனதுதாழ்மையான ஆரம்ப நிலையை நினைவுகூர்தலும் பல வருடங்களுக்கு முன் செய்த சேவையை நன்றியுணர்வோடு நினைவுகூர்ந்து சன்மானமளித்தலும் சரித்திரத்திலே அரிய நிகழ்ச்சி. ''தலைவன் (Lord Budal) புதலின் குடும்பத்திற்குக் கொடுக்கப்பட்ட உரிமைகள் வருமாறு ''அவன் சந்ததியினர் யாரையாவது அபராதமிட்டு மறியலில் வைத்து அல்லது நிலமபகரித்துத் தண்டிக்க முடியாது. அவர்கள் கொலைக் குற்றம் செய்தாலும் மும்முறை மன்னிக்கப்படவேண்டும்.''

சுந்தர மகாதேவியின் டிம்புலாகவ மாராவீதய கல்வெட்டு முதலாம் விஜயபாகுவின் இருபத்தேழாவது ஆட்சியாண்டைக் குறிப்பிடுவது என்று இப்போது கருதப்படுவதில்லை. ஆனுல் அது அவனுக்குப் பின்னுண்ட முதலாம் ஜயபாகுவின் இருபத்தேழாம் ஆட்சியாண்டைக் குறிக்கின்றது. புத்த தந்த மாளிகையின் வரலாற்றைக் கூறும்போது முதலாம் விஜயபாகுவைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுச் செல்லும் பொலநறுவைத் தமிழ்ச் சிலாசனம் இவன் காலத்தது என்று கொள்ளக்கூடாது. ஆனுல் இது விக்கிரமசிங்கி கூறுவதுபோல் விஜயபாகுவின் காலத்திற்குப் பின்னர் 1137--1153 ஆண்டுகளுக் கிடையில் வேலைக்காரரின் வரலாருகும். விஜயபாகுவின் ஆட்சியில் அரசாங்கத்தின் சமயக்கொள்கை இராஜதந்திரம் ஆகியவற்ருேடு இச்சாசனம் தொடர்புடையது.

முதலாவது நாம் அரசியல் அம்சத்தை எடுத்து இவ்வாட்சியில் அரசியல் விருத்தாந்தத்தின் வரலாற்றைப் பூர்த்தி செய்வோம். விஜயபாகுவின் 13-வது ஆட்சியாண்டில் (1088) வேலைக்காரர் ஒரு கலகத்தை யுண்டாக்கினர் என்று சூளவம்சம் கூறுகின்றது. விஜயபாகுவுக்கும் சோழருக்கு மிடையேயிருந்த முடிவில்லாத பகையோடு இக்கலகம் தொடர்புள்ளது. கல்யாணியின் சாளுக்கிய அரசனுகிய ஆருவது விக்கிரமாதித்தியனும் சோழ மன்னனுகிய முதலாம் குலோத்துங்கனும் விஜயபாகு பொலநறுவையில் தன்னுட்சியை நிறுவியபின்னர் அவனவைக்கு தூதுவராக அனுப்பினர். இருபக்கத் தூதுவரையும் சிங்கள அரசன் தக்க மரியாதையுடன் வரவேற்று கர்நாடகத்திற்கு தன் தூதுவரோடு தக்க வெகுமதி கொடுத்து அனுப்பினுன். ஆனுல் கர்நாடகத்திற்குச் செல்லும் வழியிலே தம் நாட்டை

யடைந்த சிங்களத் தூதுவர்களின் மூக்குகளையும் காதுகளையும் சோழர் ஊறு செய்தனர். இங்ஙனம் அங்கவீனமடைந்த தூதுவர் வந்து சோழ அரசனால் நிகழ்ந்தவற்றைத் தம் மரச னிடம் கூறினர். இதைக் கேட்டு ஆத்திரமடைந்த விஜயபாகு தன் னவை யதிகாரிகள் முன்னே தமிழ்த் தூதுவரை அழைத்துப் பின்வருமாறு சோழ மன்னனுக்கு செய்தி விடுத்தான். ''கூப்பிடு தூரத்திற்கப்பால் கடலின் மத்தியிலேயுள்ள தீவிலே தனிப் போரில் எமது படைப்பலப் பரீட்சை நடக்கட்டும். அல்லாவிட் டால் உனது இராச்சியப் படைகளும் என்னிராச்சியப் படை களும் ஆயத்தமாகி நீ நியமித்த ஓரிடத்தில் இரு படைகளுக்கும் போர் நடக்கட்டும். நான் கூறிய இவ்விதமே நீவிர் உமது தலைவனுக்கு எடுத்துக் கூறுங்கள்.'' இங்ஙனம் கூறி அவர்களைப் பெண்களின் உடையில் விரைவாகச் சோழ அரசனிடம் அனுப்பி விட்டுத் தன் சேனையுடன் அநுராதபுரத்திற்குச் சென்றான். மத்திகாவாடதித்த (Mattikavatatittha) மகாதித்த ஆகிய துறைமுகங்களிலிருந்து சோழராச்சியத்திற்கு சென்று போரை ஆரம்பிப்பதற்கு இரு படைத்தலைவர்களை யனுப்பினான். இப் படைத்தலைவர்கள் சோழ ராச்சியத்திற்கு அனுப்புவதற்குக் கப்பல்களையும் மற்றும் பொருள்களையும் வாங்கி ஆயத்தம் செய்துகொண்டிருக்கும்போது, அதாவது அவனது ஆட்சியாண் டின் 13-வது வருடத்தில் வேலைக்காரர் என்ற படையனுப்பினர். அங்கே செல்ல விருப்பமின்மையால் கலகம் விளைவித்தனர்.

இக்கலகத்தின் வரலாற்றை தொடருமுன் இது ஏற்பட வேண்டிய சந்தர்ப்பத்தையும் இதனியல்பினையும் பற்றி சிந்திப் போம். இந்த வேலைக்காரர் யார்? இச் சொல்லின் சரியான பொருள் என்ன? இவர்கள் ஒரு வலிமைமிக்க சமூகத்தினர் (Paranantana EI XVIII p. 333) என்றும் வல்லமை படைத் தவரும் சமுதாயத்திலே உயர்நிலையில் வைக்கப்பட்டவருமான கட்சியினர் என்றும் (Wickramasinghe EZII p.250) கூறப் பட்டுள்ளனர்.

இக்கட்டுரையி னிறுதியிலே காணப்படும் குறிப்புரையில் இவ்வேலைக்காரரைப்பற்றி மேற்கூறப்பட்ட செய்தி தவறான தாகும் என்பது புலப்படும். வேலைக்காரர் என்பது உயிர்விடு கிற சமயத்திலும் அரசனுக்குக் கீழ்ப்படிந்தவர்களாகச் சபதம் செய்த ஒருவகைப் படையுறுப்பினருக்குப் பொதுவான பெயர். அவர் ஒரு தனிப்பட்ட சமூகத்தினரோ அல்லது படை யினரோ அல்லது ஒரு தனிப்பட்ட படையினரோ அல்லது நாட் டினரோ அல்லர். முதலியார் இராசநாயகம் செந்

தமிழில் T. A. G. ராவ் என்பவர் எழுதிய கட்டுரையைப் படித்து ஓரளவு உண்மை நிலையை அறிந்தாலும் அவர் முற்றாக அறிய வில்லை. அவர் வேலைக்காரர் என்பவர் ஒரு தனிப்பட்ட படையினர் என்று கருதிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் "விஜயபாகு வின் 15ஆவது ஆட்சியாண்டில் அதிராஜேந்திரனோடு சோழர் கள் இலங்கையிலிருந்து அகற்றப்பட்டார்கள் என்று மகாவம்சம் கூறினாலும் விஜயபாகு சோழர்களைத் தோற்கடித்துத் துரத்தி னான் என்பது நம்பக்கூடியதாயில்லை. தங்கள் அரசனின் வரு கையை எதிர்பார்த்து வேலைக்காரப் படையினர் இலங்கையில் தங்கியிருந்தனர். அவர்கள் அதிராஜேந்திரன் இறந்த செய்தி யைக் கேட்டோ அல்லது விஜயபாகு தங்களை அழித்துவிடுவான் என்று பயந்தோ விஜயபாகுவின் படையினராக விசுவாசப் பிர மாணம் செய்திருக்க வேண்டும். விஜயபாகுவின் பதின்மூன்றா வது ஆட்சியாண்டில் சோழருக்கெதிராகப் படையெடுத்துச் செல்லும்போது விஜயபாகு வேலைக்காரரைத் தன் படையில் சேருமாறு கேட்டபொழுது அவர்கள் மறுத்துக் கலகம் செய் தனர். (MHV IX 36--44) இதனால் இலங்கையிலிருந்த சோழத் தேசாதிபதிகளே வேலைக்காரரின் தலைவர் என்பது தெரிகிறது." இக்கூற்றிலே ஒரு உண்மையும் ஒரு தவறும் உண்டு. தங்களுக் கும் சோழருக்குமிருந்த தொடர்பு காரணமாகவே வேலைக்காரர் கலகம் விளைத்தனர் என்பது உண்மை. தமக்கே யுரிமையான ஒரு வரலாற்றையுடைய தனிப்பட்ட ஒரு படையினராக வேலைக்காரரைக் கருதுவது தவறு. அவர்களின் உண்மையியல்பு மேலே பொழிப்பாகக் கூறப்பெற்று இறுதியிலேயுள்ள குறிப் புரையில் விரிவாக ஆராயப்படுகின்றது. விஜயபாகுவின் வேலைக் காரப்படை சோழப்படையில் வேறுபட்டதாயிருத்தல்வேண்டும். ஆனால் எமக்கு அதன் தோற்றமும் வரலாறும் நன்கு தெரிய வில்லை. வேலைக்காரப் படையினரின் தொழில், அதாவது தங் கள் உயிரைப் பொருட்படுத்தாது அரசனைப் பாதுகாப்பதாக வாக்குறுதி கொடுத்து அவனது மெய்காப்பாளராகக் கடமை யாற்றல்--சிங்கள அரசியல் முறைக்குப் புதியது அன்று. ஏனெ னில் முதலாம் சேனனின் ஆட்சியில் பாண்டியர் படையெடுப் பின்போது, அரசகுமாரனாகிய மகிந்தனுடன் ஒருவகைப் படை யினர் தாமே தம் குடரைக் கீறி உயிர்விட்டனர். என்று கூறப்பட்டுள்ளது. இப்படியான செய்தியை 1088ஆம் ஆண்டுக் கலவரத்தோடும் பொலநறுவைத் தமிழ்ச் சிலாசனத்தில் கூறப் பட்ட புத்த தந்தக் கோயில்மீது கொண்ட போரோடும் தொடர் புள்ளதாகக் கேள்வியுறுகின்றோமேயன்றி வேறொரு சந்தர்ப்பத் திலும் கேள்விப்படவில்லை, இப்படியான ஏற்பாடு தொடர்ந்து பல காலமாக இருந்ததோவென்றும் எக்காலம் தொட்டிருந்தது

என்றும் கூறமுடியாது. சோழநாட்டிலே வேலைக்காரப் படையிருந்திருக்கின்றது. இலங்கையிலும் இம்முறையைப் பின்பற்றியிருக்கலாம். அல்லாவிட்டால் இராசநாயகத்தின் குறிப்புக் கூறுவது போன்று இலங்கையிலிருந்த சோழத் தேசாதிபதிக்கு இப்படியான ஒரு படை இருந்திருந்து பின் விஜயபாகு பொலநறுவையில் தன்னாட்சியை நிறுவிய பின்னர் தொடர்ந்து இம் முறையைக் கைக்கொண்டிருக்கலாம். இது எப்படியாயிருந்தாலும் வேலைக்காரப்படை சோழப் படையிலிருந்து வேறுபட்டதாயிருத்தல் வேண்டும். விஜயபாகு இறந்த பின்னர் புத்த தந்தத்தைப் பாதுகாக்கும் பொறுப்பையேற்ற வேலைக்காரர் மேற்கூறப்பட்ட இரு படையினரிலும் வேறுபட்டவர். இவர்கள் இலங்கை நகர்களிலிருந்த தமிழ் வர்த்தகக் குழுவின் கீழ் கடமையாற்றி யிருக்கவேண்டும். அரை நூற்றாண்டு காலமாகச் சோழராட்சி இலங்கையில் நிலவியதன் காலமாக வட இலங்கையிலுள்ள தமிழர் தொகை அதிகரித்திருக்கலாம். விஜயபாகு சோழ அரசாங்கத்தை முறியடிப்பதற்குத் தொடர்ந்து இயற்றிய போரினால் நாடு குழப்பமடைந்திருக்கலாம். இந்நிலையில் பல தமிழர் விஜயபாகுவின் வேலைக்காரப் படையினராகத் தம்மைப் பதிவு செய்திருக்கலாம் இவர்களுக்குச் சோழ அரசாங்கத்திடமிருந்த கடமையுணர்ச்சி முதலாம் குலோத்துங்கன் சூழ்ச்சி செய்து இவர்களைக் கலகம் விளைக்கத்தூண்டி தென்னிந்தியா சென்று பழிக்குப் பழிவாங்க இருந்த விஜயபாகுவின் நோக்கத்தைக் கைவிடச் செய்வதற்கு ஆதாரமாயிருந்திருக்கலாம். இப்படியான யூகங்களிற்றான் சிங்கள அரசன் இக்கலகத்தையடக்க எடுத்த கொடூர நடவடிக்கைகளையும் இக்கலகத்தின் போக்கையுமே விளக்கலாம்.

திரும்பவும் இக்கலகத்தின் வரலாற்றைத் தொடர்வோம். கலகக்காரர் படையெடுப்பைத் தாங்கும்படி கட்டளையிடப்பட்ட சேனாதிபதிகள் இருவரைக் கொன்று கட்டறுத்த மதயானைகள் போன்று புலத்தி நகரைச் சூழ்ந்த நாட்டை சூறையாடினர். அரசனின் இளைய சகோதரியையும் அவளது மூன்று புதல்வரையும் கைப்பற்றி அரசனின் மாளிகையைத் தீக்கிரையாக்கினர். அரசன் நகரைவிட்டு நீங்கித் தக்கண தேசம் சென்றான். தன் மதித்தற்குரிய உடைமைகளை வாதகிரிப் பாறையுள் ஒளித்துவிட்டுச் சிங்கம்போன்ற வீரம் படைத்த உபராஜன் வீரபாகுவுடன் ஒரு பெரும் படைசூழப் புலத்தி நகரை நோக்கிச் சென்றான். அங்கே கடும்போர் புரிந்து அங்கே குழுமிய படையினரை ஓடச் செய்தான். பின் கலகம் விளைவித்த படையின் தலைவர்களின் கைகளைப் பின்புறமாகப் பிணித்து முன் னவர்க

ளாற் கொல்லப்பட்ட இரு சேனுதிபதிகளின் பிரதேசங்களை எரித்த ஈமத்திலேயே இட்டு எரித்தான். இங்ஙனம் அரசன் கலகத் தலைவரைக் கொன்று இலங்கையை விடுதலை செய்தான்.

விஜயபாகுவுக்கும் சோழருக்குமிருந்த தொடர்பின் வரலாற்றின் முடிவுரையாகச் சூளவம்சம் பின்வருமாறு கூறுகின்றது :— "அரசன் தான் சோழரோடு போர் செய்வதற்குக் கொண்ட இலட்சியத்தைக் கைவிடவில்லை. தன் நாற்பத்தைந்தாவது ஆட்சியாண்டில் கடற்கரையில் துறைமுகத்திற்குப் படையெடுத்துச் சென்று சோழ அரசனின் வரவை எதிர்நோக்கித் தங்கியிருந்தான். சோழ அரசன் வராமையால் அரசன் அவன் தூதுவரை விடுத்துப் புலத்தி நகருக்கு மீண்டு அங்கு சிலகாலம் தங்கியிருந்தான்." இப்பொழுது விஜயபாகுவின் நாற்பத்தைந்தாவது ஆட்சியாண்டு எம்மை கி. பி. 1103-ம் ஆண்டுக்கு இழுத்துச் செல்கின்றது. மேலேயுள்ள சூளவம்சத்தின் சதியில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் வேறோரிடமும் காணப்படவில்லை. சூளவம்சத்தில் கூறப்பட்டிருப்பது உண்மைச் சரித்திர வரலாறு போலன்றி ஒரு பழங்கதை போன்றிருக்கின்றது. எதுவாயிருந்தாலும் ஒன்று மாத்திரம் நிச்சயம். அது 1076 ஆம் ஆண்டளவில் தம் ஆரம்பத் தொல்லைக்கு பின்னரும் குலோத்துங்கன் இலங்கையில் தன்னுட்சியை நிறுவுவதற்கு விரும்பவில்லை. சூளவம்சம் (59,40) அவன் விஜயபாகுவின் சகோதரி மித்தையைத் தன் அரசியாகப் பெற எடுத்த முயற்சி வீணனது என்று கூறுகிறது. புதுமுத்துவவிலுள்ளதும் (Budumuthwa) முதலாம் ஜயபாகுவின் எட்டாம் ஆட்சியாண்டுக்கு உரியதுமான ஒரு கல்வெட்டு (கி. பி. 1121-2) குலோத்துங்க சோழனின் மகளும் வீரப்பெருமாள் என்று பாண்டிய மன்னனின் மனைவியுமான சுத்தமலியார் (Suttamaliyar) மகாகல அல்லது விக்கிரமசீல மேகபுத்திரத்திலுள்ள விக்கிரமசீலமேகஸ்வரம் என்ற சைவக் கோயிலுக்கு ஒரு விளக்கு கொடுத்ததாகக் கூறுகின்றது. இதே காலத்திற்கும் இதே இடத்திற்குமுரிய வேருெரு சாசனம் இவ்விடத்திலுள்ள சம்மாளருக்கும் முதலாம் பராக்கிரமபாகுவின்[36] தந்தையாகிய வீரபாகு மாஞபரணன் கொடுத்த உரிமைகளைக் கூறுகின்றது. முதற் சாசனத்தில் கூறப்பட்டுள்ள பாண்டியன் வீரப்பெருமாளும் இரண்டாவதில் குறிப்பிடப்பட்டுள்ள வீரபாகு மாஞபரணனும் ஒருவராயிருக்கக் கூடும். இது இப்படியாயின் குலோத்துங்கன் தன் மகளை மித்தையின் (Miha) மூத்த மகனும் முதலாம் பராக்கிரமபாகுவின் தந்தையாகிய வீரபாகு அல்லது மாஞபரணனுக்கு விவாகம் செய்து கொடுத்து இவ்வுறவினுல் தனக்கும் விஜயபாகுவுக்கு மிடையே நிலவிய பகையை நீக்கினுன் என்பது போதரும்.

அரை நூற்றுண்டுகாலமாக சோழராட்சியில் கவனிப்பாரற்று அழிந்துபோன புத்த சங்கத்தையும் மற்றைய புத்தசமய ஸ்தாபனங்களையும் திருத்தியமைத்தலே விஜயபாகு சமயத்திற்கு ஆற்றிய தொண்டாகும். சூளவம்சம் பின்வருமாறு கூறுகின்றது: ''புத்த சங்கத்திலே புதிய பிக்குகளை ஏற்றல் முதலிய கிரியைகளுக்கு வேண்டிய புத்த பிக்குகளின் தொகை குறைவானமையால் அரசன் புத்த சங்கத்தை தொடர்ந்து நிலைபெறச்செய்வதை மனதுட்கொண்டு ரமஞ்ஞ (Ramana) தேசத்தில் தன் நண்பனுகிய அரசகுமாரன் அநுருத்தனுக்கு (Anuruddha) பல திரவியங்களைத் தூதுவர் மூலம் அனுப்பி அங்கிருந்து திரிபிடகங்களை நன்கு கற்றவர்களும் நல்லொழுக்கத்திற்கு இருப்பிடமானவர்களும் தேரர் (Thera) என்று ஏற்றுக் சொள்ளப்பட்டவர்களுமான பிக்குகளை வருவித்தான். இவர்களுக்கும் விலைமதித்தற்கரிய உபகாரங்களைக் கொடுத்து அரசன் அவர்களைக் கொண்டு உலகைத் துறத்தல் சங்கத்தைச் சார்தல் முதலிய கிரியைகளை ஆற்றுவித்தும் திரிபிடகங்களை அவற்றின் உரையோடு படிக்கச் செய்தும் இலங்கையில் மங்கியிருந்த சங்கத்தைப் பிரகாசிக்கச் செய்தான்'' விஜயபாகு புத்த சமயத்தைப் பாதுகாப்பதற்கு முடிதரித்தான் என்று கூறும் பொலநறுவைத் தமிழ்ச் சிலாசனம் தொடர்ந்து பின்வருமாறு கூறுகின்றது: ''அரசன் அரமணத்திலிருந்து (Aramana) புத்த பிக்குகளை வருவித்து மூன்று நிகாயங்களையும் தூய்மைப்படுத்தினுன். தன்னிறையில் மூன்று மடங்கு நிறையுயுள்ள நாணயங்களை மூன்று நிகாயங்களுக்குக் கொடுத்து இலங்கை முழுவதையும் ஒரு குடைக் கீழ்க் கொணர்ந்து பத்து ராஜதர்மத்தை அனுட்டித்து 55 வருடகாலம் அரசு புரியத் திருவுளம்கொண்டான். அத்துடன் 73 புண்ணிய பிறந்த நாட்களைக் கொண்டாடினுன். கைகர் (Geiger) கருத்துப்படி புலத்திநகர், அனுராதபுரம், மகாகமம் ஆகியவற்றிலுள்ள மகா ஜேதவன, அபயகிரி விகாரைகளுக்குரிய சமூகங்களே மூன்று நிகாயங்களும். அடுத்ததாக இச்சாசனம் புத்த தந்தம் வேலைக்காரரின் பாதுகாப்பில் வைத்ததைக் கூறுவதற்கு முன்னுரையாக விஜயபாகு தந்த கோவிலைக் கட்டுவித்ததாகக் கூறுகிறது. ''அரசன் நுவரகல தேவசேன விரத்தர் என்பவருக்குக் கட்டளையிட்டு அவன் மூலம் புலநரி (Pulanari) என்று அழைக்கப்பெறும் விஜயராஜபுரத்தில் புத்த தந்தத்திற்கு ஒரு கோயில் எடுப்பித்தான். மூவுலகுக்கும் சூடாமணி போன்றியங்கிய புத்தரின் தந்தம் பாத்திரம் ஆகிய சின்னங்களுக்கு இக் கோயில் நிரந்தர இருப்பிடமாகியது'' என்று கூறுகிறது.

பொலநறுவைக்கு விஜயராஜபுரம் என்ற பெயர் விஜயபாகு அதைத் தன் தலைநகராகக் கொண்டதைக் குறிப்பிடுகின்றது என்பதை நாம் இங்கே கவனிப்போம். சூளவம்சமும் புத்த

தந்த கோயிலைக் கட்டுவித்ததைக் குறிப்பிட்டு பின்வருமாறு கூறுகின்றது :— ''புத்த தந்தத்திற்கு ஒரு விழாவைத் தொடக்கி வைத்தான்.'' இக்கட்டடம் இக்காலப் புதைபொருளாராய்ச்சியில் 2-வது விகாரையெனக் கருதப்படுகின்றது. மூன்று நிகாயங்களுக்குரிய பிக்குகளுக்குப் பல அழகிய விகாரைகள் தலைநகரிலே கட்டப்பட்டன. அவர்களின் உணவுக்காக ஒரு முழ மாவட்டமே அங்குள்ள கால்வாய் வெட்டுவோர்களுடன் அவர்களுக் களிக்கப் பட்டது. அவர்களுக்கு இருப்பிடங்கள் கட்டப்பட்டன. அவனது நாளாந்த கருமங்களிலேயும் அரசனது பக்தி பிரதிபலித்தது.'' ''நடனம் முதலியவற்றை ஏற்படுத்தி நறுமணம் பொருந்திய மலர்கள் முதலியவற்றைக் காணிக்கையாகக் கொடுப்பதோடு புத்தரைத் தலைவணங்கிப் பக்தி சிரத்தையோடு துதித்து வந்தான்.'' உண்மையான மதக் கொள்கையைப் போதிப்பதற்கு தகுதிவாய்ந்த ஆசிரியர்களை ஏற்படுத்தினான். இக் கொள்கை பர்மாவிலிருந்து வந்த பிக்குகளின் கொள்கையாகிய தேரவாதமாயிருந்தும் சிலர் மகாயானத்தை மேற்கொண்டிருந்தனர். திரும்பத் திரும்ப மூன்று நிகாயங்களையும் குறிப்பிட்டிருத்தல் அரசன் கிளைச்சமயங்கள் யாவற்றையும் ஒப்ப மதிக்கவேண்டும் என்பதைக் கொண்டிருக்கலாம். மும்முறை அரசன் தன்னுடல் நிறை அளவுள்ளவற்றை வறியவர்க்குத் தானமாகக் கொடுத்தான். (தமிழ்ச் சிலாசனம்) உபோசத நாட்களில் உபோசத விரதத்தை குற்றமின்றி அனுட்டித்தான். ஒவ்வொரு வருடமும் தண்டிஸ்ஸர (Dandissaro) தானத்தைச் செய்தான். திரிபிடகத்தைப் பிரதிபண்ணுவித்துப் பிக்குகளுக்கு அளித்தான். விலையுயர்ந்த முத்துக்கள் மணிகள் வேறு ஆபரணங்கள் முதலியவற்றை அனுப்பி ஜம்புத்தீவிலுள்ள புண்ணிய அரசமரத்துக்கு வணக்கம் செலுத்தினான். அவனது மகஷி (இராணி) விகாரையின் அமைதியான வாழ்க்கையைக் குழப்பினமையால் அரசன் அவளுக்குரிய வருமானங்களை நீக்கி, அவளின் கழுத்திலே ஒரு இரும்புப் பூட்டு மாட்டி அவளை நகரில், அழைத்துக் சென்று சமூகத்தினரைச் சமாதானப் படுத்தி, தனக்குப் புத்த சங்கத்தின் மேலிருந்த பத்தியை யுலகுக்கு வெளிப்படுத்தினான். தன் பெற்றோருக்கு ஈமக்கிரியைகள் நடந்த இடத்தில் பிக்குகளுக்கு இருப்பிடங்கள் அமைத்துக் கொடுத்தான். சோழராட்சிக் காலத்தில் விகாரைகளுக்கும் மற்றும் தலங்களுக்கும் ஏற்பட்ட அழிவைச் சீர்ப்படுத்தி அவைகளுககுப் புதிய கிராமங்களை அளித்தான். லாபவாசின் வந்தாஜீவக முதலிய சமயக்கிளைகளுக்குரிய பிக்குகளுக்கும் கம்பளி, கரி, பாத்திரங்கள் மருந்து முதலியவற்றை விஜயபாகு கொடுத்ததும், முன்பு ரோஹணத்தில் கொடுத்த நன்கொடைகளை புதுப்பித்ததும், விதவைகள்,

அனுதைப் பெண்கள், முடவர் முதலியோரைப் பாது காத்ததும் ஆகிய செய்திகள் இவ்விதிகாசத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கப்புறுமூலாயதனத்தில் அரசனின் மகள் யசோதரா ஒரு அழகிய பெரிய விக்கிரக சாலையைக் கட்டுவித்தாள். செலந்தரசமூக (Salantarasamuha) விகாரையில் அவள் ராஜினியாக நியமிக்கப் பெற்று ஒரு உயர்ந்த பசாத (Pasada) என்று பெயர்பெற்ற பசாத (மாடி) ஒன்றை கட்டுவித்தான். இங்ஙனம் அவனது அந்தப்புரத்துப் பெண்களும் அவன் சபையிலுள்ளோரும் பல வழிகளிலே புண்ணியத்தைத் தேடிக் கொண்டனர்,

இவனது இன்னெரு முக்கிய பக்திச் செயல் இப்பொழுது ஆதம் மலையெனப்படுவதும் மகாவம்சத்தில் சுமனகூடம் எனப் படுவதுமாகிய சமந்தகூடத்துக்குச் செல்லும் பாதையிலுள்ள வசதிகளை விருத்தி செய்தது ஆகும் சமந்தகூடத்திலுள்ள புத்தரின் பாத அடையாளத்தை வணங்குவதற்குச் செல்லும் மக்கள் பாதையிலே இளைப்படையாதிருக்கும் பொருட்டு அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பதற்கு பல் நெல் வயல்கள் நிரம்பிய கிலிமலைய (Gilimalaya) என்ற கிராமத்தை யளித்தான். கடலிகாம என்னும் இடத்தைக் கடந்து செல்லும் பாதையிலும் ஹூவ (Huva) மாகாணத்திலிருந்து செல்லும் பாதையிலும் பல வாடி வீடுகளை யமைத்தான். சூளவம்சத்தில் கூறப்பட்டிருப்பதற்கு அம்பகமுவையிலுள்ள கல்வெட்டும் கிலிமலையத்தி லுள்ள சிலாசாசனமும் சான்று பகிர்கின்றன அம்பகமுவைக் கல்வெட்டு பின்வருமாறு கூறுகின்றது. ''அவனது 38 ஆவது ஆட்சியாண்டில் (1096) ஒரு நாள் இவ்யுகத்திலே தோன்றிய ககுசந்த (Kakusandha) கோனுகமன (Konagamana) கஸ்ஸப (Kassapa) கோதம (Gotama) ஆகிய நான்கு புத்தர்களுடைய தாமரை போன்ற பாதங்களைத்தாங்கிய சமனேள மலையுச்சியிலுள்ள பாத அடையாளத்திற்கு ஏழுவித மணிகள் பதித்த ஆபரணங்களைக் காணிக்கையாக அரசன் செலுத்தினுன். அதற்கு மேலே பலவிதானங்களையமைத்து பட்டினுலான கொடிகளை நாட்டித் தன் முடியினுல் அலங்கரித்தான்.'' பின் இக்கல்வெட்டு இவன் அங்கு செய்த திருத்தங்கள் காணிக்கைகள் வைத்த விளக்குகள் அங்குவரும் பிக்குகளுக்கு உணவு முதலியன கொடுத்தற்குச் செய்த வசதிகள் அப்பாதையில் இடையிடையே அமைத்த தானசாலைகள் முதலியவற்றைக் குறிப்பிடுகின்றது. கீழ்ச்சாதி மக்கள் நின்று வணங்குவதற்கு அப்பாத அடையாளத்தின் கீழ் ஒரு (படிக்கட்டு) உப்பரிகையை இவன் அமைத்ததையும் இக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. கடைசியாக மேலே கூறப்பட்

டுள்ள கருமங்களுக்காக கொடுக்கப்பட்ட நிலங்கள் தோட்டங்கள் முதலியவற்றையும் அவற்றிற்குரிய உரிமைகளைப் பற்றியும் விரிவாகக் கூறுகின்றது. அரசனின் ஆலோசனைச் சபையிலிருந்த நால்வர் இக் கட்டளையை நிறைவேற்றியவர்கள். அவர்களின் பெயர்கள் இச்சாசனத்தினிறுதியில் காணப்படும்.

திருக்கோணமலை மாவட்டத்தில் பாலமோட்டையிலிருந்து (Palamottai) எடுக்கப்பட்ட ஒரு தமிழ்சிலாசாசனம் விஜயபாகுவின் 42 வது ஆட்சியாண்டிற்குரியது. கந்தளாயின் மறுபெயராகிய சைவக் கோயிலின் குறிப்பிட்ட தேவைகளுக்காக பொன் நாணயங்கள் குறிப்பிட்டதை இச்காசனம் குறிப்பிடுகின்றது. இச்சாசனத்தைப் பதிப்பித்த கலாநிதி பரணவிதான அத்தலத்தினதும் இடத்தினதும் பெயரினின்றும் அவை விஜயபாகு காலத்தில் கட்டப்பட்டிருக்கவேண்டுமென்ற முடிவு வந்து "இது அவன் புத்தமதத்தின் மீது கொண்ட ஆர்வம் தன் பிரசைகளின் வேறு சமயங்களுக்கு ஆதரவு கொடுப்பதை தடுக்கவில்லை யென்பதைக் காட்டுகிறது என்று கூறுவர் இக்கோயில் சோழர் காலத்தில் கட்டப்பட்டதாயும் இச்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொடை விஜயபாகுவின் அரசாட்சிக் காலத்ததாயுமிருக்கக் கூடும். சாளுக்கியரிடமிருந்து கல்யாணியைக் கைப்பற்றிய பின் நடந்த வீராபிஷேகத்தில் முதலாம் ராஜாதிராஜன் விஜயராஜேந்திரன் என்றபட்டத்தைத் தரித்தான். ஆகையால் இக்கோயிலும் அந்தச் சதுர்வேதி மங்கலமும் இவன் பெயர் கொண்டு பெயரிடப்பட்டிருக்கலாம் விஜயபாகு புத்தமதத்தை விட மற்றைய மதங்கள்பற்றி யாது கொள்கையுடையவனுயிருந்தான் என்று ஒரு முடிவுக்கு வருமுன்னர் வேறு சான்றுகளையும் நாம் பெறுதல் வேண்டும்.

நீர்ப்பாசன வசதிகளை திருத்தியமைத்தலில் விஜயபாகு அதிசிரத்தையெடுத்தான். இதனுல் திருத்தப்பட்ட குளங்களின் நாமாவாளியை சூளவம்சம் கொடுக்கின்றது அரசன் தானே சிறந்த கல்விமானுகவும் கவிஞனுகவும் விளங்கிக் கல்விக்குப் பெருமாதரவளித்தான். பொலநறுவையிலுள்ள புத்ததந்த கோவிலின் பிரசங்கக்கூடத்தில் ஒவ்வொரு காலையும் அரசன் இருந்து தம்மசங்கனியை (Dhammasangam) மொழி பெயர்த்தான். ஜம்புத்தீவிலிருந்து வந்த கல்விமான்களில் தகுதிவாய்ந்தவர்களுக்குக் கொடையில் வல்லவனுகிய அரசன் பணங்கொடுத்து மகிழ்வித்தான். பல கவிகளை இயற்றிய கவிஞர்களுக்கு பலவளம் பொருந்திய கிராமங்களையளித்தான் அரசாங்க அதிகாரிகள் முதலியோரின் புதல்வர் செய்யுட்கள் இயற்றினரென அறிந்தவுடனே அவர்களுக்கு இக்கவியரசன் பல சன்மானங்களைக் கொடுத்தான். சிங்

களக் கவிகளியற்றுவதில் சிங்களக்கவிஞருக்குத் தலைவனாக விளங்கினான். பனகடுவ (Panakaduva) செப்புச்சாசனத்தை இயற்றுவதிலும் இவன் ஒரு பங்கு கொண்டிருந்திருக்கலாம். அதன் மொழி நடையைப் பற்றிய கலாநிதி பரணவிதான பின்வருமாறு கூறுவர். ''இதன் நடை கம்பீரமுடையது. சொற்சுருக்கம் பொருட்டெளிவு முதலிய இயல்புகளைக் கொண்ட மொழி நடைக்கு உதாரணமாக விளங்குவது. இக்காலத்திலே வடமொழி முதலிய வேற்றுமொழி மரபுகளை எழுத்தாளர் கையாளுவதனால் இவ்வியல்புகளை இம்மொழி யிழந்துவிட்டது. இச்சாசனத்தின் ஆரம்பப்பகுதி உரைநடையில் இருந்தாலும் செய்யுள் நடையின் போக்கை ஒத்திருக்கின்றது.

விஜயபாகு இல்லாவிட்டால் இக்காலத்தில் இலங்கையில் சிங்களவர் இருக்கமாட்டார்கள் என்று கூறுவது மிகையாகலாம் ஆனால் சிங்கள மக்களின் விடுதலைக்கு இவனே கர்த்தா ஆவன்.

---

# தென்மேற்குப் பருவக்காற்றின் சடுதியான பிறப்பு

## புதிய விளக்கம் :

கலாநிதி ஜோர்ஜ் தம்பையாப்பிள்ளை
B. A. (Hons.), M. A., Ph. D, F. R. Met. S.

### தோற்றுவாய் :

தென்மேற் பருவக் காற்றின் 'சடுதியான பிறப்பு' அல்லது அதன் நாடகத் தன்மை பொருந்திய தோற்றத்தைத் தீர்மானிக்கப் புகுதல், உலக வளிமண்டலவியலில் நன்கு அறியப்பட்டதும், குறிப்பிடத்தக்கதுமான ஒரு நிகழ்ச்சியாக அமைந்தது இந்தியா, பர்மா, இலங்கை போன்ற தென்கிழக்காசியப் பிரதேசங்களில் தெ. மே. பருவக் காற்றின் 'சடுதியான பிறப்பு'' ஒரு சிறப்பான வளிமண்டலவியல் தோற்றப்பாடாகக் கருதப் படுகிறது. ஏனெனில், பொருளாதாரம், காலநிலை என்பவற்றைப்பொறுத்த அளவில் இக்காற்று அதிமுக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. இக்காற்றின் ஆரம்பத்துடன் இப்பிரதேசங்களிற் பெருமழைக்காலம் ஆரம்பிப்பதனால், இது விவசாயத்திற்குரிய காலத்தை ஆரம்பித்து வைக்கிறது. இவ்வுண்மை கவனத்திற்குள்ளாகிய காலந்தொட்டு, இக்காற்றின் 'சடுதியான பிறப்பிற்கான நாளைக் குறித்தல் அதிமுக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இன்றுங்கூட இந்திய வளிமண்டலவியற் றுறையினர் இதன் தோற்றத்தினை முன்கூட்டியே அறிய அல்லது அதற்கு முன்னறிகுறி காட்ட முயற்சிக்கின்றனர்.

எனவே வளிமண்டலவியலிலும், பூமியின் வேறு எந்தப் பகுதியிலும் காணமுடியாததும், கவனிக்கப்படாததுமான குறிப்பிடத்தக்க காலநிலைத் தனித்துவங்களைப் பருவக்காற்றின் தோற்றம் கொண்டுள்ளது. என்பது இப்பொழுது ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. எனவே இது தோன்றும் சரியான காலத்தைக்

---

தமிழாக்கம் : செல்வி. சுதந்திரதேவி சயதேவர்

குறித்தல் ஒரு வழக்காருக அமைந்தது. பிரதேசங்களினது அகலக் கோட்டு நிலையத்திற்கேற்ப இதன் பிறப்பு வைகாசித் தொடக்கத்திலிருந்து ஆனியின் நடுப் பகுதிவரை வேறுபடும். இலங்கையின் தென்மேற்குக் கரையோரப் பகுதிகளில் இதன் தோற்றம் வைகாசித் தொடக்கத்தில் நிகழ, வடக்கே இந்தியாவின் மேற்குக் கரையில் ஆனித் தொடக்கத்தில் அல்லது ஆனி நடுப்பகுதியிற் காலங்கடந்து ஏற்படுகின்றது. தெ. மே. பருவக் காற்று 'நேரத்துக்குத்' தோன்றத் தவறினும், இப்பிரதேசத்தில் வசிக்கும் மக்களும் விவசாயிகளும் இதன் கால வரையறையைப் பரம்பரை பரம்பரையாக ஏற்றுக்கொண்டுள்ளனர். இலங்கையின் தென்மேற்குக் கரையில் சித்திரையின் தொடக்கம் அல்லது நடுப்பகுதி தொட்டு பெருமழை பெய்யுமாயின் இதனைக் "காலத்திற்கு முந்திய" பருவக்காற்று என்றும் காலங் கடந்து பெருமழை பெய்யுமாயின் அதனைக் 'காலங் கடந்த' பருவக் காற்று என்றும் கொள்வர். மக்கட் செறிவு மிகவுள்ள தென் கிழக்கு ஆசியாவில் காற்ருனது காலத்திற்குக் காலம் ஏற்படாதொழியின், அதன் விளைவாகப் பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்பட்டால் ஆச்சரியப்படுவதற் கில்லை. நூற்றுண்டுகளுக்கு மேலாக, இந்தியத் துணைக்கண்டத்தின் தெ. மே. கரையில் ஏற்பட்ட இக்காற்றின் சடுதியான தோற்றப்பாட்டினைப் பரிசீலனை செய்ததன் வாயிலாக, இக்காற்று நிரந்தர காலவரையறைக் குட்படாமல், சடுதியான வேறுபாடுகளினுல், மிகக் கெடுதியான முறையிற் பிறழ்ச்சியைக் காட்டி நின்றதை அறியலாம். காலத்திற்கு முன்னர் ஏற்படும் பருவக்காற்றின் சடுதியான தோற்றத்தின் விளைவாகச் சடுதியாக ஏற்படும் பெருமழையினை முளைக்கும் பயிர்கள் சமாளிக்க முடிவதில்லை எனவே பயிர்கள் அழியும். ஆனுற் காலம் தாழ்ந்து ஏற்படும் பருவக்காற்றும் அழிவையே குறிக்கும், ஏனெனில் இக்காலத்திற் பயிர்கள் தண்ணீர்வேண்டி நின்ற காலத்தைக் கடந்து நிற்கும். இந்திய வளிமண்டலவியற் பகுதியினர் ஒன்றையொன்று தொடர்புபடுத்துங் காரணிகளைக் கொண்டு, "சடுதியான பிறப்பினை" முன்கூட்டியே அறிய வேண்டி, எடுத்தாண்ட முயற்சிகள் சிறிதளவு வெற்றியை அளித்தன. எனவே இத்தகைய சந்தர்ப்பத்தில் குறிப்பிடத்தக்க இவ் வளிமண்டலவியற் ருேற்றப்பாட்டின் முக்கிய பண்புகளை ஆராய்வதன் வாயிலாகத் தெ. மே. பருவக்காற்றைப் பாதிக்கும் காரணிகளை அல்லது காரணிகளின் தொகுதியை நிர்ணயிப்பதற்கான முயற்சி இத்தால் எடுத்துக்கொள்ளப்படுகிறது. முதலிற் பழைய விளக்கம் ஆய்விற் கெடுத்துக்கொள்ளப்பட்டு அதன் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படும். ஈற்றில் தற்கால ஆய்வுகள் கண்டுபிடிப்புகள் என்பவற்றின் அடிப்படையிற் புதிய விளக்கம் அளிக்கப்படும்.

## அ. பழைய விளக்கம்

முதன்முதலாக 1686-ம் ஆண்டிலேயே[2] பிரித்தானிய வேத்தியற் கழகத்தின் முன்னர் தெ. மே. பருவக்காற்றிற்கும் அதன் 'சடுதியான பிறப்பிற்கும்' விஞ்ஞான அடிப்படையில் விளக்கங்கள் தரப்பட்டன. தரையினதும் நீரினதும் சூட்டுத் திறன் வேறுபாடு காரணமாகவே பருவக்காற்றுச் சுற்றோட்டம் ஏற்படுகிறது என ஹால்லி என்பார் கருதினர். 'வெப்பம் ஏற்படுதலில்' உள்ள வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்ட பழைய விளக்கம் உடனடியாக ஏற்றுக்கொள்ளப் பட்டது ; 2-ம் உலகப் போர்க்காலம் வரையும் முதன்மை வாய்ந்த தத்துவமாகக் கருதப்பட்டது. பருவக்காற்றைப் பற்றி வெளி வந்த இலக்கியங்கள் யாவும் முந்திய வேறுபாட்டுக் கொள் கையை விரிவுபடுத்துவனவாகவே[3] அமைந்தன. இன்றுவரை கூட, காலநிலையியல் பற்றிய பாடநூல்கள் எல்லாம் இப்பழைய கொள்கையே தொடர்ந்து விரிவுபடுத்திக் கூறுகின்றனவாக அமைந்தன. அதாவது தெ. மே. பருவக்காற்று, இந்தியத் துணைக்கண்டம் படிப்படியாக வெப்பமடைவதால், தானகவே ஏற் படும் விளைவு எனக் கருதப்படுகிறது. எனவே இக்காற்றின் பிறப் பினை ஆராய்வதற்கு முன்னர் இந்தியப் பகுதியின் வளி மண்டலத்தின் பண்புகளைப் பரிசீலனை செய்தலே இச்சூழ்நிலையில் பொருத்த முடையதாகும்.

கதிர்வீச்சுக் கருத்துக்களோடு பொருந்தத்தக்கதாய் நோக்கும் போது, இளவேனிற் சமவிராக் காலத்தோடு (பங்குனி) கதிர்ச் செறிவின் தாக்கம் வடக்கே செல்லச்செல்ல அதிகரித்துச் செல் கிறது ; சித்திரையளவில் இந்தியாவிலும் பர்மாவிலும் தெளிவாக வரையறுக்கப்பட்ட இரு வெப்ப வலயங்கள் ஏற்படு கின்றன. இவ்விரண்டும் தாம் காணப்படும் சுற்றுடலைத்

---

2. E. Halley "An Historical account of the Trade winds and Monsoons.........with an attempt to Assign Physical Cause of the Said wind." "Phil Trans 1686p 167.

3. H. F. Blanford 'The Rainfall of India' Quart J. R. Met S Vol. XIV 66 Apr. 1888 pp. 163--163; G. C. Simpson, The South west monsoon. ibid Vol xlvii, (July 1921). pp. 151--172) K. R. Ramanathan & K. R. Ramakrishnan The General Circulation of the Atmosphere over India and its. Neighbourhood. Mem. Ind. Met Dept. Vo XXXV (1939) pp. 189.

தவிர்ந்த ஏனைய தெ. கி. ஆசியச் சூழலோடு தொடர்பற்று விளங்குகின்றன. அமுக்கத் தன்மைகள் பங்குனித் தொடக்கத்தில் அமைந்துள்ளது போலவே இருக்கும்; அதாவது சாய்வு விகிதம் குறைவாகவும் காற்றுகள் வேறுபடுவனவாகவும் அமையும். வைகாசியளவிற் சில மாறுதல்கள் ஏற்படுவது தெளிவாகும். வளிமண்டல நிலைமைகள் செறிவாக்கப்படும், வெப்பமும் அதன் விளைவாக அமையும் அமுக்க அமைப்புக்களும், இறுதியாக ஏற்படக்கூடிய விளைவைச் சுருங்கச் செய்யும். சம வெப்பக் கோடுகள் 95°F ஐ மையமாகக் கொண்ட வளையங்களாய் அமையும். தற்பொழுது இதன் நிலை கிழக்கிலிருந்து மத்திய பகுதிக்கு (நக்பூர்–ஜபால்பூர்) நகர்ந்துளது; அத்துடன் துணைக்கண்டத்தின் மேலுள்ள சராசரி வெப்பம் 85°F ஆகவும் அதற்கு அதிகமாகவும் அமையும். ஆனிமாதத்தில் செறிவின் போக்கு உச்சநிலை அடைவதைக் காண்பதோடு ஆடிமாதமளவில் வெப்ப மையம் தார் பாலைவனத்தின் மேல் அமையும். மேற்கூறிய தன்மைகள் நிலை நிறுத்தப்பட்டு காற்றின் சேர்க்கை வேறுபடுகின்றது. இது தெற்கிலிருந்து அதிதெற்காக வேறுபடும். பங்குனிமாதத் தொடக்கத்தில் மேற்கே காணப்படும் வடகிழக்குக் காற்றுகளும் முற்றாக மறைந்துவிடுகின்றன. மேலும் இந்தியப் பிரதேசத்தின் மேல் வளிமண்டல நிலையில் வேறுபாடுகள் காணப்படும்போது, தென் இந்தியக் கடற்பிரதேசத்தின் மேலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. சூரியனது பெயர்ச்சியின் விளைவாக வெப்பத்திற்கு அல்லது காலநிலையியலுக்குரிய[4] மத்திய கோடு அதன் நிலையான நிலையமாகிய 5°வ அகலக் கோட்டிலிருந்து முனைவு நோக்கிப் பெயருகின்றது. காற்றுத் தொகுதிகளும் இதனோடு ஒருங்கே வடக்கு நோக்கிப் பெயருகின்றன. மத்திய கோட்டமைதி வலயமானது படிப்படியாகத் தன் செறிவிற் குறைந்து வைகாசி, ஆனிமாதங்களில் இந்தியப் பிரதேசத்தினின்றும் அகற்றப்பட, தென்னிந்தியக் கடலின் மேலுள்ள உப அயன உயரமுக்கப் பிரதேசத்திலிருந்து, இமய பர்மிய எல்லைகள் வரை தெ. மே. பருவக்காற்றுச் சுற்றோட்டங்கள் ஆதிக்கம் பெறுகின்றன. வடவரைக் கோளத்தை நோக்கி

---

4. வெப்பத்திற்குரிய அல்லது வளிமண்டலவியல் மத்தியகோடு தான் காலநிலையியலில் முக்கியத்துவம் வாய்ந்தது; பருவத்திற் கேற்பப் பெயரும் இது, மத்திய ஒடுங்கல் வலயத்தின் நடுவில் அமைந்தது. See G. Thambyapillay "The Rainfall Rhythm of Ceylon" Univ. Ceylon Rev. Vol XII 4 (October 1954) p. 10.

வரும் தென்கிழக்கு வியாபாரக் காற்றுகள் திரும்பலுக்குட்பட்டு தென்மேற்குக் காற்றுகளாக வீசுகின்றன. செறிவாகிக் கொண்டிருக்கும் தார் பாலைநில அமுக்கத் 'தாழி'யானது தென்கிழக்கு வியாபாரக் காற்றுகளை 'ஈர்க்கும்' காந்தமாகக் கருதப்பட்டது. தெ. மே. பருவக்காற்று ஆனியளவில் தோற்றம் பெறுகிறது. இது இந்தியத் துணைக்கண்டத்தை அடைந்ததும் இருகிளைகளாகி, ஒன்று அராபியக் கூட்டுப் பகுதியாகவும், மற்றையது வங்காளக் கூட்டுப் பகுதியாகவும் வீசுகின்றது. இலங்கை இந்தியாவிற்குத் தெற்கே அமைந்திருப்பதால், தெ. மே பருவக்காற்றின் தாக்கம் இலங்கையில் ஏற்பட்ட சில நாட்களின் பின்னர்தான் இந்தியாவின் மேற்குக் கரையில் ஏற்படுகிறது. புரட்டாதியிற் பின்வாங்கு நிலையைக் காட்டும் தெ மே. பருவக்காற்றுகள், வேறுபட்ட வடமேலைக் காற்றுகள் ஐப்பசியில் ஆதிக்கம் பெறும் வரை நீடித்திருக்கும். தென்கிழக்கு வியாபாரக் காற்றுகளின் அரைக்கோளத்திற்குரிய திருப்பத்தை விட, தாரின் ''தாழியே'' தெ. மே. பருவக்காற்றின் 'சடுதியான பிறப்புக்கு' முக்கிய காரணம் என்பது இதனாற் புலப்பட்டது. தார் பாலைவனத்தின் மேற் படிப்படியாக ஏற்படும் செறிவே பருவக்காற்றின் 'சடுதியான பிறப்பு' ''செயற்படுதற்கான வழி'' (Modus operardi) என அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. எவ்வாறெனினும், இப் பருவக்காற்று செயற்படும் முறை விளக்கமுடியாத பல சூழ்நிலைகளைக் கொண்டது.

(i) தார்த் 'தாழி' படிப்படியாகச் செறிவுபடுத்தப்படும் செயல் முறைதான் 'சடுதியான பிறப்பை'ப் பாதிக்கும் தெளிவான அம்சமெனில் இப்பருவக் காற்று சடுதியாகவும் நாடகத்தன்மை பொருந்தியதுமான ஒரு வளிமண்டலவியல் நிகழ்ச்சியைப் பிரதிபலிப்பதாக அமைவதேன் ?


(ii) தோற்றப்பாடின் தன்மை, தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்த வானிலைத் தன்மையின் உச்சத்திற் றங்கியிருப்பின் ''சடுதியான பிறப்பு'' அப் பிரதேசம் முழுவதிலும் ஒரேநேரத்தில் நிகழுவதோடு, அகலக்கோட்டு நிலையங்களிற்கேற்ப மாறுபடக் கூடாதல்லவா ?

(iii) பருவக்காற்று பர்மாமீது அதன் சடுதியான நாடகத் தன்மைகளைக் காட்டாது, மிக அமைதியாகத் தோற்றுவது ஏன் ?

# இந்தியப் பிரதேசத்திற்குரிய வளிமண்டலச் சுற்ருேட்ட அமைப்புகள் :

### புதிய சான்றுகள் :

பருவக் காற்றின் சடுதியான பிறப்பிற்குரிய புறநடைத் தன்மைகளுக்கு விளக்கம் தர முயலு முன்னர் தற்காலக் கண்டு பிடிப்புகளின் அடிப்படையில் இந்தியப் பிரதேசத்தின் வளிமண் டலச் சுற்ருேட்டத்தின் அமைப்புகளுக்குரிய வேறுபாடுகளை நன்கு பரிசீலனை செய்யவேண்டும். முன்னர் கூறப்பட்ட இந் திய வளிமண்டலக் 'களத்தில்' ஏற்படும் தொடர்ச்சியான மாற் றங்கள் சிம்சன்[5] என்பாரால் முதன் முதற் றெரிவிக்கப்பட்ட பழங் கொள்கைகளைப் பிரதிபலிக்கின்றன. கடலையும் கடற் கரையையும் அடிப்படையாகக் கொண்டு, 2-ம் உலக யுத்தத் தின்போது மிக அண்மைய ஆய்வுகள் நடத்தப்பட்டன. இத ஞல் குறேவ் என்பாரால் மிகத் தெளிவான விளக்கம் அளிக்கப் பட்டது. இதனுல் சித்திரை, வைகாசி, ஆனி, புரட்டாதி ஆகிய மாதங்களில் சுற்ருேட்ட அமைப்பில் ஏற்படும் மாற்றங்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.





படம் : 1.

குறிப்பிட்ட இடங்களில் இந்தியப் பகுதியில் வர்த்தகக் காற்றுக்களின் எல்லைகள். ம. ஒ. வ. பெயர்ச்சி காற்ருேட்டம் என்பவற்றைக் காட்டும் படிவம்.

5. Simpson op. cit.

சித்திரையில் உள்ள அமைப்பு. தெ. கி. வியாபாரக் காற்றுகளானவை தென்னிந்திய சமுத்திரத்திற் குரியனவாகவும், மேற்கவுஸ்திரேலியக் கரையில் வேரூன்றியிருப்பதையும் காட்டும். இடை அயன ஒடுங்கல் வலயம் மத்திய கோட்டிற்குத் தெற்காக நிலைத்து நிற்க, அத்துடன் கிழக்கிந்திய பர்மிய 'வெப்ப' மையங்களுடன் தொடர்புடைய ஓர் உள்ளூர் தெ. மே. சுற்றோட்டம் வங்காள விரிகுடாவிற் காணப்படுகிறது. வைகாசியில் ஒரு குறிப்பிடத்தக்க பெரு மாற்றம் நிகழுகின்றது. இதன் விளைவாக தெ. கி. வியாபாரக் காற்றுகள் மேற்கு அவுஸ்திரேலியக் கரையைச் சாருவதில்லை. அத்துடன் தெ. கி. வியாபாரக் காற்றுக்களின் ஒரு பகுதி வட இந்தியக் கடலை நோக்கி நகருகின்றது: ஆபிரிக்காவின் சோமாலிலாந்துக் கரைக்கு அப்பால் இதனை நன்கு தெளிவாகக் காணலாம். இந்நிலையில் அ. ஒ. வ. இரண்டாகப் பிரிந்ததுபோற் காணப்படுகிறது. சுமார் சராசரி 11 நொற்று (Knots) வேகத்தில் ஒரு குறிப்பிடத் தக்க உள்ளூர்ச் சுற்றோட்டமானது இலங்கையிலும் வங்காள விரிகுடாவிலும் நிகழும். ஆனியில் தெ. கி. வியாபாரக் காற்றுகள் வடவரைக் கோளத்திற்குத் திட்டவட்டமாகப் பெயர்ந்துவிடுகின்றன. ஆனாற் சுற்றோட்டமானது மத்திய ரேகையை 60° கி. நெடுங்கோட்டின் மேற்காகவே கடக்கின்றது, இச்சந்தர்ப்பத்தில் தென் கிழக்கு வியாபாரக் காற்றுகள் நன்கு திசைத் திருப்பத்திற்குட்பட்டு தெ. மே. காற்றுகளாக வட இந்தியக் கடல் முழுவதையும், இந்தியத் துணைக்கண்டத்தையும் இலங்கை பர்மா ஆகிய பிரதேசங்களையும் தன்னுதிக்கத்தினுள்ளடக்குகின்றது. அராபியாவை நோக்கிச் செல்லும் பருவக்காற்றுக் கிளையின் வேகம் 20 நொற்றாக இருக்க வங்காள விரிகுடாவிற்குரிய கிளையின் வேகம் 16 நொற்றாக இருப்பதைக் காணலாம். ம. ஒ. வ. மறைந்துவிடினும் அமைதி வலயமானது தனது வழக்கமான இடத்தில் நிலைத்திருக்கின்றது. ஆயினும் அதன் அடர்த்தி பரம்பல் இயல்பாகவே இம்மாதத்திற் குறிப்பிடத்தக்க அளவிற் குறைந்து காணப்படுகிறது. ஆனி மாதத்திற்குரிய இச்சுற்றோட்ட ஒழுங்கானது ஆடி, ஆவணி மாதங்களில் எவ்வித மாற்றங்களுக்கு முட்படுவதில்லை. எனினும் செறிவின் தன்மையிற் காணப்படும் சிறிய மாற்றங்களைக் காற்றின் வேகம் நிருபிக்கும். புரட்டாதியில் தெ. மே. பருவக் காற்று தனது பின்வாங்கலை ஆரம்பித்து ஐப்பசி மாதமளவில் பூர்த்தி செய்கின்றது. (படம் 1) ஆகவே புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் மத்திய கோட்டுக்குரிய மேலைக் காற்றுக்கள் காணப்படாது புறநடையாக அமையும். இப்புறநடையைவிடின் இக்




*January*

**MEAN POSITION AND STRENGTH**

**of the**


# JET STREAM

(after NAMIAS and CLAPP)

— 110 — geostrophic wind speed (miles per hour) at level of maximum speed

➡ axis of jet

GGRT




July
**MEAN POSITION and STRENGTH**
**of the**
## JET STREAM
(after NAMIAS and CLAPP)

—40— geostrophic wind speed (miles per hour) at level of maximum speed
⟶ axis of jet

காலம் சித்திரையின் அமைப்பினை ஒத்தது. (மீண்டும் அவுஸ்திரேலியக் கரையைச் சார்ந்துள்ள) தெ. கி. வியாபாரக் காற்றுகளின் வேகம் குறைய, ம. ஒ. வ. மீண்டும் நிலைபெற்று வட ஒடுங்கல் வலயம் தென் ஒடுங்கல் வலயம் என இரண்டாக அமைகின்றது.[7]

ஆகவே இத் தென்மேற் பருவக்காற்று இந்துசமுத்திரத்தின் வடபகுதியிலோ அன்றி அதனைச் சூழ்ந்த பிரதேசத்திலோ ஆனிவரை உண்மையாக விருத்தியடையவில்லை என்பதை இச்சான்றுகள் சுட்டும். வைகாசியில் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் வீசும் தெ. மே. காற்றுகள், அப்பிரதேசத்திற்குரிய உள்ளூர்த் தன்மைகளுடன் மத்திய கோட்டு மேலைக் காற்றுகளாக வீசும்[8]. இம் மத்திய கோட்டு மேலைக் காற்றுகள், இந்திய பர்மியப் பிரதேசத்தின் வெப்ப அமுக்கத் தன்மைகளாற் பாதிக்கப்பட்டுத் தென்மேற்குக் காற்றுகளின் உறுப்புகளாக அமைந்தன. அத்துடன் அயன ஒடுங்கல் வலயம் இப்பிரதேசங்களில் ஆனி ஆரம்பந் தொட்டு புரட்டாதிவரை காணப்படாததும் குறிப்பிடத்தக்கது. ஐப்பசியில் தெ. மே. பருவக் காற்று, வளி மண்டலக் களத்திலிருந்து மறைந்துவிட இவ் வலயம் மீண்டும் தோன்றுகின்றது இது காலம் பிறழ்ந்து தோன்றுகின்றது.[9]

## ஆ. இலங்கையின் சூழ்நிலை (Ceylon Context)

இலங்கையிலும் தென்னாசியச் சுற்றுப்புறத்திலும் வைகாசியில் தெ. மே. பருவக்காற்றின் சடுதியான பிறப்புடன் பலத்த மழைக்காலம் ஆரம்பிப்பது ஒரு துரதிஷ்ட வசமான வழக்காறாக அமைந்தது. இலங்கையில் வளிமண்டல வியற்றுறையினரோ வைகாசியிற் பெய்யும் மழையைத் தெ. மே. பருவக் காற்று மழை என்றே குறிப்பிட்டு வருகின்றனர்.[10] மிக அண்மையில்

---

7. Crowe ibid.
8. Thambyahpillay of Lit. p. 12
9. இக்கட்டுரை யாசிரியர் இதனைப் பல்கலைக்கழகத்தில் அவதானித்தார்.
10. கொழும்பு அவதானிப்பு நிலைய அறிக்கைகள். (1925--1954)

வெளியிடப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரையொன்றும்[11] வைகாசி தொட்டு ஆவணிவரை பெய்யும் மழை தெ. மே. பருவக்காற்முல் ஆனது எனக் குறிப்பிடுவது வருந்தத்தக்கது. பங்குனி, சித்திரை மாதங்களுக்கே உரிய மேற்காவுகை மழையின் பின்னர் ஏற்பட்டாலும், வைகாசியில் முதன்முதலாக ஏற்படும் பெருமழையுடன் ஒருங்கே எப்பொழுதும் தெ. மே. பருவக்காற்று நிகழ்வதில்லை என்பதினை இக்கட்டுரையாசிரியர் முன்னர் சில சந்தர்ப்பங்களிற் சுட்டிக்காட்ட முயன்முர்.[12] இலங்கைப் பிரதேசங்களுக்கென வரையப்பட்ட பொதுப்பார்வைப் படங்களை (Eynoptre Charts) அடிப்படையாகக் கொண்ட "ஒட்டப்படிவங்கள்" ஆனிவரைக்கும் தெ. மே. பருவக்காற்றின் சுற்ளேட்டம் 10,000 அடி ஆழத்தை அடைய மாட்டாது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. (ஆடியில் 13,000') இப்பொழுது (இலங்கை வளிமண்டலத் துறையின் வானிலையறிவிப்புப் பகுதி) மேற்கொண்டுள்ள அடிப்படையின்படி சடுதியான தோற்றத்தின் தாக்குதலிற்கு காற்றுகளின் நிலையான ஓட்டம் பத்தாயிரம் அடிக்கு அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும். ஆனுல் தெ. மேலைக் காற்றுகள் ஆனிக்கிடையில் பத்தாயிரம் அடியை அடைந்தாலும் அதன்பின் விரைவிற் கீழே இறங்குகின்றன. 1941—45 ஆண்டுவரை மேற்பரப்பில் உள்ள மேலைக் காற்றுகள் பற்றி விளக்கமாகத் தயாரிக்கப்பட்ட தரவுகள் (கொழும்பின் வெவ்வேறு மட்டங்களில்) காற்றுகளின் திசை, வேகம் என்பவற்றின் வேறுபாடு, கொழும்பிற்கும் திருகோணமலைக்குமிடையில் உள்ள பாரமானி அமுக்கம் சாய்வு விகிதம் என்பவற்றின் மாறுபாடு, சித்திரை ஆனிக்கிடையில் உள்ள மழைக்காலம் என்பவற்றைக் குறிப்பிடுகின்றன. இத்தரவைகள் தெ. மே. பருவக்காற்றின் சடுதியான பிறப்பிற்கு விளக்கம் தரக்கூடிய சில அம்சங்களைத் தெரிவிக்கின்றன. அவதானிப்புக் காலத்தில் தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தெரிவிப்பனவாக அமைவதால் காற்றுத்திசைமானியிலிருந்து (இவை பலவேளைகளிற் காற்றின் தாக்கத்தால் பழுதடைந்து விடுகின்றன) பெறப்பட்ட 1945-ம் ஆண்டுத் தரவு இங்கு தரப்படுகிறது.

---

11. R. Wickrematilake "Climate in the South East Quadrant of Ceylon, Malayan Journal Trop Geography. Vol VIII pp. 55.
12. Thambyahpillai op. Cit. (pp. 24-26).
13. தரவுகள் திரு. ஆர். டி.கிறல்ற்செம் (வளிமண்டலவியற்றுறையின் துணைத் தலைவர்) அவர்களால் அளிக்கப்பட்டது.

தெரிவுசெய்யப்பட்ட சில நிலையங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகள் - 1945 ஆம் ஆண்டு சித்திரை—ஆனிவரை காலநிலையில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள்.

மாறும் நிலைமைகளின் திகதிகள்

| நிலையம் | ஆடிமற்ற | நடுத்தர | ஆழம் |
|---|---|---|---|
| காற்றுத்திசையும் தூரமும் | | | |
| விட்டில் பாசஸ் | சித் 1–13, 26 | வை 3–6. 13–28 | ஆனி 6 |
| அம்பாந்தோட்டை | சித் 1–13, 26 | வை 13–22 | ஆனி 6 |
| யாழ்ப்பாணம் | சித் 1–4, 7–12 | வை 15–29 | ஆனி 8 |
| திருகோணமலை | — | வை 15–29 | ஆனி 6 |
| கொழும்பு 1000′+ | சித் 1–15 | சித் 24 | ஆனி 7 |
| 3000 அடி | — | சித் 24–26 | ஆனி 5 |
| 7000 அடி | — | — | ஆனி 5 |
| அமுக்கவீச்சு | | | |
| கொழும்பு—திருகோணமலை | சித் 1–13 | சித் 25<br>வை 5–8, 1519 | ஆனி 6–7 |

+பைலட் பலூன் அவதானிப்புகள் மாத்திரம் கிடைத்தன.

பங்குனி சித்திரையில் உள்ள உண்மையான மேற்காவுகைப் பருவத்திற்குப் பின் ஏற்படும் சில காலநிலைத் தனிமங்களின் பண்பின் அட்டவணை வானிலையில் தொடர்ச்சியாக ஏற்படும் மாற்றங்களைக் காட்டுவதுடன் இவற்றின் விளைவாகத் தெ. மே. பருவக்காற்றின் சடுதியான தோற்றம் ஏற்படுவதையும் காட்டும் 1941—51 வரையுள்ள தரவுகளும் 1945ன் நிலைமாற்றத்தை உறுதிப்படுத்துகின்றன. ஆழமற்ற, இடைத்தர என்னும் இரு நிலைகளிலும். நிலவும் மத்திய கோட்டு மேலைக் காற்றுக்களை ஒத்து அமைகின்றன. சித்திரையிலும் வைகாசி ஆரம்பத்திலும் இந்து சமுத்திரத்திலுள்ள (இலங்கையையும் இந்தியாவையும் சூழ்ந்துள்ள) சுற்றோட்டம் உள்ளூர் சார்ந்த நிகழ்ச்சியாக அமைவதுடன் முழுச் சுற்றுடலையும் பாதிப்பதில்லை.[14] இலங்கைப் பிரதேசங்களுக்கெனத் தயாரிக்கப்பட்ட பொதுப்பார்வைப் படம் வைகாசி இறுதிவரைக்கும் உண்மையான பருவப் பெயர்ச்சிக் காற்றுச் சுற்றோட்டம் ஒன்று நிலைநாட்டப்படாதிருப்பதையும், அதுவரையும் உள்ள பருவக்காற்றின் ஆழம் உறுதியற்றிருப்பதையும் காட்டுகிறது. எவ்வாறெனினும், இலங்கையின் பருவக்காற்றின் 'சடுதியான பிறப்பை' விளக்க வந்த ஜயமகா 'ஒடுங்கல் வலயத்தின்' இயக்கத்தை அறிமுகப்படுத்தி, ''இவ்வொடுங்

14. Crowe, op. cit.,

கல் வலயத்தில் ஏற்படும் அலை அல்லது 'குழப்பங்கள்' வானிலையிற் திடீர் மாற்றத்தை ஏற்படுத்தி, அதன் வாயிலாகத் தெ. மே. பருவக்காற்றை ஆரம்பித்து வைக்கிறது'' என அபிப்பிராயப்படுகிறார்[15]. எனவே வைகாசி யிறுதியில் அல்லது ஆனித் தொடக்கத்தில் இத்தகை அலைகள் வட ஒடுங்கல் வலயத்தில் ஏற்பட்டு தெ மே. பருவக்காற்றை ஆரம்பித்து வைக்கின்றன. இவ்வாறு வட ஒடுங்கல் வலையத்துடன் அலைகள் மோதத் தொடங்கப் பருவக்காற்றின் சடுதியான தோற்றம் ஏற்பட்டதற்குச் சான்றாக ஜயமகா 1942 வைகாசி 28உ யையும் 1951 வைகாசி 30உ யையும் எடுத்துக்காட்டியுள்ளார். ஆனால் 1941, 1950-ல் இம் மோதல் காணப்படாதொழிய, பருவக்காற்று முக்கியமற்ற ஒன்றாக நிகழ்ந்த தென்றும் குறிப்பிடுகின்றார். இதன் தன்மைகளைப் பின்னர் புதிய விளக்கத்தின் அடிப்படையில் ஆராய்வோம்.

## ஆ. புதிய விளக்கம் (New Perspective)

அயனப்பிரதேசத்தில் 2-ம் உலக யுத்தத்தின் இயக்கத்துக்குரிய நெருக்கடி நிலைமைகள் மிகவும் நெருங்கியமைந்த வானிலை அவதானிப்பு நிலையங்களையும், கதிர்வீச்சு உபகரணங்களின் பயன்பாட்டையும் குறிப்பாக மேல்வளி மண்டலத்திற்குரிய உபகரணங்களின் பயன்பாட்டையும் மிகவும் வேண்டி நின்றது. இதன் விளைவாகக் கிடைத்திராத தரவுகள் பெருந்தொகையாக வந்து சேர, அயனப் பிரதேச வளிமண்டலவியற்றுறை திடீரென்று குறிப்பிடத்தக்கதொரு எழுச்சியை அடைந்ததோடு மேலும் ஆராய்ச்சி செய்தற்கான தூண்டு விசையையும் பெற்றது. உலக யுத்தம் முடிந்த பின்னர்தான், அதாவது 1945-ன் பின்னரே, யுத்தகால அவதானிப்புகளின் தரவுகள் தந்த விளைவுகள் அயனப்பிரதேசத்தின் ஆய்வுகளோடு இணைக்கப்பட்டு புதிய கருத்துக்கள் தோன்றின மிகப் பழங் காலத்து அயனப்பிரதேச வானிலையியல் 'ஒழுங்கு' 1939-ம் ஆண்டு வரை புதிய கருத்துக்களாற் பயன் பெறவில்லை. பின்னர் வானிலையியலில் புதிய கண்டுபிடிப்புக்களால் முக்கிய கவனம் எடுத்ததுடன், இதன் ஒழுங்கிலும் புதிய கருத்துக்கள் இடம்பெறலாயின. எனவே பரம்பரை பரம்பரையாக அறியப்பட்டு வந்த தெ. மே. பருவக்காற்றின் சடுதியான

---

15. G. S. Jayamaha, ''A Synoptic Analysis of Ceylon Weather, Weether Vol. xi, 1 (Jany., 1956), pp. 10—15.

தோற்றம் இப்பொழுது புதுக்கோணத்தில் இருந்து நோக்கப்பட வேண்டி ஏற்பட்டது. 17-ஆம் நூற்றுண்டில் ஹால்லி என்பார் வெளியிட்ட கருத்திற்கு இப்பொழுதுதான் முதன்முறையாக எதிர்ப்பு எழுந்தது.

இதுவரை காலமும் தெ. மே. பருவக் காற்றின் சடுதியான பிறப்பிற்கு, 'தார் தாழ்ச்சி' ஆழமாக்கப்படலே காரணம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே இக்கருத்துக்கள் பற்றிய ஆய்வுகள் அனைத்தும் வளிமண்டல மேற்பரப்பின் பிரிவுகளோடு தொடர்புடையனவாய் அமைந்தன. வாக்கர்[16] பருவக் காற்றின் திடீர்த் தோற்றத்தையும், மழையுடன் கூடிவரும் அதன் சடுதியான பிறப்பையும் இந்து பசுபிக் பிரதேசத்து அமுக்க வேறுபாடுகளுடன் தொடர்புபடுத்த முயன்றுர். பின்னர் தென் மேற் பருவக் காற்றை, தென் அமெரிக்காவிற்கும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் இடையில் அமைந்த மாறுபட்ட மேற் பரப்பு அமுக்கப் பரம்பலோடு தொடர்புபடுத்திக் காட்ட அவரால் முடிந்தது. அவர் இதற்கு "ஊசலாடும் தென்பிரதேசம்' (Southern Osciliation) எனப் பெயரிட்டார். வேறு ஆராய்ச்சி யாளர்கள் 'சடுதியான பிறப்பை' இந்து சமுத்திரத்தின் செறிவான உப அயன உயரமுக்க வலயத்தின் செறிவோடு தொடர்பு படுத்த முனைந்தனர். வேறுபல வகைகள் கையாளப்பட்டன வேனும் அவற்றுள் மடகஸ்கார் அமுக்க வேறுபாடுகள், பருவக் காற்றிற்கு முன்பு மொரிசியஸ், இசெல்சு முதலிய பகுதிகளின் மழைக்காலம் என்பவை குறிப்பிடத்தக்கன. இவை எல்லாவற்றிலும் மேல் வளிமண்டலம் கருத்திற்கெடுக்கப்படவில்லை. இவை யெல்லாவற்றிற்கும் மேலாக, ஆசிய உட்பகுதியில் இருந்து வீசும் காற்றுகளுக்குத் தடையாய் அமைவதோடு தெற்கிருந்து வீசம் மேற் பரப்பிற்குரிய காற்றுகளின் எல்லையாகவும் இமயத் திணிவு அமைந்ததென ஏற்றுக்கொள்ளப்பட் டிருந்தமையால், இந்தியச் சூழலுக்கு வெளியமைந்த வடவரைக் கோளத்தில் செயற்படும் வளிமண்டலவியற் பொறி முறைகளோடு, இந்திய பருவக் காற்றுகள் தொடர்பற்றன என்று இயல்பாகவே கருதப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மேல் வளிக்குத் தொடர்பிருக்கவில்லை என்றே கருதப்பட்டது.

---

16. G. G. Walker, "Correlations in Seasonal Variations of Climate, "Ind. Met. Mem., Vol. xx, 6 (1906–1910), pp. 117–124.

1934-ல் நாகாபர்பட் (26182') என்னும் மலையில் ஏறிச் சென்ற முற்றான நாசத்தை அனுபவித்தனர். வென் (Wien) என்னும் வளிமண்டலவிய லறிஞர் தெ. மே. பருவக் காற்று (வழக்கமாய்த் தோன்றும் காலத்திற்கு) முன்னே தோன்றிய தற்குக் காரணமாய் அமைந்த வழக்கிற்கு முரணான வளிமண் டலவியற் சூழ்நிலைகளை விபரித்தார் ரோட் வால்ட் என்பார்[17] இந்தியா, சைபீரியாவிற்குரிய 6 கி.மீ. காற்றோட்டப் படங்கள் காட்டுகிறபடி (இக்காலத்திற்குரிய) சுற்றோட்ட அமைப்புகளின் அடிப்படைகளிற் றமது கண்டுபிடிப்புகளைச் செய்து, நாசம் விளை விக்கும் பருவக் காற்று முன் தோன்றுதவற்கும் மேல் வளியோட்டத்திற்கும் தொடர்பிருக்கலாம் என்று தெரிவித்தார். உலகம் முழுவதுமுள்ள வளிச்சுற்றோட்டத்தை ஆராய்ந்தவர்களுட் குறிப்பாக ரியெல்[18] கிரஸ்மன்[19] என்பவர்கள் மேற்பகுதியில் பெரிய அளவில் உயர்ந்த அகலக் கோடு தாழ் அகலக் கோடு களுக்கிடையில் பரிமாறல்கள் ஏற்படுகின்றன என்பதை விளக்கி யுள்ளனர். இப்படியான மேல் வளிச்சுற்றோட்டங்களுக்கிடையி லுள்ள பரஸ்பரத் தொடர்புகள் அயனப் பிரதேச வானிலை யைப் பாதிக்கின்றன என்பது தெளிவாகக் காட்டப்பட்டு மிருக்கிறது.

## வளிமண்டலப் பொதுச் சுற்றோட்டம்

### புதிய விளக்கம்

முக்கலக் கருதுகோளோடு இயைந்தது என ஏற்றுக்கொள் ளப்பட்ட மேலெழும் கீழைக் காற்றுகளை ஈடுசெய்ய வேண்டிக் காற்றுகள் திரும்பத் திரும்ப வருகின்றன என்னும் கருத்தை யுத்தத்தின் பின் வெளியிடப்பட்ட கண்டுபிடிப்புகள் உறுதிப் படுத்தாது, கீழ்க் காற்றுகள் மிக ஆழமான சுற்றோட்டமாகப் படைமண்டலத்தையும் அடைகின்றன எனக் குறித்தன. (படம் 6,7) இத்துடன் மேலுள்ள மேலைக் காற்றுகளின் சுற்றோட்டம் பற்றிய கருதுகோளிற்கு முனைவுச் சுற்றுச் சுழிப்புச் சுற்றோட்டம் (C. V. C.)[20] எனப் பெயரிடப்பட்டது. அக்கருது

17. R. Rodewald Meteor Zeit Vol 53 (1936) pp 182—185
18. H Riehl 'Subtropical Flow Patterns in Summer 'Dept Met Uni Chicago Misc Rept No 22 (1947) pp 64
19. G. C. Gressman Studies in upper air Conditions in Low Latituds Pt II ; Relation between high and low latitude Circulations, "Dept., Met., Univ. Chicago, Misc. Rept., No. 24, Pt. II (1948), pp. 68—100.
20. H. C. Willett, Descriptive Meteorology (New York: Academic Press. 1944), pp. 141—149.

கோள் முக்கலக் கருதுகோளின் மாற்ருக அமைந்தது என்பதும் ஏற்றுக்கொள்ளப் பட்டது. வட அரைக்கோளத்தில் (படம் 2,3) முதலில் இச்சுற்றேட்டம் கவனிக்கத் தகுந்த முறையில் தெளிவான அமுக்க வெப்பச் சாய்வைக் கொண்டிருப்பதை முனைவு, மத்திய கோட்டெல்லைகளில் தெளிவாக வேறுபடுத்திக் கண்டு பிடிக்கக் கூடியதாக இருக்கிறது. இவ் வளிச்சுற்றேட்டத்தினுள் (மணியொன்றிற்குப் புவிவிசைத் திருப்ப வேகம் 100 மைலுக்கு மேற்பட்ட தொரு) செறிவான, பலம் வாய்ந்த இன்னுமொரு காற்றேட்டம் காணப்படும். அதனை கூர்நுனிச் சுற்றேட்டம் (Jet Stream) என வழங்குவர். (Fig. 2--3) முனைவுச் சுற்றுச் சுழிப்புச் சுற்றேட்டத்தின் அவதானிப்புகளின்படி இது குளிர் காலத்தில்(படம் 2) மத்திய கோட்டையும் கோடையில் முனைவை நோக்கியும் (படம் 3) பெயருதல் புலப்படுகின்றது. ஆனல் இவை மிகவும் குறுகிய காலத்தில் அசாதாரண வேகத்துடன் முனைவுக்கும் மத்திய கோட்டிற்கும் மாறி மாறிப் பெயருகின்றன. தென் அரைக் கோளத்திலும் இதனை ஒத்த காற்றுச் சுற்றேட்டம் திகழுவதாக அண்மைய ஆய்வுகள் நிறுவின[21]. இந்த மு. சு. சு. இரு அரைக் கோளங்களிலும் 35--55° அகலக் கோடுகளை எல்லையாகக் கொண்டன.


## மேல்வளி ஓட்டம்: இந்தியப்பிரதேசம்

8 கி. மீ. மட்டத்தில் பருவத்திற்குரிய காற்றேட்ட ஒழுங்குகளைக் குறிக்கும் படங்கள், ''இமயத்தைக் கடந்து காற்றுப் பரிமாறல் இந்தியாவிற்கும் மத்தியாசியாவிற்குமிடையே நிகழ்கின்றன'' என்பதைப் புலப்படுத்தி நிற்கும் பொது விபரங்களை அடக்கிய ஒரு படம் (4) மேல்வரும் முக்கிய தன்மைகளைக் காட்டி நிற்கும்.

அ. மாரி :

1. மேலைக்காற்று வலயத்தின் பெரும்பாகம் இமயத்திற்குத் தெற்காக வீசுகிறது.
2. உயரத்தின் காரணமாக காற்றுக்களின் இயற்கையான பாதைகள் மலையியற் சமவுயரத்தோடு பொருந்துவனவாய் அமைந்தன.
3. இச்சமவுயரக் கோடுகளின் எல்லைக்குள் 85°கி நெடுங் கோட்டளவில் ஓர் மேலமை தாழி காணப்படுகின்றது.

21. H. H. Lamb. ''The Southern Westerlies : A Preliminary survey : Main Characteristics and Apparent Associations, ''Quart. J. R. Met. S., Vol. 85 (Jany. 1959), pp 1—23.




படம் : 4.

இந்தியப் பகுதிகளில் 8 K. M. நெற்றுகளில் குளிர்கால கோடை சுற்றோட்டப் படிவம்.

ஆ. கோடை :

1. மேலுள்ள மேலைக் காற்றுகள் வடக்கு நோக்கிப் பின்வாங்கி விட்டன.

2. மேலமைந்த காற்றுத்தாழி குறைந்தது 10° யாவது மேற்கே பெயர்ந்து இப்பொழுது 75°கி நெடுங்கோட்டில் அமைகிறது.

3. உப அயன மண்டல உயரமுக்கத் தொடர் 35°வ அளவிற் காணப்பட வடமேற்கிந்தியாவின் மேல் ''தாழமுக்கக் கழுத்து'' காணப்படுகிறது.

4. இந்தியப் பெருநிலத்தின் பெரும்பகுதியில் ஒரு ஆழமான கீழ்க்காற்று (வ. கி. வியாபாரக் காற்று) பரந்திருக்கும்.

இரு பருவங்களுக்குமுரிய இவ்வோட்டப் படங்கள், மேலே உள்ள காற்றுத் தாழ்சியானது 85°கி நெடுங்கோட்டிலிருந்து 75°கி நெடுங்கோட்டளவில் இடம் பெயர்தலே முக்கிய அம்ச மாகக் காட்டுகிறது. அத்துடன் பர்மா எப்பொழுதும் (இரு காலங்களிலும்) இத் தாழியின் கிழக்காகவும் இந்தியப் பெரு நிலம் குளிர்காலத்தில் இதற்கு மேற்காகவும் கோடையிற்

கிழக்காகவும் அமைந்து காணப்படுதல் அவதானத்திற்குரியது. மேல்வளி சம்பந்தமாக இந்தியாவினதும் பர்மாவினதும் இட அமைப்பானது பர்மாவின் மேலாகத் தென்மேற் பருவக் காற்று அமைதியான முறையில் தோன்ற, இந்தியாவின் மேல் முன்னறிவிப்பின்றி சடுதியான நாடகத் தன்மையுடன் தோன்றுவதற்கும் மேல் வளிமண்டலத்தைப் பொறுத்த அளவில் இந்தியாவினதும் பர்மாவினதும் நிலையங்கள் ஏதாவது செய்திகளைத் தருவனவாக அமையக் கூடுமா? அத்துடன் உதாரணமாக மேல்வளியோட்ட அமைப்பில் ஏற்படும் மாறுதல்கள், மேல்வளித்தாழி 85° கில் அமையுமட்டும் கீழ்வளிச் சுற்றோட்டத்தின் மேற் பொருந்திய தன்மைதான் இந் தியாவில் சடுதியான தோற்றத்தினைப் பின் தங்கச் செய்வதோடு பர்மாவில் அதன் தோற்றத்தை விரைவுபடுத்துகிறது என்று கொள்ள வேண்டுமா? அத்துடன் இத்தாழியானது 75°கி நெடுங் கோட்டளவிற்குப் பெயருவதனால், தென் காற்றுறுப்புக்கள், இந்திய, பர்மிய பிரதேசத்தின் மேலே மிக உயர் மட்டத்திற் காணப்படுகின்றன எனவே இவை பருவக்காற்றுச் சுற்றோட்டம் முழுவதற்கும் புத்துணர்ச்சி அளிப்பனவாய் அமையும் எனவே இந்நிலையில், மேல்வளித் தாழியின் பெயர்ச்சி இந்தியாவிலும் பர்மாவிலும் ஏற்படும் 'சடுதியான பிறப்பின்' பண்புகளின் வேறுபாடுகளுக்கு ஒருவேளை விளக்கம் தரலாம் என்று இங்கு குறிப்பிடுவது வேண்டப்படாத விடயமன்று. எவ்வாறெனினும் 'தாழி' சடுதியாகப் பெயருகின்றதெனினும், அப்பெயர்ச்சி சடுதியான பிறப்புடன் ஒருங்கே நிகழுகிறது என்பதும் நிறுவப்பட வேண்டியிருக்கிறது.


1946-ல் தெ. மே. பருவக் காற்றின் "சடுதியான பிறப்பு" இந்நிலையில், இது சம்பந்தமாக யின் ([22]) என்பவர் திறமையாகவும் நன்கு விரிவாகவும் செய்த ஆராய்ச்சிகளின் கண்டு பிடிப்புகளைக் கவனிப்பிற்கு எடுத்தல் இன்றியமையாதது. இதில், இந்தியா. பர்மா மீது வைகாசி ஆனி மாதங்களில் (1946) நிகழ்ந்த வானிலையியல் விருத்திகளுக்கும், வட அரைக் கோளம் முழுவதிலும் சைபீரியாவிலும் நிகழும் மேல் வளிச் சுற்றோட்டத்தின் தன்மைகளுக்கு மிடையேயுள்ள தொடர்பினை எடுத்துக் காட்டமுயன்றார். யின்னின் கண்டு பிடிப்புகள் அமெரிக்க விமானப் படையினரால் தயாரிக்கப்பட்ட நாளாந்த 500 மில்லிபார் படங்களை

---

22, Yin, M. "A Synoptic—Aerologic Study of the Summer Monsoon over India and Burma," Jour. Met., Vol. 6 (Dec., 1949), pp 393—400.

அடிப்படையாகக் கொண்டன. இக்கண்டு பிடிப்புகள் படம் மூலம் எடுத்துக் காட்டப்பட்டது இதன் பொதுவான தன்மையை விளக்கும் படத்தை (5) இங்கு காணலாம்

20–30 வ அகலக் கோடுகளுக்கும் 40° கி–130° கி நெடுங் கோடுகளுக்கு மிடையேயுள்ள பகுதியில் மேல் வளித்தாழி உய ரமுக்கத் தொடர் என்பவற்றின் பெயர்ச்சி வைகாசி 1உ தொட்டு 30உ வரை ஐந்து நாட்களிடைவெளியில் படம் (5 A) காட்டப் பட்டுள்ளது. கீழ் வரும் அம்சங்கள் கவனிக்கத்தக்கன.




படம் 5

நெடுங்கோட்டு நிலையில் தாழி முகடு என்பவையில் வட வரைக்கோளத்திற் காணப்படும் ஏற்றத் தாழ்ச்சிகள் (A) 20°வ—30°வ (B) 40°வ—60வ (C) ம. 3 வ கூர் நுனி ஓட்டம் என்பவற்றின் அகலக்கோட்டுப் பெயர்ச்சி வைகாசி 1-ந் திகதி தொட்டு ஆடி 4 வரை (1946)

வைகாசி 1–21உ வரை: 90° கி நெடுங் கோட்டளவில் மேற்காற்றுத் தாழியானது நிலைத்திருக்கிறது. உயரமுக்கத் தொடர் தாழிக்கு மேற்கே 90-95° கி. நெடுங்கோட்டில் இடம் பெறும்.

வைகாசி 22-25உ–இந்நிலையான அமைப்பு நிலைகுலைய தாழி யானது பிளந்து ஒருகிளை மேற்கே அசைந்து பூமத்திய தாழி யாகச் (மத்திய கோட்டு ஒடுங்கல் வலயத்திற்கு) செல்ல வடக்கு நோக்கி முன்னேறும் மற்றைய கிளை (படம் 5 C) பருவக்காற் றின் சடுதியான பிறப்பாகச் செல்லும்.

வைகாசி 26–30வ. மீண்டும் ஒரு முறை தாழி 90°கி நெடுங் கோட்டின் மேலே அமைவதனல் பருவக் காற்று தடைப்படுகிறது.

வைகாசி 31–ஆனி 6 வரை–தாழி தெளிவாகவும் திட்ட வட்டமாகவும் மேற்கே 80° கி நெடுங்கோடுவரை பெயர்ந்துள்ளது 6·3 வலயத்தின் வடமுனையானது 23° வ அளவில் (படம் 5இ) நிலை நிறுத்தப்படுகிறது.

ஆனி 7— தாழி தொடர்ந்தும் 80° கி நெடுங்கோட்டில் நிலைத்து நிற்கிறது.

இவற்றுடன் கவனிக்கப் பட்டது யாதெனில், மேல் வளித் தாழியின் இடமாற்றம் பருவக் காற்றின் முன்னேற்ற (சடுதி யான தோற்ற)த்துடன் ஒருங்கே நிகழுகிறது. அத்துடன் மத்திய ஒடுங்கல் வலயத்தின் முன்பக்க முனைவு தெற்கே பின்வாங்கித் தடைப்படுவது தாழியின் கிழக்கு (தற்காலிக) நகர்வுடன் ஒரே நேரத்தில் நிகழுகிறது. அத்துடன் தாழியின் மேற்குப்பக்க நகர்வு தொடர்பற் றமைவதும் அவதானிக்கப்பட்டது. பருவக்காற்றே தாழிகளின் இடப் பெயர்ச்சிக்குக் காரணமாய் அமைந்ததெனக் கூறப்படலாமேனும், இத்தகைய ஒரு கருது கோளால் இந்தியா பர்மாவின் மேற் காணப்படும் விளைவுகள் வேறு படுதற்கு விளக்கம் தர முடியாது. எனவே இப்பட ஆய்வு ''இந்தியச் சூழலிற்கு வெளியே காணப்படும் வளியானது தென் மேற்குப் பருவக் காற்றிற்குரியது-விருத்தியைப் பாதிக்கின்றது என்ற ரோட்வால் டினது[23] கருத்தை ஆதரிக்கிறதா ?

1946-ம் ஆண்டு வைகாசி ஆனி மாதங்களுக்கு, எஞ்சிய வடவரைக் கோளத்திற் (40°வ—60°வ) கென வரையப்பட்ட 500 மில்லிபார் படம் (5 B). இதேகாலத்திற் குறைந்த அகலக் கோடுகளிற்கென (5 A) வெளியிடப்பட்ட தன்மைகளுடன் தொடர்பு படுத்தக்கூடிய அம்சங்களைக் காட்டுகிறது. கீழ்வரும் அம்சங்கள் கவனிக்கப்படத்தக்கன.

வைகாசி 1—20 குறிப்பிடத்தக்க உய ரமுக்கத் தொடர் மத்தியாசியாவின் மேலே (50° கி) தோன்றுகிறது. இது தாழி களினுல் சூழப்பட்டு அமைந்தது.

வைகாசி 21—25 மேற்கே பெயர்ந்த தாழியானது இப் பொழுது நிலைகுலைகிறது. தெ. மே. பருவக்காற்றின் சடுதியான பிறப்பு.

---

23. Rodewald, op. cit.

வைகாசி 26—30. 5அ வில் குறிப்பிட்டுள்ளபடி குறுக்கீடு ஒன்று நிகழ்கிறது.

வைகாசி 31-ல் தாழியானது நிரந்தரமாக 75—80°கி நெடுங்கோட்டிற்குப் பெயர்ந்து, இந்நிலையில் ஆனிமாத கால முழுவதும் நிலைத்து நிற்கிறது.

ஆகவே வடகோளம் முழுவதும் தாழி ஒழுங்கு விஷயமாக நிகழ்கின்றது என்பதும், திகதிகளும் இந்திய, பர்மா மீது (5 A) காட்டப்பட்ட தாழி இடமாற்றங்களுக்குரிய நாட்களுடன் ஒன்றுபடுகின்றன என்பதும் இதன் வாயிலாக அறியப்படுகிறது. ஆனி ஆரம்பத்தில் நிலையான வடதென் தாழி ஒழுங்கு (குறைந்த அகலக் கோடுகளில் இருப்பது) மத்திய அகலக் கோடுகளுக்குப் பரந்திருத்தல் காணப்பட்டது ஆகவே வைகாசி ஆனி மாதங்களில் மேல்வளித் தாழியைப் பொறுத்த அளவில் குறைந்தது 20°வ கோட்டிலிருந்து 60°வ கோடுவரையில் தெளிவான மாற்றம் ஏற்படுகின்ற தென்பதில் ஐயமில்லை.

மேற் கூறியவற்றைக் கருத்திற்கெடுக்கும்போது மத்திய கோட்டுத் தாழி அல்லது 6· 3. வலயத்தின் வடக்கு நோக்கிய பெயர்ச்சியும் கருத்திற்கெடுக்கப்பட்டது. தாழியின் இடமாற்றங்கள் 6. 3. வ. நகர்வு, தெ. மே. பருவக்காற்றின் சடுதியான பிறப்பு ஆகியவற்றிடையே யுள்ள தொடர்புகளை வெளிப்படுத்துவனவாக—யின்னின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையாக அமைந்த படம் (5 C) ஒன்று இங்கு தரப்பட்டுள்ளது. அதிற் பின்வரும் அம்சங்கள் தெளிவாக இருக்கின்றன.

வைகாசி 1உ வைகாசி மாத ஆரம்பத்தில் வலுவான மேலைக் காற்றுப் பிரதேசம் (கூர்நுனிச் சுற்றோட்டப்பகுதி) 30° வ அளவில் இமயத்திற்குத் தெற்கே இடம் பெறுகின்றது.

வைகாசி 6உ—ஆனி 5உ வரை—கூர்நுனிச் சுற்றோட்டம் படிப் படியாக 40'வ அகலக்கோடுவரை பெயர்ந்திருக்கிறது. வைகாசி 21 முதல் 26 வரை இந்தியாவின் மேலுள்ள 6. 3. வலையத்தின் அகலக்கோடு நிலையில் திடீரென 10°வ கோட்டிலிருந்து 15°வ வரை வடக்குநோக்கிப் ''பாயும்'' தன்மையைக் காட்டும். இதன் பின் குறுக்கீடு ஒன்று நிகழ தற்காலிகமாக 6. 3. வ தெற்கே பின்வாங்கினாலும் ஆனி 5உ அளவில் 23°வ கோட்டில் நிலைபெற வேண்டி, வைகாசி 31-ன் பின்னர் இரண்டாவது முறையாக வடக்கு நோக்கிப் பாய்கிறது.

ஆனி 6—9வ. வரை—கூர்நுனிச் சுற்றோட்டம் விரைவாக உருக்குலேகிறது. 6. 3. வ தற்காலிகமாகப் பின் வாங்குகிறது. ஆர்டிக்கிலிருந்து (படத்தில் வைகாசி நடுவில் தோன்றும்) புதிய கூர்நுனிச் சுற்றோட்டம் தோன்றித் தெற்காகப் படிப்படியாக நகரும். ஆகவே இதனுல் வைகாசியின் பின் னரைப் பகுதியில் இரு கூர்நுனிச் சுற்றோட்டங்கள் இருப்பது புலப்படும். அதாவது மேல்மேலே வியாபாரக் காற்றின் இரு உச்சநிலே, ஆனியாரம்பத்தில் வட கூர்நுனிச் சுற்றோட்டம் மிகவும் வலுப்பெற, தென் கூர்நுனிச் சுற்றோட்டம் மறைந்துவிடும். ஆனி 10வ— வட கூர்நுனிச் சுற்றோட்டம் தொடர்ந்தும் இமயத்திற்கு வடக்கே நிலேத்து நிற்க 6. 3. வலயமும் அதன் வடநிலேயத்தில் நிலேத்திருக்கும்.

மு. சு. சு. சுற்றோட்டத்தினதும் கூர்நுனியோட்டத்தினதும் வடக்கு நோக்கிய பெயர்ச்சிகளிடையே தெளிவான தொடர்புகள் காணப்படுகின்றன என்பதும் இந்தியப் பிரதேசத்தில் இத் தொடர்ச்சியான நிகழ்ச்சிகள் 6. 3. வலயத்தின் அல்லது குறிப்பாக 6. 3. வலயத்தினது வடக்கு நோக்கிய பாய்தலுக்குத் துணைக்கருவியாக அமைகின்றன என்பதும் இதன் வாயிலாக எடுத்துக் காட்டப்பட்டன.

### முக்கிய அம்சங்கள்—The Major Features :

இமாலயத் திணிவிற்குத் தெற்காகவும் வடக்காகவும் நிகழும் மேல் மேலேக் காற்றுகளினதும் (மு. சு. சு.) கூர்நுனிச் சுற்றோட்டத்தினதும் இடமாற்றம், பருவக்காற்றின் தோற்றத்தில் அதி முக்கிய இடம் வகிக்கின்றன போலின்[24] கொள்கையளவில் நிகழ்த்திய ஆய்வு, இடவிளக்கவியல் ஏற்படுத்திய கூர்நுனி ஓட்டத்தின் இடமாற்றத்திற்குத் தக்க விளக்கத்தை அளித்துள்ளது. அத்துடன் குளிர்காலத்தில் இமயத்திற்குத் தெற்காக உள்ள அகலக் கோடுகளில் உப அயன கூர்நுனி ஓட்டம் இருப்பதாகவும் தற்பொழுது அறியப்படுகிறது. மிக அண்மையில் இந்தியாவின் குளிர்பருவகால நிலேயின் பொறிமுறையை பிரித்தாய்ந்து இராமேஜ்[25] என்பவர் கூர்நுனி ஓட்டமானது உண்மை

---


24. B. Bolin, "On the Influence of the Earth's Orography on the General Character of the Westerlies. Tellus. Vol. 2 (1950), pp. 82—85.
25. C. S. Ramage, "Relationshis of the General Circulation to Normal Weather over Southern Asia .....during the Cool Season" **Jour. Met.**, Vol. 9 (1952), pp. 403—408.

யில் முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டினர். சௌத்திரியின்[26] கருத்துப்படி முக்கிய கூர்நுனிச் சுற்றோட்டமானது 31°வ காணப்பட இரண்டாவது உச்சநிலை 40°வ காணப்படுகிறது. கூர்நுனியின் இவ்விரு பிரிவுகளும் இமயத்தினால் ஏற்படுத்தப் பட்டவையாகும். மிக அண்மைய ஆய்வுகள்[27] தை—மாசியின் குறுக்குப் பக்கப் பார்வையின் அடிப்படையில் எழுந்தவை, (70'கி—100°கி என்பவற்றின் சராசரி) கூர்நுனியானது 27°வ அகலக்கோட்டை மையமாகக் கொண்டிருக்கின்றது எனச் கூறும். கோடையில் இக் கூர்நுனியானது திட்டவட்டமாக இமயத்தின் வடக்கே நிலைத்து நிற்கிறது.

ம. ஒ. வ. திடீரென்று வடக்கு நோக்கிப் பாய்தல் பருவக் காற்றின் சடுதியான பிறப்பைப் பொறுத்த அளவில் முக்கிய அம்சமாக அமைகிறது என்பதும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பாதிப்பிற்குட்பட்ட வட முனையானது வ. ஒ. வலயத்தைப் பிரதிபலிப்பதாக அமைகிறது. இதன் வடக்கு நோக்கிய செலவு மாசிமாதமளவில் நிகழுகிறது. இலங்கை மீது வ. ஒ. வலயமானது சித்திரை வைகாசி[28] மாதங்களிற் காணப்படுகிறது என்பதும் வானிலைச் சீர்கேட்டுத் தன்மைகளுடன் சேர்ந்தமைகிறதென்பதும் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. இலங்கைக்குரிய பொதுப்பார்வைப் படிப்புகள் தெ. மே. பருவக்காற்றின் தனித்துவம் வாய்ந்த சடுதியான பிறப்பானது வட ஒடுங்கல் வலயத்தை (N. C 2) ஒட்டி ஒரு அலை ஏற்படும்போது ஏற்படுகிறது எனக் கூறும்.[29] வட ஒடுங்கல் வலயத்தின் கரைகள் தென்காற்றுச் சேர்க்கைகளுக்கு வைகாசி தொடக்கம் எல்லையாக அமைகிறது. குளிர்காலத்திற்கும் (படம் 6) கோடைக்கும் (படம் 7) உரிய பொதுப்படையான படங்கள் குளிர்காலத்தில் ஆழ்ந்த கீழைக் காற்றுகளும் கோடையில் மேல் மேலைக் காற்றுகளும் வலுப்பெற்று நன்கு தெளிவாகக் காணப்படுவதைக் காட்டுகின்றன. குளிர்காலத்தில் கீழைக்காற்றுகளுக்கும் மேலைச்

---

26. A. M. Chaudry, "On the Vertical Distribution of Wind and Temperature over Indo-Pakistan along the Meridian 70°E in winter, "Tellus Vol. 2 (1950), pp. 56—57.
27. P. Koteswaran, C. R. V. Raman, and S. Parthasarathy, "Thee Mean Jet Stream over India and Burma in Winter" Jour. Met., Vol. 5 (Dee., 1949), pp. 393—400.
28. G. Thambyahpillay, "Secular Fluctuations in the Rainfall Climate of Colombo," Univ. Cey. Rev., Vol. xvi. Nos. 3 and 4 (July Oct., 1958), pp. 95—96.
29. **Jayamaha, op. cit.,**




படம் 6

வட குளிர்காலத்தில் வடகீழ் பருவக்காற்றுக் காலத்தில் மேற்பரப்பு எல்லைகளும் மேல் மேலைக்காற்றுகள் கீழைக் காற்றுகள் என்பவற்றைக் காட்டும் இந்தியப் பிரதேசத்தின் காற்றுகளின் பிரதேசத்திற்குரிய சேர்க்கைகளும்

காற்றுகளுக்குமிடையே யுள்ள எல்லையானது தெற்கே மத்திய கோடுவரை அமைந்துள்ளது. இந்தியாவைச் சூழ்ந்துள்ள பகுதிகளில் மொத்த வளிமண்டலத்தில் தெ. மே. பருவக் காற்றின் சுற்றோட்டம் அதிக ஆழமற்றனவாக (ஏறத்தாழ ச. கி. மீ. அளவிற்) காணப்படும். இலங்கையில் உண்மையான பருவக் காற்றுச் சுற்றோட்டம் வைகாசி இறுதி அல்லது ஆனி முற்பகுதிக்கு முன் நிகழ்வதில்லை என்று முன்னர் எடுத்துக்காட்டப் பட்டது. ஆனிவரையிற்றான் பருவக்காற்று அதற்குத் தேவையான ஆழத்தைப் பெறுகிறது. ஆழம் 10,000 அடியை அடைந்ததும் ஏற்றத் தாழ்ச்சிகள் ஏற்பட்டு பின்னர் ஆழம் அதற்குக் குறைவாக மாறுதலை இலங்கையிற் கவனித்தனர். எனவே இப்பின்வாங்கும் தன்மைகளுடன் கூர்நுனிச் சுற்றோட்டம் இமாலயத்திற்குத் தெற்காகத் தன்னிலையை மீண்டும் பெறும் பொழுது, ம. ஒ. வ. அல்லது வ. ஒ. வலயத்தின் அகலக்கோட்டு நிலையில் ஏற்படும் குறுக்கீடுகள் என்ற அடிப்படையில் இவ் வீழ்ச்சிகளுக்கு விளக்கம் தரமுடியுமா? கூர்நுனியினால் வெளியார்க்கப்பட்ட இடத்தை நிரப்புதற்காக ம. ஒ. வ. வடக்கு நோக்கி விரைவாகப் பாய்கிறது என்று கருதலாமா? இத்தகைய சூழ்நிலைகளோடு பருவக்காற்று தோன்றொழிவதைத் தொடர்பு படுத்த முடியுமா?

இறுவாய் ;

மேற்காணப்பட்ட ஆய்வுகள், தெ. மே. ப. காற்று "செயற்படுத்தற்கான வழிக்கு" ஒரு தீர்வுகாண முயலும்போது கருத்திற் கெடுக்கப்படவேண்டிய சில முக்கியம் வாய்ந்த வளிமண்டலவியலுக்குரிய சூழ்நிலைகள் எவை என்பதைத் தெரிவிக்கப் பயன் பட்டன. இது சம்பந்தப்பட்ட மூன்று சந்தர்ப்ப சூழ்நிலைகள் குறிப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவையாவன :

(i) மேல் காற்று வளித்தாழியின் மேற்குப்புற இடமாற்றம் குளிர்காலத்தில் 90°கி கோட்டிலும் கோடையில் 75-80°கி கோட்டிலும் அமைந்துள்ளது.

(ii) மேல் மேலைக் காற்றும் கூர்நுனிச் சுற்றோட்டமும் இமயத்தின்தெற்கிலிருந்து வடக்கு நோக்கி இமயத்தின் வடக்காகப் பெயர்தல்.


(iii) சித்திரை வைகாசி மாதங்களில் 10°வ கோட்டிலிருந்து 23° கோடுவரை வ. ஒ. வ வடக்கே இடப்பெயர்தல்.

இம்மாற்றங்கள் விரைவாகச் செயற்பட்டு இந்தியாவிற் தெ. மே. பருவக் காற்று சடுதியாகப் பிறக்கும் நேரத்தில் நிகழுகின்றன என்பது காட்டப்பட்டது. அத்துடன் வடவரைக் கோளத்தில் வைகாசி இறுதி, ஆனி தொடக்கப் பகுதியில், பெருமளவிற் காணப்படும் மேல்வளிச் சுற்றோட்ட அமைப்பு குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் காட்டி நிற்கும் என்பதும் காட்டப்படுகின்றது. எனவே சைபீரியா வரை அதிவடக்காக நிகழும் வளிமண்டலவியற் தெ மே. பருவக் காற்றுடன் தொடர்பு கொண்டுள்ளன என்று கருதவும் இடமுண்டு. இந்தியப் பிரதேசத்தில் நிகழும் சீர்படுத்துந் தன்மைகளுக்கு சைபீரியப் பிரதேசத்தில் பெருவாரியாக நிகழும் சீர்படுத்துந் தன்மைகள் (readjestments) காரணமாக அமைந்தனவா அல்லது சைபீரிய சீர்படுத்துந்தன்மைகள் அவற்றின் விளைவாக அமைந்தனவா என்ற ஐயம் தொடர்ந்திருக்கின்றது. அன்றி இந்தியாவில் நிகழும் இடமாற்றம் சைபீரியப் பிரதேசத்தில் நிகழும் பெரும்படியான மாற்றங்களோடு இயைய வேண்டி ஏற்பட்டவையோ? பூமியின் முழு வளிமண்டல நிலைமைகளையும் கவனத்திற்கு எடுக்க வேண்டும் என்று கூறுதலும் நியாயமான ஒரு கருத்தாகும். முனைவுச் சுற்றுச் சுழிப்புச் சுற்றோட்டம் (ஒரு வழியில் உயர்-தாழ் நிலைச் சுற்றோட்ட ஒழுங்குகள் சம்பந்தப்பட்ட) கால நிலை வழுவமைதிகளுக்கு விளக்கம் தரக்கூடியதாய் அமைவதால் பின்னைய கருத்து தேவையுள்ள தொன்றாக அமையும்.[30]

எனவே வளிமண்டலப் பொதுச் சுற்றோட்டம் பற்றிய இப்புது விளக்கமானது முதல்முதல் 1735-ல் ஹால்லியினால் வெளியிடப்பட்ட முக்கலக் கருதுகோளிற்கு மாற்றாக, வளிமண்டலச் சுற்றோட்டம் பற்றிய புதிய கொள்கையை ஏற்றுக் கொண்டால்

30 Willet op cit.

தென்மேல் பருவக் காற்றுப் போன்ற காலநிலைத் தனித்துவங்கள் யாவும் முழு வளிமண்டலவியற் செயற்பாட்டுடன் தொடர்பு கொண்டன என்று கூறலாம்.




படம் 7

தென்மேற் பருவக்காற்றின் பிறப்பு பற்றி வெப்பக் கொள்கை விளக்க முடியாத சிலவிடைகளை, மேற்றரப்பட்ட சான்றுகளின் ஒளியில் புதிய விளக்கம் தருகிறது என்று தக்க நியாயத்துடன் கூறலாம். பருவக் காற்றின் சடுதியான தோற்றத் தன்மைக்கும், தார் பாலைவனத் தாழ் அமுக்கத்திற்கும் தொடர்பில்லை என்று கொள்ள முடியாது பருவக் காற்றின் சடுதியான பிறப்பிற்கு தார் தாழமுக்க மையம் துணைக்கருவியாக அமைகிறதே தவிர முதற் கருவியாக அமையவில்லை

இக்கருத்துக்கள் 1946-ம் ஆண்டின் வளிமண்டல நிகழ்ச்சிகளின் ஆய்வுகளினூற் கண்ட முடிவுகளை அடிப்படையாகக் கொண்டது. புதுவிளக்கம் ஏனைய ஆண்டுகளின் சான்றுகள் கொண்டு நிறுவப்பட வேண்டும். 1946-ல் தெ. மே. பருவக் காற்றின் சடுதியான பிறப்பின் முன்னும் பின்னுமாகக் காணப்பட்ட தொடர்ச்சியான சூழ்நிலைகள் புள்ளிவிபர கால இணைப்புகளோடு மட்டுமன்றிப் பௌதிக ஆய்வுகளோடும் இணைவதாக அமைந்தது. எனினும் தென்மேற்குப் பருவக்காற்றின் பிறப்பு பற்றித் தீர்வுகாணப்படாத பிரச்சினைகள் பல காணப்படுகின்றன. புதிய விளக்கத்தைத் தர முயலுகையில் முக்கியமான வளிமண்டலவியற் றனித்துவமான இப்பருவக் காற்றின் சடுதியான பிறப்பிற்கு, நிலைத்து நிற்கக்கூடிய திருப்திகரமான விளக்கம் தோன்றுவதற்கு மேலும் ஆய்வுகள் நிகழ வேண்டும் என்றுகூறி முடிக்கலாம்.

# ஈழ வரலாற்று மரபு *

## — பாகம் ஒன்று —

## தோற்றம்

(கார்த்திகேசு இந்திரபாலா)

ஆதிகாலத்திற் பரம்பரை பரம்பரையாகக் கேள்விச் செல்வமாய்ப் பேணப்பட்டு வளர்க்கப்பட்டு வந்த வரலாற்றுச் செய்தித்திரட்டு வரலாற்று மரபெனப்படும். இச் செவிவழிச் செய்திகள் எல்லா முன்னேற்றமடைந்த நாடுகளிலும் ஆதிகாலத்திற் பேணப்பட்டு வந்தன. ஆரம்பத்திற் கேள்விச் செல்வமாக விருந்த இம்மரபு காலப்போக்கில் எழுத்துமரபாக மாறி நூல் வடிவைப் பெறுவது வழக்கமாயிருந்தது. இந்த மரபு வரலாற்றுச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு பல கட்டுரைக் கதைகளை உள்ளடக்கி வளர்ந்த போதும் ஒரு நாட்டின் பழைய வரலாற்றைப் பற்றிய சில தகவல்களைப் பெறுவதற்கு இன்றியமையாத மூலாதாரமாக விளங்குகின்றது.

உலகத்தின் நாடுகளுள் ஒருசில நாடுகளில் மட்டுமே தொடர்பான வரலாற்று மரபு மிகப் பழைய காலந்தொட்டுப் பேணப்பட்டுவந்துள்ளது. இந்திய நாட்டிற் கூட இத்தகைய தொடர்பான மரபு எல்லாப் பகுதிகளிலும் பேணப்பட்டு வந்ததென்று கூறமுடியாது காஷ்மீர் போன்ற சில பகுதிகளை விட ஏனைய பகுதிகளின் தொடர் வரலாற்றை யறியத் திருப்திகரமான முறையில் வரலாற்று மரபு பேணப்பட்டு வளர்க்கப்படவில்லை. இந்த விதத்தில் ஈழநாடு பல வகையாலும் பெருமையடையக் கூடிய நிலையில் உள்ளது. ஆதிகாலந் தொட்டுப் பெருமளவிற்கு நம்பகமான வரலாற்று மரபு இங்கு பேணப்பட்டு வந்தது போல் இந்தியாவிற் பேணப்பட வில்லை யென்றே கூறவேண்டும். இவ் வரலாற்று மரபானது செவி வழிச் செய்தியாக ஈழத்தின் விகாரைகளில் ஆரம்பத்திற் பேணப்பட்டு இறுதியிலே தீபவங்ஸ, மஹா வங்ஸ, சூளவங்ஸ போன்ற நூல்களில் இடம் பெற்றது.

---

* இஃது ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை யன்று. வில்ஹெல்ம் கைகர் போன்ற மஹாவங்ஸ ஆராய்ச்சியாளருடைய முடிபுகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரையாகும்.

இதனுல், ஈழத்தின் பழைய வரலாற்றை மிகத் திருப்தி கரமான தொடர்பான முறையில் எழுதிக்கொள்ள நம்மால் முடிகின்றது.

ஈழத்தின் ஆதி வரலாற்றை யாராய்ந் தெழுதும் எந்த வரலாற்ருசிரியனுந் தீபவங்ஸ, ஸமந்தபாஸாதிகாவின் முன்னுரை, மஹாவங்ஸ, சூளவங்ஸ ஆகிய பாளி மூலாதார நூல்களை அடிப்படை யாதார நூல்களாகப் பயன்படுத்திக் கொள்கின்முன். இந்த நூல்களில் அடங்கியுள்ள செய்திகளின் உண்மை பொய்மை நிரூபிக்கவும், இந்நூல்களின் நம்பகமான தன்மையை நிலைப்படுத்தவும் அவற்றில் அடங்கியுள்ள வரலாற்று மரபு தோன்றி வளர்ந்த வகையினை அறிந்து கொள்ளுதல் அவசியம்.

தற்பொழுது நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைய ஈழவரலாற்று நூல்கள் பாளி மொழியிலுள்ள தீபவங்ஸ, ஸமந்தபாஸாதிகா (முன்னுரை), ஸீஹளவத்து, மஹாவங்ஸ ஆகிய நூல்களாகும். இந்நூல்கள் கி. பி. ஐந்தாம் ஆறும் நூற்முண்டுகளில் எழுதப்பட்டவை. கி. பி. நான்காந் நூற்முண்டின் ஆரம்பம் வரையப்பட்ட ஈழ வரலாற்றை இவை எடுத்துக் கூறுகின்றன. இப்பாளி நூல்களையும் (ஸீஹளவத்து நூலை விட) மஹாவங்ஸத்தின் உரை நூலாகிய மஹாவங்ஸ—டீகா அல்லது வங்ஸத்தபகாஸினி என்ற நூலையுந் நுணுகி யாராய்ந்து, ஓல்டென் பெர்க், வில்ஹெம் கைகர் போன்ற அறிஞர்கள் ஈழத்தின் வரலாற்று மரபு தோன்றி வளர்ந்த வரலாற்றினைத் திறம்பட அமைத்துக் கூறியுள்ளனர். இச் செயலில், மஹாவங்ஸத்தின் மூலாதாரங்களைக் குறிப்பிட்டு அவற்றிலிருந்து மேற் கோள்களைக் காட்டும் மஹாவங்ஸ—டீகா சிறப்பாக உதவியுள்ளது.

ஈழவரலாற்று மரபின் தோற்றம் இந்நாட்டிற்கு ஆரிய மக்கள் வந்து குடியேறிய பின் ஏற்பட்டது. கி. மு. ஐந்தாந் நூற்முண்டிலிருந்து ஈழத்து மக்களிடையே பல வரலாற்றுச் செய்திகள் செவிவழிச் செய்திகளாகவுங் கதைகளாகவும் பேணப்பட்டு வந்தாலும், கி. மு. மூன்ருந் நூற்முண்டு வரை ஓர் ஒழுங்கான வரலாற்று மரபு ஈழத்திற் ருேன்ற வில்லை எனலாம். கி. மு. மூன்ருந் நூற்முண்டின் நடுப்பகுதியில் மஹிந்த மகாதேரர் பௌத்த மதத்தூதராக இங்கு வந்ததுடன் ஒழுங்கான வரலாற்று மரபொன்று தோன்றி வளரத் தொடங்கியது. இக் காலத்திலே தோன்றிய மரபே பிற்பட்ட வரலாற்று மரபின் கருவாக அமைந்தது. இம் மரபு வட இந்தியாவில் மகத இராச்சியத்தில் வளர்க்கப்பட்டு மஹிந்த மகாதேரருடைய

தூதின் போது ஈழத்திற்குக் கொண்டுவரப்பட்டது. வட இந்தியாவிற் பௌத்த மத போதனைகள் பேணப்பட்ட போது, அவற்றுடன் புத்தருடைய வரலாற்றுச் செய்திகளும் அவருக்குப் பின் மகாதேரர்க ளாக விருந்த 'ஆச்சாரிய பரம்பரை'யின் செய்திகளும் பாதுகாக்கப்பட்டு வந்தன. இவ்வரலாற்றிற்குக் கால அடிப்படையைக் கொடுக்குந் நோக்கத்துடன் புத்தர் காலத்திலும் ஒவ்வொரு ஆச்சாரியர் காலத்திலும் அரசோச்சிய மகத மன்னர்களுடைய வரலாறுஞ் சமய வரலாற்றுடன் தொடர்பு படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்பட்டது. இச்சமய, அரசியல் வரலாற்று மரபே மஹிந்த மகாதேரர் காலத்தில் ஈழத்திற்குங் கொண்டு வரப்பட்டது. ஈழத்திற் பரப்பப்பட்ட பௌத்தம் புத்தராற் போதிக்கப்பட்ட தூய மதம் என்பதை நிரூபிப்பதற்கும் பொதுவாக இம்மரபு வட இந்தியாவில் நிலவிய காரணத்தினாலும் புத்தர்காலந் தொட்டு ஆச்சாரியர்கள் மூலம் பௌத்தம் பேணப்பட்டுவந்த வரலாற்றை இந் நாட்டிலும் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது ஆகவே, ஈழத்தில் ஒழுங்கான முறையில் முதன் முறையாகப் பௌத்தம் பரப்பப்பட்டு, பௌத்த சங்கந் தாபிக்கப்பட்டு, அநுராதபுரத்தில் மஹாவிஹார அமைக்கப் பட்டபோது மகதத்தில் மஹிந்த மகாதேரர் காலம்வரை பாதுகாக்கப்பட்ட மரபு அப்படியே முதலில் மஹாவிஹாரையிலும் பின்னர் பிற விகாரைகளிலும் பாதுகாக்கப்படலாயிற்று. இதனுல், புத்தர் காலந்தொட்டு மஹிந்த மகாதேரர் காலம் வரைப்பட்ட பௌத்த மத வரலாறுடன் மகத நாட்டு வரலாறு ஈழ வரலாற்று மரபின் கருவாக அமைந்தது. இது கி. மு. 247-ல் ஆகும்.

இவ்வாறு அநுராதபுரத்து முக்கிய விகாரைகளில், சிறப்பாக மஹாவிஹாரையில், பாதுகாக்கப்படத் தொடங்கிய வரலாற்று மரபு ஈழத்திற் புதியதொரு வழியில் வளரத் தொடங்கியது. பௌத்த மத வரலாற்றைப் பேணி வைக்கும் நோக்கத்தை முக்கியமாகக் கொண்டிருந்த ஈழத்துப் பௌத்த சங்கத்தார் ஈழத்தில் மஹிந்த மகாதேரராற் பௌத்தம் பரப்பப்பட்ட வரலாற்றை மிக விரிவான செய்திகளுடன் பாதுகாத்தனர். இவ் வரலாற்றுப் பிரிவில் மஹிந்த மகாதேரர் வரவு, தேவானம்பிய திஸ்ஸ மன்னனுஞ் சபையோரும் பௌத்தத்தைத் தழுவியமை, வெள்ளரசங்கிளை கொண்டுவரப்பட்டமை, மஹாவிஹார தாபிக்கப்பட்டமை, பௌத்த சங்கம் ஆரம்பிக்கப்பட்டமை, மஹிந்த மகாதேரர் ஸங்கமித்த தேரி ஆகியோர் மரணம் ஆகிய தகவல்கள் விரிவாக அடங்கின. அத்துடன் ஈழத்திற் பௌத்த மத வரலாற்

றைக் கூறுமிடத்து, மகத நாட்டு மரபை யொட்டி, மன்னர்கள் வரலாற்றையுங் கூறும் மரபு ஆரம்பித்தது. மஹிந்த மகாதேரர் வரலாற்ருேடு தேவானம்பியதிஸ்ஸ மன்னனுடைய வரலாறும் அவன் பௌத்தத்திற் காற்றிய தொண்டும் விரிவான தகவல் களுடன் பேணப்பட்டன. இவை யனைத்தும், மகதநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு ஈழவரலாற்று மரபின் கருவாக அமைந்த பௌத்த மத வரலாற்ருேடு சேர்க்கப்பட்டன இதனுல் இச் சேர்க்கை ஈழவரலாற்று மரபின் வளர்ச்சியில் முதலாவது கட்டத்தைக் கணித்து நிற்கின்றது.

மஹிந்த மகாதேரர் ஈழத்திற் பௌத்தத்தைப் பரப்பிய பொழுது பௌத்தமத நூல்களாகிய திரிபிடக நூல்களையுங் (வினய பிடக. ஸூத்த பிடக, அபிதம்ம பிடக) கொண்டு வந்து அவை இங்கு பாதுகாக்கப் படுவதற்கு ஆவன செய்தார். இப் பௌத்த நூல்கள் அப்பொழுது எழுத்து வடிவில் இருக்கவில்லை. பௌத்த சங்கத்தார் அவற்றை மனனஞ் செய்து பேண வேண்டியிருந்தது. மேலும், அவை பாளி மொழியில் இருந்தன. ஆகவே, அவற்றுக்கு விளக்கமாக உரையியற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது, இத்திரிபிடக நூல்களுக்கும் முன்னுரை யாகவே முற்கூறப்பட்ட வரலாற்று மரபு அமைந்தது. இவை யெல்லாம் ஆரம்பத்தில் எழுத்து வடிவிலன்றிக் கேள்விச் செல்வமாக மட்டுமே விளங்கின. எழுத்திலில்லாத காரணத்தி னுல், இலகுவில், மனப்பாடஞ் செய்து வைத்திருப்பதற்காக பல தகவல்கள் செய்யுள் வடிவில் அமைக்கப்பட்டன. சில இடங்களிற் பொருளை விரிவாக விளக்கிக் கூறுது, சுருக்கமாக முக்கிய சம்பவங்களை அல்லது பெயர்களை மட்டுமே கொண்ட "நினைவுச் செய்யுட்கள்" மட்டுமே இம் முன்னுரையிற் காணப் பட்டன.* இம் முன்னுரையில் ஆங்காங்கு காணப்பட்ட செய் யுட்கள் செம்மையற்ற பாளிமொழியிலமைந்திருந்தன. உரை நடைப்பகுதி ஆதிச் சிங்கள மொழியிற் காணப்பட்டது இத் தகைய பண்புகளைக் கொண்டு பௌத்த திரிபிடகங்களுக்கும் உரை நூல்களுக்கும் முன்னுரையாக ஆரம்பித்த வரலாற்று மரபு காலப் போக்கில் மேலும் வளரத் தொடங்கியது. இவ்வளர்ச்சி மஹா விஹாரையிலும் பிற முக்கிய விகாரைகளிலுந் தனிப்பட்ட முறை யில் ஏற்பட்டது இவ் வரலாற்று. மரபு அடங்கிய உரைநூல் பல பெயகளால் வழங்கப்பட்டது, பழைய உரைநூல் என்ற பொரு ளைக்கொண்ட "பொராண அட்டகதா" என்பது இந்நூல் பெற்

* இந்நினைவுச் செய்யுட்களை Mnemonics அல்லது Memory Veraes எனக் கைகர் குறிப்பிட்டுள்ளார். இவைபற்றிப் பின்னர் விரிவாகக் கூறலாம்.

றிருந்த பெயர்களிலொன்ருகும். ''ஸீஹள—அட்டகதா'' அதன் இன்னெரு பெயராகும். இவ் வட்டகதாவின் (உரைநூலின்) ஒரு பாகமாகவே வரலாற்று மரபுப் பகுதி காணப்பட்டது. இப்பாகம் ''அட்டகதா மகாவங்ஸ'', ''ஸீஹள—அட்டகதா—மஹாவங்ஸ'', ''முன்னேர்எழுதிய மஹாவங்ஸ'' (பொராணேஹி கதோபே ஸோ மஹாவங்ஸோ) என்ற பல பெயர்களால் வழங்கப்பட்டது.

## வளர்ச்சி

காலப் போக்கில் வரலாற்று மரபு மேலும் வளர்ச்சியடைந்தது. மஹிந்த மகாதேரர் காலத்திற்குப் பிற்பட்ட மத வரலாறுந் தேவானப்பிய திஸ்ஸ மன்னனுக்குப் பிற்பட்ட அரசர் வரலாறும் ஒழுங்காகச் சேர்க்கப்பட்டது. மன்னர்கள் ஒவ்வொருவருடைய ஆட்சிக் காலச் சம்பவங்கள், விகாரைகளுக்கு அவர்கள் அளித்த தானங்கள் போன்ற விஷயங்கள் சிறப்பிடம் பெற்றன. இதனுல் அரசியல் வரலாற்றுப் பகுதி தனிப்பகுதியாக வளரத்தொடங்கியது. இவ்வாருக வரலாற்று மரபு வளர்ந்து செல்ல அதனை ஒரு நூலின் முன்னுரையாக மட்டும் வைத்திருக்க முடியாது போயிற்று. இம் முக்கிய காரணத்திஞல் இவ் வரலாற்று முன்னுரை ஒரு தனி நூலாக உருமாறியது. உரை நூலிலிருந்து தனி நூலாகப் பிரிந்து, ஒரு வரலாற்று நூலாக வளரத்தொடங்கியது. இம் மாற்றங் கிறிஸ்துவிற்குச் சிறிது முற்பட்ட காலத்தில் ஏற்பட்டிருக்கலாம். இத்தகைய முக்கிய மாற்றம் ஏற்பட்டமைக்கு முன்னுரையின் பொருளடக்கம் பெருத்தமை மட்டுமன்றிப் பிற காரணங்களும் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. வட்டகாமணி அபய மன்னன் காலத்திலே திரிபிடகங்களும் உரை நூல்களும் எழுத்து வடிவைப் பெற்ற போது வரலாற்று முன்னுரைப் பகுதி தனிப்பட்ட நூலாக ஒழுங்கு படுத்தப்பட்டு எழுதப்பட்டிருக்கலாம் என்பது ஒரு கருத்தாகும். கி. மு. முதலாந் நூற்ருண்டின் பிற்பாதியில் (குறிப்பாகக் கூறின் இறுதிக் காலில்) வட்டகாமணி அரசோச்சிய போது பெரும் பஞ்சமொன்றேற்பட்டுப் பௌத்த சங்கத்தார் பெருந் தொகையாக இறந்தொழிய அல்லது நாட்டை விட்டு வெளியேற, பௌத்த நூல்களைப் பேணுந் நோக்குடன் அவற்றை அலுவிஹார என்னுமிடத்திற் சில பௌத்த தேரர்கள் எழுதி வைத்தனர் என்பது மஹாவங்ஸத்தால் நாம் அறிந்துள்ள விஷயமாகும். அவ்வாறு எழுத்து வடிவைப் பெற்ற போது, வரலாற்று முன்னுரை ஒழுங்கு படுத்தப்பட்டு விரிவான தகவல்களுடன் ஒரு தனி நூலாக எழுதிவைக்கப் பட்டிருக்கலாம், அக் காலந் தொட்டு அது தனிநூலாக வளர்ச்சி பெற்றிருக்கலாம்

இத்னை விடக் கிறித்தாப்தத்தின் ஆரம்ப காலமளவில் ஈழத்தில் உருப் பெற்ற முக்கியமான கருத்தொன்றும் முற்கூறப்பட்ட வரலாற்று முன்னுரைஃஒரு தனி நூலாக் எழுச்சி பெறுவதற்குக் காரணியாக விருந்திருக்கலாம் எனவுங் கருதப்படுகின்றது. இக் கருத்து ஈழவரலாற்றின் முக்கியத்துவம் பற்றியதாகும். இதனைப் பொதுவாகத் தர்மதுவீப (தர்மதீவு, தம்மதீப) க் கருத்து என அழைப்பர். துட்டகாமணி—எல்லாளன் போர்களும் அதன்பின் ஏற்பட்ட அரசியல் ஒற்றுமையும் பௌத்தமத வரலாற்றிலே ஈழநாடு பெறவிருந்த முக்கியத்துவத்தைப் பற்றியதோர் உணர்ச்சியைப் பௌத்த சங்கத்தாரிடையே எழுப்பியிருக்கலாம். இதன்பின், இந்து மத வெழுச்சியினுல் இந்தியாவிற் பௌத்தம் வலிகுன்றத் தொடங்கியமையும் இவ்வுணர்ச்சியை மேலும் வலுப்படுத்தியிருக்கலாம். காரணம் எதுவாஞலும் தூய்மையான பௌத்தமதம் ஈழநாட்டிலே தான் நிலைக்கும் என்ற ஒரு கருத்து கிறித்தாப்தத்தின் ஆரம்ப காலமளவில் உருவாகி, ஈழநாடு தர்மதுவீபம் என அழைக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தது. ஈழத்தைத் தர்மதுவீபம் எனப் போற்றிய பௌத்த சங்கத்தார் அதன் வரலாற்று முக்கியத்துவத்தைக் காட்டும் நோக்குடன் ஈழத்தின் வரலாற்றைத் தனிநூலாக எழுதிப் போற்றத் தொடங்கினர். இவ் வரலாறு விழாக் காலங்களிற் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டு, அவர்களிடையே மத உணர்ச்சியை வளர்ப்பதற்குப் பயன்படுத்தப் பட்டது. (வொஹாரிகதிஸ்ஸ, தாதுஸேன போன்றோர் ஆட்சிக் காலங்களில் இத்தகைய வரலாற்று நூல்கள் விழாவின்போது வாசிக்கப்பட்டமைக்கு மகாவங்ஸத்திற் சான்றுகளுள.) இது போன்ற காரணங்களினுல் உரைநூல்களுக்கு முன்னுரையாக ஆரம்பித்த வரலாற்று மரபு ஒரு தனி நூலில் இடம் பெற்று வளரத் தொடங்கியது. இது ஏறக்குறையக் கிறித்தாப்தத்தின் ஆரம்பத்தில் ஏற்பட்டதாகும். இம் மாற்றம் வரலாற்று மரபின் வளர்ச்சியில் இன்னெரு முக்கிய கட்டத்தைக் கணித்து நிற்கின்றது.

## ஸீஹள—அட்டகதா—மகாவங்ஸ

இத் தனிநூலாகிய ஸீஹள — அட்டகதா — மஹாவங்ஸ அநுராதபுரத்து மகாவிகாரையிலும், நாட்டின் பிற முக்கிய விகாரைகளிலும் பாதுகாக்கப்பட்டு வந்தது. காலப்போக்கில் தனித்தனி ஏற்பட்ட சேர்க்கைகளினுலும் பிற காரணங்களினுலும் இந்நூல் இடத்துக்கிடம் சில வேறுபாடுகளைக் கொண்டு காணப் பட்டது. எனினும், பொதுவாக உள்ளடக்கத்தையும் அடங்கன்

முறையையும் பொறுத்த மட்டில் வேறுபாடுகள் இருக்கவில்லை. தனிநூலாக எழுச்சி பெற்ற காரணத்தினுற் பல புதுப்பகுதிகள் இதில் இடம்பெற்றன. இவற்றுள் முக்கியமானது மஹிந்த மகாதேரர் வரவிற்கு முற்பட்ட காலத்து ஈழவரலாற்றுப் பகுதி யாகும். இவ்வரலாறு பற்றிய தகவல்கள் பல செவிவழி மரபாகப் பொதுமக்களாற் பேணப்பட்டு வந்தன. இவை பெரும்பாலும் கட்டுக்கதைகள் வடிவைப் பெற்றிருந்தன. கி. பி. முதலாந் நூற்றுண்டளவில் எதுவித ஒழுங்குமின்றி இக் கதைகள் காணப்பட்டன. அக்காலத்தில், அல்லது சிறிது பிற்பட்ட காலத்தில் இவை விகாரைகளிற் பேணப்பட்ட வரலாற்று மரபில் இடம் பெற்றுச் ஸீஹள—அட்டகதா—மஹா வங்ஸத்திற் சேர்க்கப்பட்டன. இக் கதைகளுள் முக்கியமானவை ஆரியர் குடியேற்றம் பற்றிய கதைகளாகிய விஜய, பண்டு காபய மன்னர் பற்றிய கதைகளும், அதற்கு முற்பட்ட புத்தர் வருகை பற்றிய கதைகளுமாம். இப்புதிய பகுதி ஈழவரலாற்றின் ஆரம்பப் பகுதியாக அமைந்தது. இப்பகுதியில், மேலே கூறியது போல, மூன்று முக்கிய பிரிவுகளைக் காணலாம். அவையாவன : புத்தருடைய மூன்று தரிசனங்கள் அல்லது விஜயங்கள் பற்றிக் கூறும் பிரிவு, மன்னனுடைய வரலாற்றுப் பிரிவு, விஜய பண்டு காபய மன்னன் வரலாற்றுப் பிரிவு.

முதலாவது பிரிவில் ஈழத்திற்கு ஆரியர் வருமுன் இங்கு வாழ்ந்த இயக்கர், நாகர் ஆகிய பழங்குடிகள் பற்றியும். இயக்க நாக இராச்சியங்களுக்குப் புத்தபிரான் மும்முறை வந்தமை பற்றியுங் கூறப்பட்டிருந்தது. இவ்வரலாறு முற்கூறப் பட்ட தர்மதுவீபக் கருத்துடன் நெருங்கிய தொடர்புடைய தெனக் கொள்ளப்படுகின்றது. பௌத்த மதம் பரப்பப்பட விருந்த ஈழநாடானது புத்தராலேயே புனிதமாக்கப்பட்ட தென்றும், பௌத்தத்தைத் தழுவிப் பாதுகாக்க நிருபிக்கப் பட்டவர்களாகிய சிங்கள மக்கள் இங்கு குடியேறுவதற்காகப் புத்தரே இங்கு வந்து பழங்குடிகளுட் பலரை அகற்றி வழி வகுத்தார் என்றும் காட்டுவதற்கு இக்கதைகள் பெரிதும் உதவின. இவை தர்மதுவீபக் கருத்திற்கு ஏற்றதாகக் காணப்பட் டன. பல காலமாக இத்தகைய கதைகள் தோன்றி வளர்ந்து விகாரைகளிலெழுதப்பட்ட வரலாற்று நூல்களில் இடம் பெற் றிருக்கலாம். நோக்கம் எதுவாக இருந்தாலும் இக்கதைகள் கிறித்தாப்தத்தின் ஆரம்பகாலமளவிலே ஸீஹள—அட்டகதா— மகாவங்ஸத்தில் இடம்பெற்றன.

இரண்டாவது பிரிவில் ஈழத்தில் ஆரியர் குடியேற்றம் முதன் முதலாக ஏற்பட்ட வரலாறு விஜயகுமாரன் கதைவடிவிற் கூறப்பட்டது. ஈழத்திலேற்பட்ட ஆரியர் குடியேற்றம் பற்றிய கதை ஈழத்து மக்களிடையேயும் வட இந்தியரிடையேயும் பல வகைப்பட்ட வேறுபாடுகளுடன் பலகாலமாக நிலவி வந்த தொன்றாகும். இக் கதை வடஇந்தியாவில் ஜாதகக் கதைகள் போன்ற நூல்களிலும் இடம் பெற்றது. ஈழத்திலும் இக்கதை பல விதமாகக் கூறப்பட்டு வந்தது. விஜயகுமாரனைத் தலைவனாகக் கொண்ட இக் கதைகளுள் ஒன்று ஸீஹள—அட்டகதா—மஹாவங்ஸத்திற் சேர்க்கப்பட்டது. இக்கதைகளுடன் ஈழத்தின் தொடர்பான வரலாறு ஆரம்பித்தது.

மூன்றாவது பிரிவில், விஜய மன்னனுக்குப் பின் தேவானம் பிய திஸ்ஸ மன்னன் வரைப்பட்ட மன்னர்களுடைய வரலாறு கூறப்பட்டது. இவ் வரலாற்றுப் பகுதியிற் சிறப்பாகப் பண்டு காபய மன்னன் வரலாறு பேரிடம் பெற்றது. அத்துடன் இரண்டாவது முறையாக ஏற்பட்ட ஆரியர் குடியேற்றம் பற்றிய கதைகளும் இடம்பெற்றன. மேற்கூறப்பட்ட மூன்று பிரிவுகளுள்ளும் மிக நம்பகமான வரலாற்றுத் தகவல்களைத் தந்து தவும் பிரிவு இம் மூன்றாவது பிரிவாகும்.

இவற்றைவிட, வம்சவரலாற்றுப் பிரிவு தனிப்பிரிவாக வளர்ந்து சென்றது. விகாரைகளிற் பேணப்பட்டு வந்த பல வகைப்பட்ட பகுதிகளிலிருந்து அரசர்கள் பற்றிய தகவல் கள் பெறபபட்டு வம்ச வரலாறு தொடர்பாக எழுதப்பட்டது. இவ்வாறாக, ஈழத்தின் வரலாற்றை மிகப்பழைய காலந் தொட்டுக் கூறுந் நூலாகவும் பௌத்த மத வரலாற்றைக் கூறுந் நூலாகவும் ஸீஹள—அட்டகதா—மஹாவங்ஸ காணப்பட்டது. சிற்சில பாளிச் செய்யுட்களை விட இந்நூலின் ஏனைய பகுதிகள் ஆதிச்சிங்கள மொழியிலே தெளிவற்ற நடையில் எழுதப்பட்டிருந்தன. இந்நூலின் பிரதிகள் பற்பல வேறு பாடுகளுடன் பல விகாரைகளிலே காணப்பட்டன. இந்நூலில் விகாரைகளில் வளர்ந்து வந்த சமய மரபும் பொதுமக்களிடையே நிலவிய நாடோடி மரபுங் கலந்து காணப்பட்டன. முன்னையது கூடிய அளவிலும் பின்னையது குறைந்த அளவிலுமே கலந்து இருந்தன. இது ஒருவரால் எழுதப்பட்ட நூலாகவன்றிப் பலகாலமாக பலரால் எழுதப்பட்ட பகுதிகளைக் கொண்ட நூலாக இருந்தது. இந்நூல் கி. பி. பதினோராம் பன்னிரண்டாந் நூற்றாண்டுகள் வரையாவது இருந்து பின்னர் அழிந்திருக்க வேண்டுமெனக் கருதப்படுகின்றது

பேபி BABY BRAND மார்க்

# ஸ்பெஷல் பானங்களேயே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

— தயாரிப்பாளர் —

# சுப்பிரமணியன் சோடாக் கம்பெனி

வல்வெட்டித்துறை

போன் : 97 தந்தி : SODA

கிளை :

# ருஜு ஸ்ரோர்ஸ்

2/B, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்,
போன் : 372 தந்தி : "ESVES"

அழகுக்கு அழகு செய்யும்
'ரெடிமேட்' உடைகள்

நவநாகரிக ஆடவர்
அரிவையர்களுக்கான ஆடைகள்

மலிவான விலையில் செய்து கொடுக்கப்படும்
சிறந்த சேவை குறைந்த சலார்

கிடைக்குமிடம் :

# டிசைன் றெடிமேட் ஸ்ரோர்ஸ்

## Design Readymade Stores

**B 27, GRAND BAZAAR — JAFFNA**

# கலைவாணி

ஆரம்ப பள்ளிமுதல்
பல்கலைக் கழகம் வரை பாவனைக்குரிய

* தமிழ் * ஆங்கில
* சிங்கள * சமஸ்கிருதப்

புத்தகங்களும் மற்றும் சகல வாசகசாலைப் புத்தகங்களும் ஒருங்கே கிடைக்கப்பெறும்.

## கலைவாணி புத்தக நிலையம்

பாடநூற் பிரசுரிப்பாளர்

130, திரிகோணமலை வீதி,
கண்டி.

தொலைபேசி; 7199. தந்தி: "கலைவாணி"

290, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்
போன்: 221

10, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்
போன்: 221

ஒரே கடையில்
உங்களுக்கு வேண்டிய
அனைத்தையும்
வாங்குவதற்கு
உகந்த இடம்

சாய்ப்புச் சாமான்கள்
கால் அணிகள்
D. I. & பாட்டா
அழகு சாதனங்கள்
பாடசாலை உபகரணங்கள்
ரெடிமேட் சூட்கள்

இன்னும் தேவைப்படும் எல்லா சாமான்களுக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்

## சாந்தி ஸ்ரோர்ஸ்

78, கொழும்பு ரோட், பேராதனை.

❋ குறைந்த சலார்
❋ சிறந்த வேலைகள்
❋ நீடித்த பாவனை
இத்தனைக்கும் மக்கள் விரும்புவது
"ராஜாஸ்"
மட்டக்களப்பிலே தனிப்பெருமை பெற்று விளங்கும்
ராஜா ஸ்ருடியோவுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்.
ராஜா ஸ்ருடியோ
மெயின் வீதி, — மட்டக்களப்பு.

---

நாவலா ? சிறுகதையா ?
அறிவு நூல்களா ?
பாடசாலைப் புத்தகங்களா ?
உபகரணங்களா ?
அச்சுக்கூடத் தேவைகளா ?
எது வேண்டுமேனும்
உடனே விஜயம் செய்க
யுனைற்றற் ஸ்ரோர்ஸ்
பருத்தித்துறை.

# *Sarees.....?*

*For All Occasions!!*

**We have a large range for you to select from !**

**A visit to our shop will surely be Worth while.**

## SP. PERIANNA PILLAI & Co.

**108, Second Cross Street. COLOMBO—11,**

Phone : 5738 Grams : 'SUBAPERI'

---

**THE MOST IDEAL PLACE IN THE HEART OF KANDY FOR LADIES & GENTS REQUIREMENTS**

**TEXTILES**

*In Varieties of*

PURE KASHMIER, MANIPURIE, DACCA AND VOIL SAREES, SUITINGS, SHIRTINGS, GEORGETTE, SILKS, GLAZED COTTON, TISSUES. FABRICS ETC.

**T'grams : "ECONOMIC" Remember T'phone. 7074**

## THE ECONOMICAL STORES

**No. 8, Yatinuwara Vidiya—KANDY.**

**FANCY GOODS**

WALL CLOCKS, ALARM CLOCKS, WRIST WATCHES WRIST BANDS, PARKER PENS, HAIR WIGS, PRESENTATION ARTICLES ETC

* தரத்தில் உயர்ந்தது
* சோர்வைக் களைவது
* சுறுசுறுப்பை ஊட்டுவது
* செயற்படவைப்பது

நமது தேசிய பானம்

# 'பிக்னிக்' பனங் கள்ளே

எங்கும் கிடைக்கும்

தலைமைக் காரியாலயம் :

குடாநாட்டுக் கைத்தொழில் தாபனம்

மந்திகை—பருத்தித்துறை

# இப்பொழுது
# காண்பிக்கப்படுகிறது !

கிங்ஸ்லி — பிளாஸா
(கொழும்பு) (வெள்வத்தை)

வெலிங்டன் — விஜயா
(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)

மற்றும் 5 திரைகளில்


நாடும் ஏடும் போற்றும் சிறந்த காவியம் !
எண்ணற்ற ரசிகர்களின் இதயங்களை
கவர்ந்த இன்பத்திரை விருந்து !!

பி. எஸ். வி. பிக்சர்ஸ்

# ஆலயமணி

நடிகர்கள் :

- சிவாஜி கணேசன்
- [redacted]
- S. S. ராஜேந்திரன்
- R. விஜயகுமாரி
- M. R. ராதா
- P. S. வீரப்பா
- M. V. ராஜம்மா
- V. நாகையா



சங்கீதம்

விஸ்வநாதன்
ராமமூர்த்தி

டைரக்ஷன் :

கே. சங்கர்

இச்சஞ்சிகை, பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வெ. நடராசா அவர்களால், யாழ்ப்பாணம் 32, கண்டி வீதியிலுள்ள ஆசீர்வாதம் அச்சகத்தில் அச்சேற்றுவிக்கப்பட்டது.